உதயன்
UTHAYAN - A Lively National Tamil Daily
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30



மழைக்கான சாத்தியம்உண்டு.
27.°C 26.°C



# இன்று யாழ். வருகிறார் கமரூன்

யாழ்ப்பாணம், நவ.15
பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார். இவரது வருகைக்காக யாழ். மாவட்டத்தில் பொலிஸ் பாதுகாப்பு பன் மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.
பிரிட்டன் பிரதமர் ஒருவர் யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொள்வது இதுவே முதல் தடவையாகும்.
கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் பங்கெடுப்பதற்காக பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் நேற்று வியாழக்கிழமை இரவு கொழும்பை வந்தடைந்தார். இந்தியாவிலிருந்து விசேட விமானம் மூலம் இலங்கைக்கு அவர் வருகை தந்தார்.
கொழும்பில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்கும் கமரூன், இன்று நண்பகல் கொழும்பிலிருந்து இரண்டு 'அன்ரனோவ்' ரக

21



# மன்மோகன் சிங்கின் முடிவை மதிக்கிறேன்

### இந்தியாவில் கூறினார் கமரூன்

புதுடில்லி, நவ.15
பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பது தொடர்பில் இந்தியப் பிரதமர் எடுத்துள்ள முடிவை நான் மதிக்கிறேன் என்று பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் இந்தியாவில் வைத்து நேற்று தெரிவித்தார்.
இந்தியாவுக்கான ஒரு நாள் பயணத்தை மேற்கொண்டு நேற்றுக்காலை அங்கு சென்ற பிரிட்டன் பிரதமர், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துக் கலந்துரையாடி

21

# சொந்த வாழ்விடங்களை மீட்காமல் ஓயமாட்டோம்

## உணவுத் தவிர்ப்பில் ஈடுபடும் வலி. வடக்கு மக்கள் சபதம்

யாழ்ப்பாணம் நவம்பர் 15
"எங்கள் சொந்த நிலங்களை மீட்கும் வரையில் போராட்டம் ஓயாது. எத்தகைய அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டாலும் எங்கள் போராட்டம் தொடரும்.
வலி. வடக்கு மக்களின் வாழ்வுரிமைப் போராட்டத்தின் இன்றைய இறுதி நாளில் அனைவரும் அணி திரள்வோம்"
இவ்வாறு அறை கூவல் விடுத்தார் வலி. வடக்கு மீள் குடியேற்றக் குழுவின் தலைவர் அ. குணபாலசிங்கம்.
வலி. வடக்கில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள 24 கிராம சேவையாளர் பிரிவுகளையும் விடு



விக்குமாறு கோரி வலி. வடக்கு மக்கள் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் தொடர்ச்சியாக உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் முன்பாக இடம்பெறும் இந்தப் போராட்டத்தில் பெரும் எண்ணிக்கையான மக்கள் எழுச்சியுடன் பங்கெடுத்து வருகின்றனர். இந்தப் போராட்டத்தின் இறுதிநாள் இன்றாகும்.
இந்த நிலையில் இன்றைய போராட்டத்துக்கு மக்களை அணிதிரளுமாறு வலி. வடக்கு மீள் குடியேற்றக் குழுவின் தலைவர் அ. குண

21

## பொதுநலவாயப் பிரதிநிதிகளின் வலி. வடக்கு பயணம் நிறுத்தம்



யாழ்ப்பாணம், நவ.15
யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்த பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகள் குழு நேற்று மாலை வலி. வடக்குப் பகுதிக்குச் செல்ல திட்டமிட்டிருந்த போதும் இறுதி நேரத்தில் அது நிறுத்தப்பட்டு அவர்கள் கொழும்புக்குத் திரும்பியுள்ளனர்.
பொதுநலவாய மாநாட்டின் சிவில் சமூக அமர்வில் பங்கேற்க வந்த 50 பிரதிநிதிகள், இரு நாள் பயணமாக நேற்று முன்தினம் வட பகுதிக்கு வருகை தந்தனர்.
நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணத்தை வந்தடைந்த அவர்கள் நேற்றுக் காலை நயினாதீவுக்குச் சென்றனர். அதன் பின்னர் யாழ். மாவட்ட செயலகத்துக்கு வருகை தந்து யாழ். அரச

21

## வலி.வடக்கு சென்ற பஸ்கள் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ.15
வலி. வடக்கு மக்களின் வாழ்வுரிமை போராட்டத்துக்கு மக்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்ட பஸ்களின் கண்ணாடிகளை நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இனந்தெரியாதோர் அடித்து நொருக்கியுள்ளனர்.
வலி. வடக்கு மக்கள் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் தமது வாழ்வுரிமையை

21



# கமரூனிடம் கேள்வி கேட்க நானும் காத்திருக்கின்றேன்

### ஜனாதிபதி மஹிந்த கூறுகிறார்

கொழும்பு, நவ. 15
பிரிட்டன் பிரதமரிடம் நானும் சில கேள்விகளைக் கேட்க எதிர்பார்த்திருக்கின்றேன் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்றுக் காலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கேள்வியெழுப்பப் போவதாக பிரிட்

21



# சர்வதேசத் தலைவர்களுடன் கூட்டமைப்பு நேற்றுச் சந்திப்பு

கொழும்பு நவ.15
பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க வந்துள்ள சர்வதேசத் தலைவர்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் நேற்று வியாழக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.
இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலர் சுஜாதா

21

# பிரிட்டன் தமிழரின் வாக்குகளை பெறுவதற்கே கமரூன் முயற்சி

### அமைச்சர் கெஹலியவின் கண்டுபிடிப்பு இது

கொழும்பு, நவ.15
பிரிட்டனில் வாழும் தமிழ்ச் சமூகத்தின் வாக்குகளைப் பெறுவதற்காகவே கமரூன் போர்க்குற்றங்கள் தொடர்பில் கேள்வி எழுப்புகிறார் என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல பி.பி.சி. செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.
அதில் அவர் மேலும்

21

## மக்ரேக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு நவ.15
அனுராதபுரத்திலிருந்து கொழும்புக்குச் சென்றமைக்கான வாகனக் கட்டணத்தைக் கெலும் மக்ரே வழங்கவில்லை எனத் தெரிவித்து

21

# ஜனநாயகத்தின் குரலை அடக்கி ஒடுக்கும் செயல்

### யாழ். பல்கலை மூடப்பட்டமைக்கு ஆசிரியர் சங்கம் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், நவ.15
யாழ். பல்கலைக் கழகம் மூடப்பட்டிருக்கின்றமை ஜனநாயகத்தின் குரலை அடக்கி ஒடுக்கும் செயல். தமிழர்களின் குரலை அடக்கும் செயல் என்று தெரிவித்துள்ள யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், மாணவர் ஒன்றியத்தின் கோரிக்கையை வரவேற்பதாகவும் பல்கலைக்கழக

21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிட்ட பணியை முடித்தே திரும்புவேன்

## கெலும் மக்ரே சூளுரை

யாழ்ப்பாணம், நவ.15

எந்த அழுத்தங்கள் வந்தாலும் திட்டமிட்ட பணியை முடிக்காமல் இலங்கையை விட்டுச் செல்லப் போவதில்லை என்று சனல் -4 ஊடகவியலாளரான கெலும் மக்ரே தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வட பகுதி நிலைமையை பார்வையிட நாம் கிளிநொச்சி நோக்கிப் பயணம் மேற்கொண்டோம். அங்குள்ள நிலைமையை எமது கண்ணால் பார்க்க வேண்டும் என்பதற்கு நாம் முன்னுரிமை கொடுத்தோம்.

பொதுநலவாய மாநாட்டுக்கு வரும் எந்தவொரு ஊடகவியலாளரும் நாட்டின் எந்தப் பகுதிக்கும் சென்று செய்தி சேகரிக்கலாம் என்று இலங்கை ஜனாதிபதியும் அரசும் உறுதியளித்திருந்தனர். ஆனால் நிலைமை அவ்வாறு இருக்கவில்லை.

நாம் ரயிலில் இருப்பதை அனுராதபுரம் போராட்டக்காரர்கள் அறிந்திருந்தனர். இது நன்கு திட்டமிடப்பட்ட ஆர்ப்பாட்டம்.

இலங்கைக்கு நாம் வரும் போது யாருக்கும் எமது வருகை நேரம் குறித்துத் தெரிவிக்கவில்லை. ஆனால் நாம் விமான நிலையத்துக்கு வெளியே வந்தபோது எமக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

நாம் வடக்குச் செல்வது குறித்து ஆர்ப்பாட்டக்காரர்களுக்குத் தகவல் கொடுத்தது யார்?

ஜனநாயகத்தின் பாதுகாப்பு. கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம், மனித உரிமைகள் போன்றவை பொதுநலவாயத்தின் அடிப்படை கோட்பாடுகள் ஆனால் அவை இங்கு இல்லை. அடுத்த இரண்டு ஆண்டுகளில் எல்லா கோட்பாடுகளும் காற்றில் பறக்க விடப்படும்.

இத்தகைய அழுத்தங்களால் நான் எனது பணியை முடிக்காமல் வெளியேற மாட்டேன் - என்றார். (த-5)



சனல் 4 ஊடகவியலாளர் குழு வட பகுதிக்கு வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முல்லைத்தீவில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. சீருடையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்திற்கு பண்ணைகளில் பணிபுரியும் சிவில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள் பஸ்களில் ஏற்றிவரப்பட்டு ஈடுபடுத்தப்பட்டனர். நேற்று மதியம் முல்லைத்தீவு அரச செயலகத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது. இதில் கலந்துகொண்டவர்கள் தமிழில் உச்சரிக்க முடியாத வார்த்தைகளை சுலோகங்களாக எழுதி ஏந்தியிருந்தனர். (ஐ)

# காணாமற் போனோரின் உறவுகள் தடுப்பு; சர்வதேச ஊடகங்களில் முக்கியத்துவம்

கொழும்பில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தச் சென்ற காணாமற் போனோரின் உறவினர்கள் இலங்கை இராணு வத்தினரால் தடுக்கப்பட்ட விவகாரம் குறித்து சர்வதேசம் ஊடகங்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டுள்ளன.

பொதுநலவாய மாநாடு கொழும்பில் நடைபெறும் சூழ்நிலையில் காணாமற் போனோரின் உறவுகள் கவனவீர்ப்பு போராட்டம் நடத்துவதற்காக நேற்று முன்தினம் கொழும்புக்குப் புறப்பட்டனர்.

இவர்கள் எதுவித காரணங்களும் தெரிவிக்கப்படாமல் மதவாச்சியில் இராணுவத்தால் தடுத்து நிறுத்தப்பட்டுத் திருப் பியனுப்பப்பட்டனர்.

இந்த விடயம் குறித்த செய்தியை சகல சர்வதேச ஊடகங்களும் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்துள்ளன. (த-5)

# இலங்கைத் தமிழர்கள் நிம்மதியாக உள்ளனர்

## பஸில் ராஜபக்ஷ கூறுகிறார்

தமிழ் நாட்டில் வாழும் தமிழர்களைவிட இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் வாழ்கின்றனர் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய மாநாடு தொடர்பான செய்தி சேகரிப்புக்காக அமைக்கப்பட்டுள்ள விசேட ஊடக நிலையத்துக்குச்சென்றவேளை அங்குள்ள ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

பொதுநலவாய மாநாட்டின் அரச தலைவர்கள் மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலந்துகொள்ளாமல் இருப்பது குறித்து இந்திய மக்கள் தான் கவலைப்பட வேண்டும். இலங்கை மக்களுக்கு அதனால் எவ்வித கவலையுமில்லை. பாதிப்பும் இல்லை. தமிழ் நாட்டில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஏராளம் உள்ளன. இவற்றை மறைக்கவே தமிழக முதல்வர் இலங்கை விடயத்தில் மூக்கை நுழைக்கின்றார்- என்றார். (த-5)

NJ

மீண்டும் புதுப்பொலிவுடன் யாழ் மண்ணில்



நியூ மைதிலி ஜூவலர்ஸ்

தங்க நகை உலகில் தடம் பதித்த நியூ மைதிலி ஜூவலர்ஸ் **கொழும்பில் இருந்து மீண்டும் யாழ் மண்ணில்**
புதுப்பொலிவுடன் **இல. 38,40, கஸ்தூரியார் வீதியில்** திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை
எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

15.11.2013 விஜய வருடம் ஐப்பசி மாதம் 29ஆம் நாள் இன்று **வெள்ளிக்கிழமை**
**காலை 9 மணி தொடக்கம் 10 மணி 15 நிமிடம்** வரை வரும் ரேவதி
நட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும் கூடிய தனு லக்கின சுப வேளையில்
கோலாகலமாக எமது கடை திறந்து வைக்கப்படவுள்ளது.

இத்தருணம் வருகை தந்து எமது விழாவைச் சிறப்பித்து வைக்குமாறு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நியூ மைதிலி ஜுவலர்ஸ் NJ NEW MAITHILY JEWELLERS

No. 38, 40 Kasthuriyar Road, Jaffna

இல. 38,40, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நல்வரவை நாடும்:
கடை உரிமையாளர்.

தொ.பே: 021 221 7878, 021 221 7877

(39874)(10.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடமாடும் மருத்துவ முகாம்

வலி.தென்மேற்கு, நவ. 15
மாந்தை கிழக்கு பிரதேச [செ]யலகத்தால் யாழ். மாவட்ட லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாபெரும் நடமாடும் மருத்துவ முகாம் நடத்தப்படவுள்ளது.
நட்டாங்கண்டல் மருத்துவமனையில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறும் இந்த மருத்துவ சேவையில் நீரிழிவு; குருதியமுத்தம், கண் பரிசோதனை உட்பட ஏனைய நோய்களுக்கான மருத்துவ ஆலோசனையும் வழங்கப்படவுள்ளது.
மருத்துவ முகாமில் கொழும்பு யாழ்.போதனா மருத்துவமனைகளில் கடமையாற்றும் விசேட வைத்தியர்களும் வைத்திய நிபுணர்களும் கலந்துகொண்டு வைத்திய ஆலோசனைகள் வழங்கவுள்ளனர்.
இதேவேளை- வறுமைக் கோட்டுக்குட்பட்ட 200 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன. (வ-115)





நெடுந்தீவு வரலாற்றுடன் இணைந்த வெடியரசன் கோட்டையில் புதிதாக முளைத்துள்ள புத்தர் சிலை இதுதான். (வ-7)

# மூடப்பட்டது கொல்களம்

அச்சுவேலி, நவ. 15
வலி.கிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி கொல்களம் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் மேல் நடவடிக்கையை அடுத்து மூடப்பட்டது.
அச்சுவேலி புத்தூர் பகுதி மாட்டிறைச்சி விற் பனை நிலையங்களுக்கான இறைச்சி வலி. தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் கொல்களத்தில் இருந்து எடுத்துவரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.
அச்சுவேலி- புத்தூர் பகுதி மாட்டிறைச்சி விற்பனை நிலையங்களுக்கான இறைச்சி கடந்த பத்து மாதங்களுக்கு மேலாக சுகாதார நடைமுறைகளுக்கு மாறாக பாவனைக்கு உதவாத அச்சுவேலி வல்லை மயானத்துக்கு அருகில் உள்ள கொல்களத்தில் வெட்டப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்தது.
கொல்களத்தை உரிய முறையில் சீர்செய்யாமை மற்றும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் இறைச்சி வெட்டப் பட்டு பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் கண்காணிப்பு இல்லாமல் இறைச்சி விற்பனை செய்யப்படல் தொடர்பாக வலி.கிழக்கு பிரதேச சபை வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து ஆணையாளர் வலி.கிழக்கு பிரதேச சபையின் அறிக்கையைப் பெற்றுக் கொண்டதுடன் கொல்களத்தை நேரிலும் பார்வையிட்டு நிலைமையை அவதானித்தார்.
அச்சுவேலிக் கொல்களம் கடந்த மாதம் இறுதியில் இருந்து முற்றாக பாவனைக்கு இல்லாமல் தடை செய்யப்பட்டது. தற்போது அச்சுவேலி- புத்தூர் பகுதி மாட்டிறைச்சி விற்பனை நிலையங்களுக்கான இறைச்சி சுன்னாகத்தில் இருந்து எடுத்துவரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. (வ-11)

**அச்சுவேலிக் கொல்களம் கடந்த மாதம் இறுதியில் இருந்து முற்றாக பாவனைக்கு இல்லாமல் தடை செய்யப்பட்டது.**

## வணிகபாடச் செயலமர்வு நாளை

கிளிநொச்சி, நவ. 15
கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தரம்-10, 11 வகுப்புக்களில் வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும், முயற்சியாண்மைக் கல்வி ஆகிய பாடங்களைக் கற்பித்துக் கொண்டிருக்கும் மற்றும் 2014 ஆம் ஆண்டில் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வொன்று நாளைய தினம் சனிக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.
இந்தச் செயலமர்வில் குறித்த பாடங்களைக் கற்பிக்கும், அடுத்த ஆண்டில் கற்பிக்கவுள்ள ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் அறிவித்துள்ளார். (க-405)

## பசுப்பால் குளிரூட்டும் நிலையத்துக்கு அடிக்கல்

### முள்ளியவளையில் இன்று

முல்லைத்தீவு, நவ.15
முள்ளியவளையிலுள்ள முல்லைத்தீவு-மாங்குளம் பிரதான வீதியில் பால் குளிரூட்டும் நிலையத் துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு இன்று இடம் பெறவுள்ளது.
பால் குளிரூட்டும் நிலையத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் உலக கரிசன (World Concern) நிறுவனத்தின் வன்னி பால் பண்ணைத் துறை மீள் எழுச்சித் திட்டம் ஒன்றின் கீழ் நியூஸிலாந்து நாட்டின் வெளி விவகார அமைச்சர் முர்ரே மக்கலி இந்த பால்குளிரூட்டும் நிலையத்துக்கான அடிக்கல்லை இன்று வெள்ளிக்கிழமை நட்டு வைக்கவுள்ளார்.
அரசின் நிதி உதவியுடன் உலக கரிசன் நிறுவனத்தினால் 18மாத காலமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் 4 பிரதேச செயலர் பிரிவுகளில் பால்வள மேம்பாட்டு செயற்றிட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.
இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாகவே பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படவுள்ளது. இந்த அடிக்கல் நடும் நிகழ்வில் நியூஸிலாந்து நாட்டின் வெளி விவகார அமைச்சர், அந்த நாட்டின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர், வெளி விவகார மற்றும் வர்த்தக அமைச் சின் உபசெயலாளர், இலங்கையின் கௌரவ தூதரக பிரதிநிதி, உலக கரிசன நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் மற்றும் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.
இந்த நிகழ்வின் போது இந்தத்திட்டத்தின் கீழ் செயற்பட்டு வரும் பாற்பண்ணையாளர் சங்கத்தைச் சேர்ந்த, முள்ளிய வளைப் பிரதேசத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு பசு மாடுகள் கையளிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.
மேலும், உலக கரிசன நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இயங்கி வரும் 30க்கும் மேற்பட்ட சிறுவர் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களும் கையளிக்கப்படவுள்ளன. (க)

# நெடுந்தீவுக்கு சென்றார் விவசாய அமைச்சர்

## மக்கள் பிரச்சினை குறித்தும் கலந்துரையாடினார்





யாழ்ப்பாணம், நவ. 15
நெடுந்தீவுக்கு முதல் தடவையாக நேற்று முன்தினம் புதன்கிழமை பயணம் மேற்கொண்ட வடக்கு மாகாண விவசாயம், கால்நடை, நீர்வளம், சுற்றுச் சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன், மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் ஸ்ரீபாலசுந்தரம் ஆகியோருக்கு துறைமுகத்தில் வைத்து மக்கள் சிறப்பான வரவேற்பளித்தனர்.
அதனைத் தொடர்ந்து துறைமுகத்தில் உள்ள குமுதினி படுகொலை நினைவுத்தூபிக்குச் சென்ற அமைச்சரும் மாகாணசபை உறுப்பினரும் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். அதனையடுத்து நெடுந்தீவு மேற்கு கோட்டைக்காடு பகுதிக்குச் சென்று விவசாயிகளுடனான கலந்துரை யாடல்களை மேற்கொண்டனர்.
சாராப்பிட்டி நல்லதண்ணீர்க் கிணறுகளையும், எல்லைப் பகுதியில் சுதந்திரமாகத் திரியும் குதிரைகள், கோட்டைகள், புறாக் கூண்டு ஆகியவற்றையும் பார்வையிட்டதுடன் கிழக்கு செபநாயகபுரம் குடியிருப்புக்குச் சென்று கடற்றொழிலாளர்களின் தேவைகள் , பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினர். 11 ஆம் வட்டாரத்தில் உள்ள சேதமுற்றுக் கிடக்கும் கடலரிப்புத் தடுப்பணைகளையும் அந்தப் பகுதியில் உள்ள மக்களையும் சுவிஸ் ஒன்றியத்தால் இலவசமாக நடத்தப்படும் தனியார் கல்வி நிலைய மாணவர்களையும் சந்தித்ததுடன் 350 வருடங்களுக்கு முற்பட்ட பெருக்கு மரத்தையும் பார்வையிட்டுத் திரும்பினர். (வ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயன்றளவில் மக்களுக்கான பணிகள் துரித கதியில்

## மாநகர சபை ஆணையாளர் பெருமிதம்

யாழ்ப்பாணம், நவ.15
மக்களுக்கான பணிகள் இயன்றளவில் துரிதப்படுத்தப்பட்டுள்ளதால் யாழ்.மாநகர சபைக்கு தற்போது நல்ல பெயர் ஏற்பட்டுள்ளது என்று மாநகரசபை ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மாதாந்தக் கூட்டத்தில் மக்களின் தேவைகளைக் கவனிக்காது மாநகரசபைக்குட்பட்ட கட்டட புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளதாக ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

பொதுமக்களின் விவரங்கள் அடங்கிய நாற்பதாயிரத்துக்கும் மேற்பட்ட கோப்புக்கள் பாதுகாக்கப்பட வேண்டிய நிலை உள்ளது. சபையின் அலுவலகக் கட்டடங்கள் பழமையானவை. மழை காலங்களில் நீர் பட்டும் கறையானின் தாக்கங்களுக்கு உள்ளானவையுமான கட்டடங்களைத் திருத்தியமைப்பதன் முலம் கோப்புக்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை இருந்தது.

ஆயிரத்துக்கும் அதிகமான கோப்புக்கள் தற்போது உரப்பைகளிலேயே கட்டி வைக்கப்பட்டுள்ளன. அவற்றிற்குள்ளிருக்கும் கோப்புக்களைத் தேடிக் கொண்டிருந்தால் பணிகள் தகுந்த முறையில் நடைபெறாது.

எனவே சபையில் தமது கடமைகளை நிறைவேற்ற வரும் மக்களை தாமதிக்க வைக்க முடியாது. கடந்த காலங்களில் ஒரு வேலையை நிறைவேற்ற சில மணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலை இருந்தது. தற்போது அவ்வாறில்லாமல் அத்தியாவசியமான பணிகளைக்கூட குறுகிய நேரத்துக்குள் நிறைவேற்றி மக்களின் சிரமங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

இதற்கென உத்தியோகத்தர்களுக்கு உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியிருந்தது. அதனாலேயே பழைய கட்டடங்களை புனரமைத்து வருகின்றோம்- என்றார். (வ-7)

# அநுராதபுரத்தில் எலும்புக்கூடு மீட்கப்பட்டது

கொழும்பு,நவ.15
அநுராதபுரம் பொலிஸ் பிரிவில் தேவாநம்பியதிஸ்ஸபுர கிராமத்திற்கு அருகில் உள்ள வனத்தில் இருந்து நபர் ஒருவரின் எலும்புக்கூடு மீட்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து இந்த எலும்புக்கூடு நேற்றுமுன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளது.

எலும்புக்கூடு இருந்த இடத்துக்குச் சென்ற அநுராதபுரம் நீதிவான் மற்றும் சட்ட வைத்திய பரிசோதகர் ஆகியோர் முதல்கட்ட விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், எலும்புக்கூடு அநுராதபுரம் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்த எலும்புக்கூடு ஆண் ஒருவரது என்று சந்தேகிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

**தேவை**
பாவித்த **கோழிக் கூடு** அமைக்கக் கூடிய உபகரணங்கள் தேவை
தொடர்புகளுக்கு : தர்ஸ் பாம். 077 2224852

**கார் விற்பனைக்கு**
17 - xxxx Toyota Carina Power Mirer, A/C. 75 ஆயிரம் மட்டுமே.
Leasing 18+ 26 தொ.இ:- 077 225 9030

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை ஐயாத்துரை



மண்டூரைப் பிறப்பிடமாகவும், ஒட்டுவெளி மிருசுவிலை, வசிப்பிடமாகவும் இல. 56 அச்சுக்கூட வீதியை, தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற சின்னத்தம்பி -வள்ளிப்பிள்ளை தம்பதியரின் செல்வப்புதல்வன் சின்னத்தம்பி ஐயாத்துரை 14.11.2013 அன்று இறைபதமடைந்துள்ளார்.

அன்னார் ஐயாத்துரை - சரஸ்வதியின் அன்புக்கணவரும் மகாதேவன் (லண்டன்), றஞ்சிதமலர் (சுவிஸ்), றாகினி (கனடா), தவசீலன் (தவா - கொக்குவில்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சுபா (லண்டன்), தவயோகேந்திரன் (சுவிஸ்), அரியராசா (கனடா), கிருஷானி (குடும்ப நல உத்தியோகத்தர் பி.ச.வை. சங்கானை) ஆகியோரின் அன்பு மாமனும் பவி, லதீஸன், தினோயா, துவீசன், சிந்துஜன், தனுசியன், பிரதீஸன், லக்ஷிகன், ஹம்சா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரிள் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (15.11.2013) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று. பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நணபர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.56 அச்சுக்கூட வீதி, கொக்குவில்.

தகவல் :
குடும்பத்தினர். தவா (மகன்)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



நிகழும்விஜய வருடம் ஐப்பசி மாதம் 02 ஆம் நாள் (19.10.2013) சனிக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர் திரு. **கதிரேசு மார்க்கண்டு**
(Woodlands Company & Woodlands Hotel)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (16.11.2013) சனிக்கிழமை காலை 05.30 மணிமுதல் 7.00 மணிவரை வெள்ளவத்தை கடற்கரையில் நடைபெற்று வீட்டுக்கிருத்தியம் 18.11.2013. திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் இல.9/4 ஸ்டேசன் வீதி, பம்பலப்பிட்டி கொழும்பு 04 இல் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் தங்களை கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

No. 9/4, Station Road,
Colombo - 04.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 16.10.2013 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

அமரர் **முத்தர் வீமராசா**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (15.10.2013) வெள்ளிக்கிழமை நண்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் மேற்படி கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பாரதி வீதி பத்தமேனி,
அச்சுவேலி.

குடும்பத்தினர்.

(சி/112283)(8.14)

# மரண அறிவித்தல்

## சண்முகம் ஆனந்தராசா



தச்சந்தோப்பு கைதடியைப், பிறப்பிடமாகவும் வரணியை, வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் ஆனந்தராசாநேற்று (14.11.2013) வியாழக்கிழமை காலமாகியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - பாக்கியம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற முத்துலட்சுமியின் கணவரும், கனகராசா, செல்லப்பா, கந்தசாமி, செல்வநேசா (துங்கராசா), முத்துமலர், தங்கமலர் ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 15.11.2013 இன்று பி.ப. 1 மணியளவில் வேலம்புராய் புணமுருங்கை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தங்கராசா(சகோதரர்), தங்கமலர்(கிளி-சகோதரி,ஆசிரியை

# நன்றி நவிலலும்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்



அமரர் உயர் திரு
**கதிரேசு மார்க்கண்டு**
(Woodlands Company & Woodlands Hotel)

காலஞ் சென்ற திரு.கதிரேசு மார்க்கண்டு அவர்களின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டு எமக்கு நேரடியாக ஆறுதல் கூறியவர்களுக்கும், இரங்கற் செய்திகளை அனுப்பி அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர்வளையங்கள்.மலர்மாலைகள்.மூலம் அஞ்சலி செலுத்திய அன்புள்ளங்களுக்கும் பத்திரிகைகளில் கண்ணிர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் Woodlands ஸ்தாபன ஊழியர் களுக்கும், பல்வேறு வகைகளில் எமக்கு உதவியும் ஒத்துழைப்பும் நல்கிய நல்ல உள்ளங்களுக்கும், உறவினர்கள்.நண்பர்கள் யாவருக்கும் எமது ஆத்மார்த்தமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம் அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் எதிர்வரும் 16-11-2013 சனிக்கிழமை காலை 5.30 மணிமுதல் 7.00 மணிவரை வெள்ளவத்தை கடற்கரையில் நடைபெற்று வீட்டுக்கிருத்தியம் 18-11-2013 திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில், இல.9/4. ஸ்டேசன் வீதி. பம்பலப்பிட்டி.கொழும்பு -04ல் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனை தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும். மதிய போசனத்திலும் தங்களை கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் : மக்கள்.மருமக்கள்.பேரப்பிள்ளைகள்
9/4,Station Road Colombo-04

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
adv@uthayan.com
021 567 1111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளை மீனவர் கைவிடவேண்டும்

## வடமாகாண அமைச்சர் டெனீஸ்வரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ .15
தடைசெய்யப்பட்ட மீன்பிடித் தொழில் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு அனைத்து மீனவச் சமூகங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தின் உறுப்பினர்களை கடந்த திங்கள் அமைச்சர் சந்தித்து உரையாடினார். இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினரான இ.ஆனல்ட்டும் கலந்து கொண்டிருந்தார்.

சம்மேளனத் தலைவர் அ. எமிலியாம்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அமைச்சர் உரையாற்றும் போது:

தடைசெய்யப்பட்ட 18 மீன்பிடித் தொழில்களையும் பாகுபாடின்றி அனைத்து மீனவச் சமூகங்களும் நிறுத்த வேண்டும். யாழ்ப்பாண மீனவர்கள் தொழில் ரீதியாகத் தாம் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

மீனவ சமூகங்களின் பிரச்சினைகளை நான் நன்கு அறிந்தவன். மீனவச் சமூகங்களுக்கும் இடையில் நவீன மீன் பிடி முறைகளை எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தவுள்ளேன்.

மேலும் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை நிறுத்துவதற்கு அனைத்து மீனவச் சமூகங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். இதன் பின்னர் அமைச்சர் மீன்பிடி வலை உற்பத்தித் தொழிற்சாலையையும் சென்று பார்வையிட்டார். (சு-5-12)





நெடுந்தீவு மக்கள் மீது பாரபட்சம் காட்டினால்

# பிரதேச சபையை கலைக்க நாம் தயங்க மாட்டோம்

## அந்தப் பகுதி மக்களைச் சந்தித்த விந்தன் கருத்து

யாழ்ப்பாணம், நவ.15
நடைபெற்று முடிந்த வடமாகாணசபை தேர்தலையடுத்து நெடுந்தீவு மக்கள் மீது பாரபட்சம் காட்டுவதுடன் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சேவைகளை முடக்கும் நடவடிக்கை தொடருமானால் நெடுந்தீவு பிரதேச சபையைக் கலைக்கவும் தயங்க மாட்டோம் என்று வடமாகாணசபை உறுப்பினர் என்.விந்தன் கனகரத்தினம் தெரிவித்தார்.

நெடுந்தீவு மாவிலித்துறை, செபநாயகபுரம் மக்களைச் சந்தித்து அவர்களின் தேவைகள், குறைபாடுகள் குறித்து அமைச்சர் பொ.ஐங்கரநேசன், மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் ஆகியோர் கலந்துரையாடினர்.

தமக்கு நல்ல குடிதண்ணீர் வழங்கப்படுவதில்லை எனவும் தேர்தலின் பின்னர் குடிதண்ணீராக உப்பு நீரே வழங்கப்படுவதாகவும் கூறிய மக்கள் தமக்கு வழங்கப்படும் நீரையும் அவர்களுக்கு வழங்கிக் காண்பித்தனர். இதன்போது மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய சேவைகள் குறித்து பாரபட்சம் காட்டக் கூடாது. பக்கச் சார்பானவர்களாகவும் எதிரானவர்களாகவும் இருந்தாலும் மக்களுக்கான சேவை என்றஅடிப்படையில் அனைவருக்கும் அது நீதியாகவும் நியாயமாகவும் வழங்கப்பட வேண்டும். நெடுந்தீவு பிரதேசசபை பாரபட்ச நடவடிக்கைகளில் ஈடுபடுமேயானால் அதைக் கலைத்து விடவும் தயங்கமாட்டோம்.

மீன்பிடி தொழில் சார்ந்த உங்களது பிரச்சினைகள் குறித்து மீன்பிடித்துறை அமைச்சருடன் இங்கு வந்து ஆராய்ந்து உரிய கவனம் செலுத்தப்படும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தேர்தலில் உற்சாகமாக வாக்களித்து எமது கட்சி மாகாணசபையில் பெரும்பான்மை இடம்பெற முழுமையான ஆதரவையும் வழங்கியுள்ள எமது மக்களுக்கு நன்றி கூறவும் அவர்களின் தேவைகளையும் குறைகளையும் தெரிந்து கொண்டு மாற்று நடவடிக்கைகளூடாக உதவிகளை வழங்க அமைச்சரும் நானும் வந்துள்ளோம் -என்று கூறினார். (வ-7)



வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவுக்கு என திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் 124 ஆம் இலக்கத்தில் அலுவலகம் ஒன்று நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அங்கு அமைச்சர் பால் காய்ச்சுவதையும், அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் கே.சண்முகநாதன் அலுவலகத்தை நாடா வெட்டித் திறந்து வைப்பதையும் காணலாம். (வ-4)

# எமது கௌரவமான வாழ்வுக்கு கட்டியம் கூறி நிற்பது கல்வியே

## வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபன்

யாழ்ப்பாணம், நவ .15
தமிழர்களின் கலை, கலாசாரம், பண்பாடு என்பன திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன. எமது வரலாறுகள் மறைக்கப்படுகின்றன. ஆனால் எமது கல்வியை யாராலும் எப்போதும் அழிக்க முடியாது. இந்த நாட்டில் நாம் மனிதனாக கௌரவத்தோடு வாழ்வதற்கு கட்டியம் கூறுவதாக அமைந்தது நாம் கற்ற கல்வியே.

இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன்.

ஏழாலை வடக்கு-கிழக்கு சனசமூக நிலையத்தால் அந்தப் பகுதியில் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்கள் தன்மானத்தோடு வாழ்வதற்கு கல்வி முக்கியம். ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் முதல் இன்று வரை இந்த நாட்டை வழி நடத்தியவர்கள் தமிழர்கள்தான். இன்னும் எத்தனையோ தமிழர்கள் இந்த நாட்டின் சுதந்திரத்துக்காகப் பாடுபட்டு நாட்டைத் திறம்பட வழிநடத்திய கல்விமான்களாவர். எமது மக்கள் இந்த மண்ணில் சுதந்திரமாக தன்மானத்துடன் சுய கௌரவத்துடன் வாழ வேண்டும் என்றே நாம் விரும்புகின்றோம்.

இன்றைய இந்த மாணவர்கள் தான் நாளைய தலைவர்கள். அவர்கள் தமது கல்லூரிக் காலத்தைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். மாணவர்கள் கல்வி கற்கின்ற அதேவேளை தம்மை ஓர் ஆளுமை கொண்டவர்களாக தலைமைத்துவப் பண்பை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதை வளர்ப்பதன் ஊடாகத் தான், இந்த நாட்டை ஆளுகின்ற சிறந்த தலைவர்களாக வரமுடியும்- என்றார். (வ-5)

# கல்விக் கருத்தரங்கு

வலி.வடக்கு, நவ.15
ஏழாலை வடக்கு கிழக்கு சனசமூக நிலையத்தால் இந்த வருடம் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச கல்விக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

நாளைசனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் தமிழ்ப் பாடமும் முற்பகல் 11.45 மணி முதல் விஞ்ஞான பாடமும் இடம் பெறவுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் கணிதமும் முற்பகல் 11.45 முதல் ஆங்கிலமும் இடம் பெறவுள்ளன.

குறித்த நேர அட்டவணையின் அடிப்படையில் இடம்பெறும், பரீட்சைக்கான பயிற்சிக் கருத்தரங்கில் மாணவர்களைப் பங்குபற்றிப் பயன்பெறுமாறு நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (வ-86)



# முஸ்லிம்களுக்கான பிரச்சினை தமிழர் ஆதரவளிக்கவில்லை

## கவலை தெரிவித்த மாநகரசபை உறுப்பினர்

யாழ்ப்பாணம், நவ.15
நாங்கள் தனித்தமிழீழம் கேட்கவில்லை தமிழ் ஈழம் மட்டுமே கேட்கின்றோம். முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தமிழர்கள் ஆதரவளிக்கவில்லை. அவர்கள் அது குறித்துப் பேச முடியாத நிலையில் இருந்துள்ளனர். இது தொடர்பாக நாம் கவலை தெரிவித்தபோதும் நீங்கள்தொடர்ந்தும்அதையே பேசிக்கொண்டிருக்கிறீர்கள் என மாநகரசபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் எஸ். இராஜதேவன் தெரிவித்தார்.

யாழ் மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் செவ்வாய்க்கிழமை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட சம்பவங்களுக்கு விசாரணைக்குழு அமைக்க வேண்டும் என்றும் தமிழர்களின் தாயகம் தமிழ் தாயகம் என்று கூறிக் கொண்டு முஸ்லிம், சிங்கள மக்களைத் தமிழ்த் தேசியம் வெளியேற்றியது. முஸ்லிம் மக்களின் அசையும், அசையாச் சொத்துக்களும் பறிக்கப்பட்டுள்ளன.

இதற்கும் ஒரு விசாரணைக் குழுவை வட மாகாண சபை அமைக்க வேண்டும் என மாகாண சபை உறுப்பினர் எம்.எம். சுபியான் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தார். அந்தப் பிரேரணையை தாமும் ஆமோதிப்பதாக முதல்வர் குறிப்பிட்டார். (வ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிதம் விஞ்ஞானம்**
**6-G.C.E O/L வரை**

ஆங்கில மொழி மூலப் பட்டதாரி ஆசிரியரினால் மிகச் சிறப்பாக தனிப்பட்ட முறையில் ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படும். தமிழ், ஆங்கில மொழிகளில் பிரபல கல்லூரிகளில் சிறப்பாக கற்பித்த ஆசிரியர், பெற்றோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 242 3400, 077 887 1217

## தவறிவிட்டது

செல்வரத்தினம் யோகேந்திரன் என்பவருடைய தே.அ.அட்டை (591412167V) பேஸ் சுடன் HNB யாழ் மெற்றோகிளைக்கும் பஸ்நிலையத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்க.
தொடர்பு: 075 670 8776, லிங்கஜன் ரோஸ்
282, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(40136) (4.6.3)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671101

# பொதுநலவாய அரச தலைவர்கள் கூட்டம் 2013, இலங்கை ரூ.500 ஞாபகார்த்த நாணயத் தாள் வெளியீடு

ஞாபகார்த்த நாணயத் தாள்




தற்போது சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாளிலிருந்து ஞாபகார்த்த நாணயத் தாள் காட்டும் வேறுபாடுகள்

1. வண்ணத்துப்பூச்சிக்கு பதிலாக ஞாபகார்த்த நாணயத் தாளில் பொ.அ.த.கூட்டம் 2013 இலட்சனை காணப்படுகிறது.
2. பொ.அ.த.கூட்டம் 2013 இற்கான நிலைக்குத்தான இலக்கத்தினைச் சுற்றியுள்ள வடிவமைப்பினை மேம்படுத்தியதன் மூலம் முனைப்பாக்கப்பட்ட நீர்வரி அடையாளம் உள்ளடக்கப்பட்டிருக்கிறது.
3. நாணயத் தாளில் உள்ள திகதி: 2013.11.15

தற்போது சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்




ஞாபகார்த்த நாணயத் தாளின் பின்பக்கம் தற்போது சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாளிற்கு ஒப்பானதாகும்

இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## விநியோகஸ்தர்கள் தேவை

நாம் தரமான உணவுப் பொருள்கள் மற்றும் பேனாக்கள் உற்பத்தி செய்து நாடு முழுவதும் விநியோகிக்கும் முன்னணி நிறுவனமாகும் எமது விநியோக வலயத்தை விஸ்தரிப்பதற்கு யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மற்றும் தென்மராட்சி ஆகிய பிரதேசங்களில் ஆர்வமுள்ள விநியோகஸ்தர்கள் தேவை.

தகைமைகள்:
- யாழ்ப்பாணத்திற்கு குறைந்தபட்சம் 15 இலட்சம் வங்கி உத்தரவாதமும் ஏனையபிரதேசங்களுக்கு குறைந்த பட்சம் 10 இலட்சம் வங்கி உத்தரவாதமும்
- குறைந்தது 300 சதுர அடி களஞ்சிய வசதி
- விநியோகத்திற்கான வாகனவசதி
- விநியோகத்துறையில் முன் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

தொடர்புகளுக்கு : விற்பனை முகாமையாளர்
பிரதேச விற்பனை முகாமையாளர் Radiant Marketing (pvt) Ltd-
077 7590718,
077 7590704
011 2401713, 0112401721
(40138)(8.14)

## இதய அஞ்சலி



2000 ஆம் ஆண்டில் லங்கா சித்த ஆயுள்வேத கல்லூரியின் வைத்திய மாணவியும் என்னுடன் கல்விபயின்ற நண்பியுமான

அமரர் **தவவதனி**

அவர்கள் 2002 இற்குப்பின் கல்வியைத் தொடரமுடியாது நோய்வாய்ப்பட்டிருந்தாலும் அவரது நினைவுகள் எம்முடன் என்றுமிருந்தது கடந்த செவ்வாய் இரவு அமரத்துவம் அடைந்த அன்னாரது பிரிவில் வேதனைப்படும் குடும்பத்தினருக்கு எனது வேதனையைப் பகிர்ந்து ஆறுதலைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

சுஜீவா வைத்தியசாலை
(தாய்மைப் பேற்று சிறப்பு
சித்த ஆயுள்வேத வைத்தியசாலை)
கலட்டி அம்மன் வீதி,
கே.கே எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி ரஞ்சிதமலர் யூட் ஞானசந்திரன்



வடமராட்சி, வதிரி, மாலி சந்தியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரஞ்சிதமலர் யூட் ஞானசந்திரன் 05.11.2013 ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் ஆசீர்வாதம் யூட் ஞானசந்திரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நரசிங்கம் - ஞானமணி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் - ஆன் நல்லம்மா தம்பதியரின் மருமகளும், இந்திராதேவி, காலஞ்சென்ற நிலா, விமலகுமாரி, ஞானேந்திரன் ஆகியோரின் சகோதரியும், சேனாதிராஜா, சாயிபவான், யூடி ஞானேந்திரன், எஸ்தர் சந்திரமலர் ஆகியோரின் மைத்துனியும், ஞானரட்ணத்தின் சகோதரியும், ஷேளிஷோபியா, யூட்டில்ஷான் ஆகியோரின் சிறியதாயும், ரொஷான், ஞானகீர்த்தனா, துஷான், நிஷான், ஹரிந்திரா ஆகியோரின் பெரியதாயும், மயூரி, காயத்திரி, கீர்த்தனா, நர்மதா, அர்ச்சனா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் வதிரி, ஆலங்கட்டை, மயானத்தில் இன்று (15.11.2013) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நரசிங்கம் குடும்பம்.
மாலி சந்தி,
வதிரி, கரவெட்டி.
075 040 9344, 077 354 3507
(40010)(2.6)

வடமாகாணத்தில் வெளிநாடுகளுக்கான கடிதங்கள், பொதிகள் சேவையில் முன்னோடிகளான நாம் இன்று எமது இணை நிறுவனத்தினை புதிய முகவரியில் ஆரம்பிக்கின்றோம்.

# ARRUL'S (Pvt) Ltd

வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையில் 15 வருடங்களை கடந்து

- இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டு
- ஆகாய, கடல் மார்க்கமாக
- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்
- வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையை வழங்கிக்கொண்டிருக்கும் முன்னணி நிறுவனம்



15.11.2013 - 30.11.2013 விசேட கட்டணச்சலுகை

இல.10, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.இல : 0212223536
இணை நிறுவனம் : ARRUL GLOBAL EXPRESS இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச்சந்தி, யாழ்ப்பாணம். தொ.இல : 0212226113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தோனேஷியாவில் உள்ள வடக்கு சுமத்ரா தீவில் 8,120 அடி உயரம் உடைய எரிமலை ஒன்று கடந்த சில மாதங்களாகக் குமுறிக் கொண்டிருந்தது. சினபாங் என்ற அந்த எரிமலை தற்போது சீற்றம் அடையத் தொடங்கியுள்ளது. அதனால் எரிமலையில் இருந்து வெப்பக் குழம்புகளும் கரும் புகையும் வெளியேறிவருகின்றன. அதையடுத்து கரோ மாவட்டத்தில் உள்ள சினபாங் அடிவாரத்தில் இருக்கும் ஏராளமான கிராமங்களில் வசிக்கும் சுமார் 6000 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர். (ற)

## இளவயதுப் பிரபலங்கள் மாலியா ஒபாமா, மலாலா





நியூயோர்க், நவ.15

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் மூத்த மகள் மாலியா மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த பெண் கல்வி ஆர்வலரான சிறுமி மலாலா ஆகியோர் 2013 ஆம் ஆண்டுக்கான செல்வாக்கு மிகுந்த இளம் வயதினர் பட்டியலில் இடம் பிடித்துள்ளனர்.

அமெரிக்காவின் 'டைம்' பத்திரிகை வெளியிட்டுள்ள இந்தப் பட்டியலில் உலக அளவில் தங்கள் பணி மற்றும் சேவை மூலம் பிரமிக்கத்தக்க சாதனைகள் புரிந்த விளையாட்டு, அறிவியல் உள்ளிட்ட துறைகளில் சிறந்து விளங்கும் 16 பேர் இடம் பெற்றுள்ளனர்.

இளம் வயதினருக்கான திடத்துடன் நடந்துகொண்டமைக்காக ஒபாமா மகள் மாலியாவும், தலிபான்களால் தாக்கப்பட்ட பிறகும் தைரியத்துடன் பெண் கல்விக்காக போராடியமைக்காக மலாலாவும் இந்தப் பட்டியலில் இடம் பிடித்துள்ளனர் என்று 'டைம்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தப் பட்டியலில் பொப் பாடகர் ஜஸ்டின் பைபர், கோல்ஃப் விளையாட்டில் சாதனை புரிந்து வரும் லைடியா கோ, நீச்சல் வீராங்கனை மிஸ்ஸி பிராங்க்ளின் ஆகியோர் உட்படப்பலர் இடம் பெற்றுள்ளனர். (ற)

## ஆப்கன் மோதல்கள் விரைவில் முடிவுக்கு

### பராக் ஒபாமா கூறுகின்றார்

நியூயோர்க், நவ.15

ஆப்கனில் அமெரிக்கா நடத்திவரும் போர் விரைவில் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த ஒபாமா,

"2014ஆம் ஆண்டின் இறுதிக்குள் நேட்டோ படைகள் ஆப்கனில் இருந்து வெளியேறவுள்ளன. அதற்கு முன்னதாகவே அமெரிக்க இராணுவத்தினர் எதிர்வரும் மாதங்களில் நாடு திரும்ப ஆரம்பித்துவிடுவர்.

இந்த குளிர்காலத்துக்குள் ஆப்கனில்இருக்கும்அமெரிக்க துருப்புகளின் எண்ணிக்கை 34 ஆயிரமாகக் குறைக்கப்படும். அடுத்த ஆண்டின் இதே காலத்தில்



ஆப்கனைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு அந்த நாட்டிடமே முழுமையாக ஒப்படைக்கப்பட்டு விடும்.

அமெரிக்க வரலாற்றில் நெடுங்காலம் நடந்த இந்தப் போர் முடிவுக்கு வந்து விடும். அந்த நாட்டில் இப்போதுதான் உருவாகிவரும் பாதுகாப்புப் படையினருக்கு பயிற்சி அளிக்கவும் பயங்கரவாதிகளை ஒடுக்குவதற்கான பணியில் அவர்களை தயார்படுத்தவும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான அமெரிக்க இராணுவத்தினர் சில காலம் அங்கேயே தங்கி இருக்க வகை செய்வது தொடர்பாக ஒப்பந்தம் செய்துகொள்ள ஆப்கன் அரசுடன் அமெரிக்கா பேசி வருகிறது." என்று தெரிவித்துள்ளார். (ற)

## ஒரே தடவையில் 37,000 மாணவர்கள் நீக்கம்

### ஜேர்மன் பல்கலை அதிரடி

பெர்லின், நவ.15

ஜேர்மனியில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்று 37,000 மாணவர்களை ஒரே நேரத்தில் பல்கலைக்கழ கத்தில் இருந்து நீக்கிப் பரபரப்பைஏற்படுத்தியுள்ளது.

ஜேர்மனியில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்று தனது மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்பியது.

அதில், "உங்கள் பல்கலைக் கழகக் கணக்கை தடைசெய்வதற்கு இன்னும் 12 நாள்கள் மட்டுமே இருக்கின்றன. நீங்கள் மாணவர் பட்டியலில் இருந்து பெயர் நீக்கம் செய்யப் பட்டுள்ளீர்கள், உங்களது ஒப்பந்தம் முடிவடைந்துள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை படித்து பார்த்த அனைவரும்அதிர்ச்சிஅடைந்தனர். சிலர், பல்கலைகழக கட்டணம் கட்டியதற்கான ரசீதுகள், சான்றிதழ்கள் போன்றவற்றை இணைத்து பதில் அனுப்பினர்.

குறிப்பாகப் பல்கலை கழகத்தின் விக்கிபீடியா பக்கத்திலும், மாணவர்களின் எண்ணிக்கை பூச்சியம் என்று இருந்தது.

இதுகுறித்து பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் அதிகாரி ஒருவர் கூறுகையில், "மென்பொருள் மூலம் அனுப்பப்பட்ட மின்னஞ்சலில் தவறு ஏற்பட்டுள்ளது. இதற்காக வருந்துகிறோம். தவறுகள் சரிசெய்யப்பட்டுவிட்டன என்று தெரிவித்துள்ளார். அதையடுத்தே மாணவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டுள்ளனர். (ற)

## அரசியலில் இருந்து விலகினார் கெவின்

மெல்போர்ன், நவ.15

ஆஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் கெவின் ருத் அரசியலில் இருந்து விலகுவதாக அதிரடியாக அறிவித்துள்ளார்.

இரண்டு முறை ஆஸ்திரேலியாவின் பிரதமராகவும், ஜூலியா கில்லார்டின் தலைமையிலான அமைச்சரவையில் வெளியுறவுத் துறை அமைச்சராகவும் பதவி வகித்தவர் லிபரல் கட்சியைச் சேர்ந்த டோனி அபோட்டால்கெவின்ருத்(55). இவர் ஆஸ்திரேலியாவில் கடந்த செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மோசமான தோல்வியைத் தழுவினார்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் மாலை அந்நாட்டு நாடாளுமன்றத்தில் உணர்ச்சிகரமான உரை ஒன்றை நிகழ்த்தினார் கெவின் ருத். அதில், குடும்பத்தினருடன் கலந்து ஆலோசித்த பின்னரே, அரசியலில் ஓய்வு எடுக்க முடிவு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

"இது எளிதாக எடுத்த முடிவல்ல. குடும்பத்தினரின் முக்கியத்துவத்திற்காக அரசியலில் இருந்து விலக எண்ணினேன். இந்த வாரத்துடன் எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் விலகவுள்ளேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ஜூலியா கில்லார்டை தேர்தலுக்கு முன் உட்கட்சித் தேர்தலில் தோற்கடித்து கடந்த மூன்று ஆண்டுகளாக கட்சிக்குள் கடுமையான மோதல்களை சமாளித்து, பிரதமர் பதவியை கைப்பற்றிய ருத், அதனைத் தொடர்ந்து வந்த பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சியிடம் பதவியைப் பறிகொடுத்து தோல்வியைச் சந்தித்தார். (ற)

## ஈரான் மீதான தடைகள் பேச்சுக்களை பாதிக்கும்

### ஜோன் கெரி கூறுகின்றார்

நியூயோர்க், நவ.15

ஈரானுக்கு எதிராக மேலும் பொருளாதாரத் தடைகள் விதிக்கும் பட்சத்தில் அது அணுத்திட்டப் பேச்சுக்களைப் பாதிக்கும் என்று அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் ஈரான் மீதான பொருளாதார தடைகள் பற்றிவலியுறுத்திவரும்நிலையிலேயே ஜோன் கெரி இவ்வாறு கூறியுள்ளார்.

ஈரானுக்கு எதிராக கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அழுத்தங்கள் அமெரிக்க காங்கிரஸ்ஸில் வலுப்பெற்றுள்ளன.

அண்மையில் ஜெனிவாவில் இடம்பெற்ற அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான சர்ச்சைக்குரிய அணுத்திட்டம் தொடர்பான பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்திருந்தன.

அந்தத் தோல்வி குறித்து மேற்குலக நாடுகளும் ஈரானும் பரஸ்பர குற்றச்சாட்டுக்களை சுமத்திவருகின்றன. (ற)

## அமெ. தூதரகங்களை தாக்குவோம்

### மிரட்டுகின்றது தலிபான் அமைப்பு

இஸ்லாமாபாத், நவ.15

பாகிஸ்தான் தலிபான் அமைப்பின் தலைவர் ஹகிமுல்லா மசூத் அமெரிக்க ஆளில்லா விமானத் தாக்குதலில் உயிரிழந்தமைக்கு பழிவாங்கும் வகையில் பாகிஸ்தானில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தைத் தகர்க்கப் போவதாக மிரட்டியுள்ளது தலிபான் அமைப்பு.

இதுகுறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது அந்த அமைப்பு. அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

"பாகிஸ்தான் அரசு அமெரிக்கத் தாக்குதலுக்கு ஆதரவு வழங்குகின்றது. பாகிஸ்தான் இராணுவமும், இராணுவத் தளபதியும் அதற்கு உடந்தை. ஹகிமுல்லா மசூத் கொல்லப்பட்டமைக்குஅமெரிக்கா விலை செலுத்தியே ஆக வேண்டும். இஸ்லாமாபாத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகம் இருந்த இடம்தெரியாது தகர்க்கப்படும்" என்று தெரிவித்துள்ளது.



தலிபான்கள் மிரட்டலை அடுத்து இஸ்லாமாபாத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வ.புளியங்குளம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

# பதவி வெற்றிடம்

இதன் கீழ் காணப்படும் பதவிகளுக்கு வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. விண்ணப்ப முடிவு திகதி : 29.11.2013
2. விண்ணப்பப் படிவங்கள் விண்ணப்பதாரியால் சுயமாகத் தயாரிக்கப்படல் வேண்டும்.
3. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-

தலைவர், புளியங்குளம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
A9 வீதி, பரசங்குளம், புளியங்குளம்.

விண்ணப்பம் அனுப்பும்போது தபால் உறையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்
அத்தோடு விண்ணப்பப் படிவத்திலும் குறிப்பிடப்பட வேண்டும்

**1. களஞ்சியப் பொறுப்பாளர் - 202/13** 9950-11700 85x10 - 90x10

அ. கூட்டுறவு ஊழியர் 14ஆவது சம்பளத் திட்டத்தில் 2 ஆண்டுகால அனுபவம் அல்லது 15ஆவது சம்பளத் திட்டத்தில் 4 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவுப் பணியாளர் சாதாரணதரம் அல்லது க.பொ.த சர்தாரண தரம் எண் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறையில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**2. கிளை மேற்பார்வையாளர் - 207/13** 9950-11750 85x10 - 90x10

அ. கூட்டுறவுப் பணிப்பாளர் 14ஆவது சம்பளத் திட்டத்தில் தொடர்புடைய பதவி ஒன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பளத் திட்டத்தில் இத்துறை தொடர்புடைய பதவி ஒன்றில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவுப் பணியாளர் சாதாரண தரம் சான்றிதழ் அல்லது க.பொ.த. சாதாரண தரம் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் தொடர்புபட்ட துறையில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**3. உற்பத்தி முகாமையாளர் - 115/13** 9950-11700 85x10 - 90x10

அ. கூட்டுறவுப் பணியாளர் 14ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பதவி ஒன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பளத் திட்ட தொடர்புபட்ட பதவி ஒன்றில் நான்கு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவுப் பணியாளர் சாதாரண தரம் அல்லது க.பொ.த சாதாரண தரத்தில் எண்கணிதம் Or வர்த்தக கணிதம் அல்லது கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் உட்பட 4 பாடங்கள் திறமைச் சித்தியுடன் 6 பாடங்கள் சித்தியும் தொடர்புபட்ட பதவி ஒன்றில் இரண்டு ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம்.

**4. களஞ்சிய முகாமையாளர் - 208/14** 9700-11350 80x10 - 85x10

அ. கூட்டுறவு ஊழியர் 15ஆவது சம்பளத் திட்டத்தில் தொடர்பு பட்ட துறையில் 2 ஆண்டு கால அனுபவம்.

ஆ. கூட்டுறவு ஊழியர் 16ஆவது சம்பளத்தில் தொடர்புபட்ட துறையில் 4 ஆண்டு கால அனுபவம்.

இ. கூட்டுறவு ஊழியர் தராதரப் பத்திரம் அல்லது க.பொ.த சாதாரண தரம் 6 பாடங்களில் சித்தி.

**5 களஞ்சிய முகாமையாளர் - 208/15** 9450-11000 75x10 - 80x10

அ. கூட்டுறவுப் பணியாளர் 16ஆவது சம்பளத் திட்டத்தில் தொடர்புபட்ட துறையில் 2 ஆண்டு கால அனுபவம் அல்லது 17ஆவது சம்பளத் திட்டத்தில் தொடர்புபட்ட துறையில் 4 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரம் அல்லது க.பொ.த சாதாரண தரம் 6 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**6. கணினி இயக்குநர் - 305/15** 9450-11000 75x10 - 80x10

அ. க.பொ.த.(சாதாரண தரம்) தொடர்புபட்ட மொழி உட்பட 6 பாடங்களில் சித்தியும் சிங்களம் அல்லது தமிழ் நிமிடத்திற்கு 20 சொற்களுடன் ஆங்கிலமும் ஒரு நிமிடத்தில் 30 சொற்கள் அடிக்கும் வேகமும் இருத்தல் வேண்டும்.

**7. விற்பனை உதவியாளர் - 307/17** 8950-10300 65x10 - 70x10

அ. கூட்டுறவுப் பணியாளர் கனிஸ்ர தர சான்றிதழ்

அல்லது

ஆ. 8ஆம் வகுப்புச் சித்தியுடன் விற்பனை அலுவலகருடன் தொடர்புடையதாக மூன்று ஆண்டு காலத்திற்கு குறையாத அனுபவம்.

**8. காவலாளி - 315/17** 8950-10300 65x10 - 70x10

அ. 8ஆம் வகுப்புச் சித்தியும் நல்ல தேகாரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு :

* பதவிக்கேற்ப பிணைப்பணம் அறவிடப்படும்
* வயதெல்லை 18-45
  சங்கப் பணியாளருக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல
* சங்கங்களில் பணி புரிபவர்கள் விண்ணப்பிக்க விரும்பின் அச்சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.
* பதவி நிரந்தரமானது.
* இலாபகரமாக இயங்கும் மாதங்களுக்கு சம்பளத்திற்கு மேலான படிகள் வாழ்க்கைச் செலவுபடி, சம்பளத்தின் 15 வீத அதிகரிப்பு என்பனவும் வழங்கப்படும்.
* வவுனியா மாவட்டத்தை சொந்த முகவரியாகக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தலைவர்

(29847)(7.6.3)

---

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் **சுஜீவன் ஷிகான்**

இன்று (15.11.2013) வெள்ளிக்கிழமை தனது முதலாவது பிறந்த தினத்தைத் தனது இல்லத்தில் கொண்டாடும்

**சுஜீவன் - ஜெனனா** தம்பதியரின்

**செல்வப் புதல்வன் ஷிகான்**

அவர்களைப் பல செல்வங்களும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

**1st Birthday 15.11.2013**

**ஷிகான்**

வாழ்த்துவோர்:
அம்மம்மா, ராஜ் குடும்பம்,
ராகவன் குடும்பம்,
தேவா குடும்பம். வசி (மாமா)
**பண்டத்தரிப்பு.**

---

உ

**திரு.திருமதி விக்கினேஸ்வரன் தாரணி** தம்பதியரின்
சிரேஷ்ட புதல்வனும், யாழ்.இந்துவின் மைந்தனும்,
மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல்பீட புகுமுக
மாணவனும் **குரு நல்லை க.கண்ணதாஸ்**
அவர்களின் மிருதங்க மாணவனுமாகிய
செல்வன் **விக்கினேஸ்வரன் மகிழன்** அவர்களின்

## மிருதங்க அரங்கேற்றம்



இடம் :- நல்லூர் இளங்கலைஞர் மன்றம்
காலம் :- நாளை (2013.11.16) சனிக்கிழமை. பிற்பகல் 3 மணி
தலைவர் :- செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் (பிரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)
பிரதம விருந்தினர் :- பேராசிரியர் வி.பி.சிவநாதன் (கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)



அணிசெய் கலைஞர்கள்

| | |
|---|---|
| பாட்டு | :- சங்கீத வித்துவான் A.K. கருணாகரன் |
| வயலின் | :- முதுமெய்யியல் மாணி K. குகபரன் |
| மிருதங்கம் | :- செல்வன் விக்கினேஸ்வரன் மகிழன் |
| கஞ்சிரா | :- கலைமாணி பிரம்மஸ்ரீ நா.சிவசுந்தரசர்மா |
| கடம் | :- செல்வன் ஞானவேல் வசந் |
| முகர்சிங் | :- கலாவித்தகர் N. சதீஸ்குமார் |
| தம்புரா | :- செல்வன் க.வர்ஜிகன் |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
தங்கள் நல்வரவை இனிதே நாடும்
**திரு.திருமதி விக்கினேஸ்வரன் தம்பதிகள்**

(40075 2-6-3)

---

# மக்கள் வங்கி

**ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்தல் - 2014**
**பிராந்திய தலைமை அலுவலகம் கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள்**

கட்டடங்களை நிர்மாணித்தல், புதுப்பித்தல், மாற்றுதல் ஆகிய பணிகள் (நீர்க்குழாய் வேலைகள், வடிகால், கழிவகற்றல் மற்றும் வர்ணம் பூசுதல் ஆகிய பணிகள் உட்பட) இரும்பு வேலைகள், அலுமினியம் வேலைகள், கருமபீடம், மரச் சாமான்கள் மற்றும் பிரிப்புகள் (பார்ட்டிஷன்) தயாரித்து பொருத்துதல் என்பவற்றுக்காகப் பதிவு செய்யும் பொருட்டு ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஒப்பந்தகாரர்களின் கோரிக்கையின் பிரகாரம் நிர்மாண பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் பதிவுக்குட்பட்டு கட்டட நிர்மாணப் பணிகள் மற்றும் ஏனைய விசேட வேலைகளுக்காக ஒப்பந்தகாரர்கள் பதிவு செய்யப்படுகின்றனர். (குறித்த விண்ணப்பதாரர்கள் நிர்மாண பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பது தொடர்பான எழுத்து மூல சாட்சியத்தை தமது விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்)

மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொண்ட விண்ணப்பப் படிவங்களில் மாத்திரமே விண்ணப்பிக்க வேண்டும்.

வங்கியின் பொதுவான வேலை நாள்களில் அலுவலக நேரத்தில் ரூ.750/= பணமாக செலுத்தி 2013 நவம்பர் மாதம் 15ஆந் திகதி முதல் 2013 டிசம்பர் மாதம் 15ஆந் திகதி வரை பிராந்திய முகாமையாளருக்கு எழுத்து மூல விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் இவ்விண்ணப்பப் படிவங்களை மக்கள் வங்கி பிராந்திய தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும். தபால்மூலம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பும் விண்ணப்பதாரிகள் மக்கள் வங்கியின் பெயருக்கு எழுதப்பட்ட ரூ.750/= பெறுமதியான வங்கி உண்டியல் அல்லது கொடுப்பனவுக் கட்டளையுடன் 2013.12.10ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். தபாலில் ஏற்படும் தாமதங்கள் மற்றும் அல்லது காணாமற் போதல் தொடர்பில் வங்கி பொறுப்பேற்காது.

2013ஆம் ஆண்டுக்குப் பதிவுசெய்துள்ள ஒப்பந்தகாரர்கள் 2014ஆம் ஆண்டுக்கு மீண்டும் பதிவுசெய்துகொள்ள வேண்டும்.

ஒழுங்காகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை குறித்த ஆவணங்களுடன் ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்தல் - 2014 என தெளிவாக இடதுபக்க மேல் மூலையில் எழுதப்பட்ட கடித உறையிலிட்டு 2013 டிசம்பர் மாதம் 16ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பிராந்திய முகாமையாளருக்குக் கிடைக்கக் கூடியதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

பிராந்திய முகாமையாளர்
முதலாவது மாடி,
பிராந்திய தலைமை அலுவலகம் வன்னி,
மக்கள் வங்கி,
வவுனியா.

தொலைபேசி : 024 222 2972 / 222 5054

(சி/12278) (7.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிதிவெடி விழிப்புணர்வு தொடர்பான செயலமர்வு

வவுனியா, நவ.15
அடுத்த ஆண்டுக்கான கல்வித் திட்டத்தில் மிதிவெடி விழிப்புணர்வு தொடர்பான விடயங்களை உள்ளடக்குவது சம்பந்தமான முன்னேற்பாட்டு செயலமர்வு ஒன்று வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் இடம்பெற்றது.
அதன் இணைப்பாளர் வீ.பரஞ்சோதி தலைமையில் கடந்த 5ஆம் திகதி காலை வவுனியா தெற்கு கல்வி வலய மண்டபத்தில் இந்தச் செயலமர்வு இடம்பெற்றது.
அடுத்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கல்வித் திட்டத்தில் மிதிவெடிசம்பந்தமான விழிப்புணர்வு விடயங்களையும் பாட அலகாகக் கொண்டு வரும் முயற்சிக்கான முன்னேற்பாடாக இந்தச் செயலமர்வு இடம்பெற்றது.
தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கும் மாணவக் குழுக்களுக்கும் முதற் கட்டமாக இந்தச் செயலமர்வு இடம்பெற்றுள்ளது. தரம்-6, 7, 8 ஆகிய வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மிதிவெடி விழிப்புணர்வின் அவசியம் குறித்து விரிவுரையாளர்களான திருமதி என்.இராசநாயகம், ஆர்.மாதவன் மற்றும் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா ஆகியோர் எடுத்துக் கூறினர். இந்தச் செயலமர்வுக்கு கல்வியமைச்சும் யுனிசெவ் நிறுவனமும் அனுசரணை வழங்கியிருந்தன..
வவுனியாவில் இந்தச் செயலமர்வு இரண்டு நாள்கள் நடைபெற்றது.
இதே போன்று ஏனைய மாவட்டங்களிலும் மிதிவெடிக் கல்வி தொடர்பான முன் னேற்பாட்டு செயலமர்வுகள் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-402)

வட மாகாண சபைக்கு

# காணி, பொலிஸ் அதிகாரம் தேவை

### மாகாண சபை உறுப்பினர் சிவமோகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.15
காணிச் சட்டமுறைகளை மதிக்காமல் அரசாங்கம் திட்டமிட்ட முறையில் எமது பூர்வீக நிலங்களை அபகரித்து வருகின்றது. இதைத் தடுக்க மாகாணசபைக்கு காணி, பொலிஸ் அதிகாரம் தேவை. இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட வட மாகாணசபை உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.
வடமாகாணசபையின் கன்னி அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,
இந்த வடமாகாண சபைக்கு அறுதிப் பெரும் பான்மையுடன் அங்கத்தவர்களை தெரிவு செய்வதற்கு மக்கள் வழங்கிய ஆணை வெறுமனே எமது பிரதேசத்தின் அபிவிருத்தியை மட்டும் நோக்கமாகக் கொண்டதல்ல. எம்மை பல வழிகளிலும் நசுக்குவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கும் தமது சுதந்திரமான நல்வாழ்வை எதிர்பார்த்துமே அவர்கள் வாக்களித்தார்கள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.
இதற்குக் காணி, பொலிஸ் அதிகாரங்கள் இச் சபையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட வேண்டியது மிக மிக அவசியமானதாகும்.
போர் முடிவடைந்த பின்னர் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் எமது மக்கள் இடம்பெயர்ந்துள்ளமையை சாதகமாகப் பயன்படுத்தி அவர்களது காணிகளை இராணுவம் பறிமுதல் செய்வதில் ஈடுபட்டுவருகின்றமை யாவரும் அறிந்த விடயம்.
அரசகாணிகளுக்குபொறுப்பு வகிக்கும் எமது அதிகாரிகள் கூட இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் மௌனமாக இருப்பது அவர்களின் இயலாமை என்பது எம்மால் உணரப்பட்டுள்ளது.
எமது பிரதேசங்களில் குடியமருவதற்காகக் கொண்டு வரப்பட்ட பெரும்பான்மை இன மக்களுக்கான காணி வழங்கல் தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய சட்டதிட்டங்கள் எதனையும் பின்பற்றாமல் காணிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன்அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் இந்த அரசு செய்து வருகிறது.
புதிய சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கையின் குடிமகன் ஒருவருக்கு அரை ஏக்கர் என்ற அடிப்படையில் காணி வழங்கப்பட வேண்டும் என்றுகாணிக்கொள்கை வகுக்கப்பட்டுள்ளது.
அது முற்று முழுதாக எமது மக்கள் பூர்வீகமாக கொண்டுள்ள காணிகளை அபகரிக்கும் நோக்குடன் கொண்டு வரப்பட்டது என்பதை யாவரும் அறிவார்கள்.
கடந்த 2010 ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பு பிரதேச மக்களின் 30 ஏக்கர் காணிகள் எந்தவிதமான காணிச் சட்டங்களையும் பின்பற்றாமல் இராணுவத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.
2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் அரசால் மேற்கொள்ளப்பட்ட காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மீள் பரிசீலனை செய்யப்பட்டு காணி வழங்கல் நடைமுறைகளை செயற்படுத்த உரிய ஒழுங்குகள் எமது மாகாண சபையால் முன்னெடுக்கப்பட வேண்டும். காணி, பொலிஸ் அதிகாரங்களே எமது மக்களின் உண்மையான வாழ்வினை உறுதிப்படுத்தக் கூடியவை.
இதைப் பெற்றுக் கொள்வதற்கு எமது சபை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த அதிகாரங்களை மத்திய அரசிடம் இருந்து பெறுவதற்கு எமது சபை இடர் பாடுகளை எதிர்நோக்குமாகவிருந்தால் சர்வதேசத்தின் ஆதரவை பெற்றுக் கொள்வதற்கும் இந்தச் சபை பின்னிற்கக் கூடாது.
எமது மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்கின்ற போது பல நிர்பந்தங்களுக்கு உள்ளாக வேண்டி ஏற்படும். அதனையும் பெருட்படுத்தாமல் எமது மக்களுக்காக உழைக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (க-421)

## மக்களுக்குப் பயன்படாத புதுக்குடியிருப்பு வீதி



ஒட்டுசுட்டான்- புதுக்குடியிருப்பு வீதி புனரமைக்கப்படாததால் போக்குவரத்தில் ஈடுபட முடியாத நிலையில் தாம் உள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
சுமார் 21 கிலோ மீற்றர் நீளமான ஒட்டுசுட்டான்-புதுக்குடியிருப்பு வீதி போக்குவரத்துக்கு உகந்த நிலையில் காணப்படவில்லை. குன்றும் குழியுமாக உள்ள இந்த வீதியில் நீர் தேங்கி நிற்கின்றது. இதனால் இந்த வீதியைப் பயன்படுத்துபவர்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
இந்த வீதியைத் தினமும் பலர் பயன்படுத்தி வருகின்றனர். இந்த நிலையில் உரிய தரப்பினர் இதனைக் கருத்தில் கொண்டு வீதியை உடனடியாகப் புனரமைக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-10-21)

## கிளிநொச்சி மேற்குப் பகுதியை எட்டிப் பார்க்காத மின்சாரம்

அக்கராயன், நவ. 15
கிளிநொச்சி மேற்குப் பகுதியில் அமைந்துள்ள பல கிராமங்களுக்கு மீள்குடியமர்வு இடம்பெற்று 4 ஆண்டுகள் ஆன நிலையிலும் மின்சார இணைப்புக்கள் வழங்கப்படாத நிலையே கிளிநொச்சி மேற்கில் உள்ள அக்கராயன் மருத்துவமனை, அக்கராயன் ப.நோ.கூ.சங்கம் உட்பட சில இடங்களுக்கு மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் கோணாவில், ஸ்கந்தபுரம், ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம், ஜெயபுரம், வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு ஆகிய கிராமங்கள் இதுவரை மின்சார இணைப்பைப் பெறாத நிலையிலேயே காணப்படுகின்றன.
இந்தப் பகுதிகளில் மின் கம்பங்கள்நடப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையில் தமது வீடுகளுக்கு மின்சாரம் எப்போது கிடைக்கும் என்று ஏங்கிய நிலையில் இங்குள்ள மக்கள் உள்ளனர். வடமாகாண தேர்தல் பரப்புரைக்காக அக்கராயன் பகுதிக்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிடம் அக்கராயன் பகுதிக்கு மின்சார இணைப்பை வழங்குமாறு மக்கள் கேட்டபோது;
வயர் முடிந்து விட்டது என்று பதிலளித்தார்.
கிளிநொச்சி மேற்குப் பகுதியில் பல பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட கணினிகள் மின்சாரம் இல்லாததால் இயங்க முடியாத நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)

### பாலங்கள் உடைந்ததால் நீரைப் பாய்ச்சுவதில் இடர்கள்

முல்லைத்தீவு, நவ. 15
பெரியகுளம் நீர்ப்பாசனக் குளத்திலிருந்து நீர் பாய்ந்து செல்லும் மூன்று பாலங்கள் உடைந்துள்ளதால் 33 ஏக்கர் வயல் நிலங்களுக்கு நீரைப் பாய்ச்ச முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.
இந்த விடயம் உரியவர்களுக்கு அறிவித்த போதிலும் எதுவும் நடக்கவில்லையெனவும் அவர்கள் கவலையுடன் தெரிவித்தனர். (க-500)

பூந்தோட்டத்திலிருந்து ஆரம்பிக்கும்

## வீதியைப் புனரமைக்க அவசர கோரிக்கை

வவுனியா, நவ. 15
வவுனியா பூந்தோட்டம் பகுதி தொடக்கம் மகாறம்பைக்குளம் வரையிலான வீதி மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதால் இதனை உடனடியாகப்புனரமைக்குமாறு அவசர கோரிக்கை விடப்பட்டுள்ளது.
வவுனியா நகரப் பகுதியில் இருந்து பூந்தோட்டம் பகுதிக்குச் செல்வது தொடக்கம் மகாறம்பைக்குளம் வீதி வரையிலான வீதியே மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது.
இந்த வீதியூடாகத் தினமும் ஏராளமான பாடசாலை மாணவர்களும் ஏனைய மக்களும் சென்று வருகின்றனர்.
மூன்று பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் இந்த வீதியூடாகவே செல்லவேண்டிய நிலையிலுள்ளனர்.
மகாறம்பைக்குளம் அ.த.க. பாடசாலை, பூந்தோட்டம் பாடசாலை, மதினாநகர் பாடசாலை ஆகியனவே அந்த மூன்று பாடசாலைகளாகும்.
சைக்கிளில் கூட இந்த வீதியூடாகச் செல்வதில் சிரமங்கள் காணப்படுகின்றன. சுமைகளுடன் செல்பவர்கள் கீழே இறங்கி அதனை [illegible] [illegible] கின்றது. (க-421)



வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேசத்துக்கு உட்பட்ட ஒலுமடு, கற்குளம், பட்டிக்குடியிருப்பு, மருதோடை, மாறாயிலுப்பை, குளவிசுட்டான், மாமடு ஆகிய இடங்களில் இரவு வேளைகளில் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் கால்நடைகள் காலபோகத்தில் பயிரிடப்பட்ட நெற் பயிர்களை அழித்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (க-435)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி அபகரிப்பைத் தடுக்க ‘பட்ஜெட்’டை புறக்கணியுங்கள்

## சிறுபான்மையின உறுப்பினர்களிடம் வேண்டுகோள்

அம்பாறை.நவ.15

கிழக்கு மாகாணத்தில் நில அபகரிப்பு தொடர்பில் தீர்க்கமானதொரு முடிவு இதுவரை எட்டப்படாததால் கட்சி பேதங்களை மறந்து கிழக்கு மாகாணக் காணி அமைச்சின் வரவு- செலவுத் திட்ட வாக்கெடுப்பை தோல்வி அடையச் செய்வதற்கு சிறுபான்மையின உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல். தவம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் சிறுபான்மை மக்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டு வருகின்ற நிலையில் அதனை தடுத்தி நிறுத்துவதற்கு கிழக்கு மாகாண காணி அமைச்சர் எந்தவிதமான நடவடிக்கையையும் இதுவரை எடுக்காத நிலையில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாண காணி அமைச்சர் காணி அபகரிப்பு தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க முடியாத அளவுக்கு அவர் மௌனப் படுத்தப்பட்டுள்ளார். மாகாண காணி அமைச்ச ரின் இந்த செயல்பாடு ஏற் றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

பொத்துவில், கராங்கோ, அக்கரைப்பற்று ,வட்டமடு, சம்மாந்துறை, புல்மோட்டை, கிண்ணியா, குரங்குப்பாஞ்சான், மஞ்சத்தொடுவாய் என பல பிரதேசங்களில் நில அபகரிப்பு இடம்பெற்று வருகின்றது.

மக்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டு சூறையாடப் படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இதுவரை பல முன்னடுப்புக்களை நாம் மேற்கொண்டாலும் பலமிக்க சக்திகள் அதனை தடுத்து வருகின்ற ஒரு நிலைப்பாட்டினைக் காண்கின்றோம்.

நம்மிடம் மாகாண சபையில் பலமிருக்கின்ற நிலையில் கட்சி பேதங்களை மறந்து ஒன்றுபட்டு செயற்படுவோமாக இருந்தால் நமது கோரிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட வழி ஏற்படும். மக்களுக்கான போராட்டத்தில் கட்சி என்ற நிலைப்பாட்டில் தீர்மாணங்கள் மேற்கொள்ளப் படாமல் ஒன்றுபட்ட முடிவே முக்கியமாகும்.-என்றார். (ச)

# தென்னம் மட்டையில் சாடிகள் உருவாக்கம்



மட்டக்களப்பு,நவ.15

தென்னை மட்டையின் அடிமட்டைகளை கொண்டு சாடிகள் உருவாக்கப்பட்டு அதனுள் கீரை மற்றும் மரக்கறிகள் உற்பத்தி செய்யப்பட்ட சம்பவம் மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையுடன் திணைக்களத் தின் மாவட்ட உதவி பணிப்பாளர் இரா.ஹரிகரன் தலைமையில் ஆரையம்பதியில் பெண்ணொருவரினால் செய்கை பண்ணப்பட்ட வீட்டுத் தோட்டத்திலேயே இந்த அறுவடை விழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விவசாயத் திணைக்கள உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

பெறுமதியான மரக்கறிகளும் கீரைகளும் இவ்வாறு செய்கை பண்ணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# 1000

## ரூபா அபராதம்

நீதிமன்ற விசாரணையின் போது நீதிமன்றத்தினுள் கையடக்கத் தொலைபேசி ஒலி எழுப்பிய குற்றத்துக்காக நபர் ஒருவ ருக்கு 1000 ரூபா அபராதம் விதித்து கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.யூட்சன் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தார்.

நீதிமன்றத்துக்கு வருகை தந்திருந்த கல்முனைக்குடியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கே இவ்வாறு அபராதம் அறவிடப்பட்டுள்ளது.

இந்த நபர் அபராதத்தைச் செலுத்த தவறும் பட்சத்தில் ஒரு மாதகாலச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று நீதிவான் உத்தரவிட்டார். (ச)



தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்த 40 மாணவர்களையும், அவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் நடைபெற்றது. (ச)

யுனிசெப் நிறுவனம் நடத்தும்

# சர்வதேச சிறுவர் தினம் 20 இல் கல்முனையில்

மட்டக்களப்பு,நவ.15

யுனிசெப் நிறுவனம் நடத்தும் இலங்கைக்கான சர்வதேச சிறுவர் தின நிகழ்வை கிழக்கு மாகாணத்தில் நடத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் செயற்படும் நாடுகளில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகளை யுனிசெப் நிறுவனம் கொண்டாடி வருகின்றது.

யுனிசெப் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலங்கைக்கான சர்வதேச சிறுவர் தின விழா அம்பாறை, கல்முனை கல்வி வலயத்தில் உள்ள மருதமுனை சம்ஸ் மத்திய கல்லூரியில் எதிர் வரும் 20 ஆம் திகதி நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று சம்ஸ் மத்திய கல்லூரியின் பாடசாலை மேம்பாட்டுக்கான வலயக் கல்வி ஆசிரிய ஆலோசகர் ரி.எல்.ஹபீபுள்ளா தெரிவித்தார்.

அன்றய தினம் மழை பெய்தாலும் விளையாட்டு, சித்திரக் கண்காட்சி மற்றும் போட்டிகள் என்பன கோலாகலமாக நடைபெறுவதற்கான சகல வசதிகளையும் ஏற்படுத்தித் தருவதாக சம்ஸ் மத்திய கல்லூரி அதிபர் ஏ.ஆர். எம்.தௌபீக் உறுதியளித்துள்ளார். (ச)

# காலநிலை சீர்கேட்டினால் மீன்பிடி பாதிப்பு

அம்பாறை.நவ.15

நாட்டில் தற்போது நிலவும் கால நிலைச் சீர்கேட்டால் அம்பாறை மாவட்டத்தில் ஆழ்கடல் மீன்பிடித் தொழில் பாதிப்பு அடைந்துள்ளது. அதனால் மீனவர்களின் பொருளாதாரம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.



அம்பாறை மீனவர்கள் கவலை

வருடாந்தம் ஒக்ரோபர் மாதம் முதல் எதிர்வரும் ஜனவரி மாதம் வரையிலான காலப்பகுதியில் அம்பாறை மாவட்டத்தில் ஏற்படும் கடல் கொந்தளிப்பு மற்றும் காலநிலை சீர்கேடுகள் காரணமாக ஆழ்கடல் மீன்பிடித் தொழில் முற்றாகப் பாதிக்கப் படுவது வழக்கமாகும்.

இந்தக் காலப்பகுதியில் மீனவர்கள் தமது இயந்திரப் படகுகளைப் பாதுகாப்பதற்கும், திருத்த வேலைகளுக்காகவும் வாழைச்சேனை, ஒலுவில் போன்ற பிரதேசங்களுக்கு கொண்டு சென்றுள்ளதுடன், சிலர் தமது படகுகளை தத்தமது பிரதேசங்களிலேயே கரையில் இழுத்தும் வைத்துள்ளனர். (ச)

# கிடைத்தன பொருள்கள்

அம்பாறை,நவ.15

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் கணவனை இழந்த பெண்களுக்கு வாழ்வாதாரப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை பிரதான மண் டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், பிரதேச செயலகப் பிரிவில் உள்ள முதியவர்களும் கௌரவிக்கப்பட்டனர். (ச)

# மட்டக்களப்பு-யாழ்ப்பாணத்துக்கு ரயில் சேவையை ஆரம்பியுங்கள்

## செல்வராசா எம்.பி.வேண்டுகோள்

மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ரயில் சேவையொன்றை ஏற்படுத்தித்தர வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

ரயில் திணைக்களத்தின் பொது முகாமையாளர் பி.எச்.ஆர். ஆரியரட்ண மற்றும் செயற்பாட்டு அத்தியட்சகர் எல்.ஏ.ஆர். ரத்னாயக்க ஆகியோரை அவர் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட் டங்களில் இருந்து வியாபாரம் உள்ளிட்ட பல்வேறு தேவைகளின் பொருட்டு நாளாந்தம் அதிகளவான பயணிகள் யாழ்ப்பாணத்துக்குச் செல்கின்றனர். அவர்கள் பஸ்களிலேயே செல்கின்றனர். கிழக்கு மாகாண மக்கள் வடக்குடன் பல தொடர்புகளை கொண்டவர்கள். இந்நிலையில் மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு ரயில் சேவையைத் தொடங்குவதன் மூலம் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கு பிரயோசனமாக இருப்பதுடன், போக்குவரத்தும் இலகுபடுத்தப்படுவதாக அமையும் என்று அவர் கூறினார்.

இந்த விடயம் கவனத்தில் கொள்ளப்படும் எனத் தெரிவித்த அதிகாரிகள், மட்டக்களப்பிலிருந்து கல்லோயா வரை சேவையில் ஈடுபட்டு வரும் ரயிலையே மாகோ வரை நீடிக்கச் செய்து யாழ். தேவியுடன் இணைக்க முடியும் என்று குறிப்பிட்டுள்ளனர். (ச-104)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல்மாகாணத்தில் தமிழரின் வாக்குகளை பிரிக்கும் அரசின் சூட்சும வேலை ஆரம்பம்

## மத்தியமாகாண சபை உறுப்பினர் வேலுகுமார் குற்றச்சாட்டு

மேல்மாகாணசபைத் தேர்தல் நெருங்குகின்ற இவ் வேளையில், இங்கு தமிழ் மக்களின் வாக்குகளைப் பிரிக்கும் அரசின் வேலைத்திட்டங்களும் சூட்சுமமாக ஆரம்பமாகியுள்ளன.

ஜனநாயக மக்கள் முன்னணியின் உதவி நிர்வாகச் செயலாளரும் மத்தியமாகாண சபை உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எதிர்வரும் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியில் மேல் மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அது தொடர்பாக இப்போதே பல கருத்துகள் வெளிவர ஆரம்பித்துவிட்டன. வழக்கம் போல தமிழரின் வாக்குகளைப் பிரிக்கும் அரசின் வேலைத்திட்டங்களும் சூட்சுமமாக நடைபெற்றுவருகின்றன. அதற்குத் துணைபோகும் குழுக்கள் உயிர்பெற்று இயங்க ஆரம்பித்துள்ளன. இந்த இன உணர்வற்றவர்களின் ஆசை வார்த்தைகளுக்கு மக்கள் ஒருபோதும் செவிசாய்க்கப் போவதில்லை என்பது திண்ணம்.

கடந்த காலங்களில் மேல் மாகாணத்தில் பல்வேறு கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் உறுப்பினர்கள் இருந்திருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் மேல் மாகாண தமிழ் மக்களின் தேவைகளைப் புரிந்து சரிவர நிறைவேற்றத் தவறியுள்ளனர். அல்லது தேவைகளை நிறைவேற்றும் இயலுமை அற்றவர்களாக இருந்துள்ளனர். எனவே, இத்தகையவர்கள் மக்களால் ஓரம்கட்டப்பட்டுள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில் கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேற்பட்ட காலத்தில் மேல் மாகாணத்தில் ஜ.ம.முன்னணி ஆற்றியுள்ள மக்கள் சேவை அளப்பரியது. அதனால் கட்சியின் தலைவர் மனோ கணேசனும் ஜ.ம.முன்னணியும் மக்கள் மனதில் இடம்பிடித்துள்ளனர். இன, மத பேதங்கள் இன்றி எமது கட்சியின் தலைவர் மனோ கணேசன் பணியாற்றியுள்ளார்.

அவரது ஜனநாயக வழிச் செயற்பாடுகள் இலங்கையைத் தாண்டிச் சர்வதேசத்திலும் பாராட்டப்படுகின்றது. அத்தகைய சேவைக்குப் பரிசாகக் கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் மக்கள் சாதனை மிக்க வெற்றியை எமக்கு அளித்தார்கள். அதன் மூலம் இன்று கொழும்பு மாநகரசபை ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக ஜனநாயக மக்கள் முன்னணி காணப்படுகின்றது. அதேபோன்று எதிர்வரும் மேல் மாகாண சபை ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக ஜனநாயக மக்கள் முன்னணியும் காணப் போகின்றது.

வடக்கு, கிழக்கு, மலையகம் போன்று இலங்கையில் வாழ்கின்ற அனைத்துத் தமிழர்களுக்கும் இன்னுமொரு முக்கியமான தளம் மேல்மாகாணம் ஆகும். இங்கு எமது ஒன்றிணைந்த சக்தியை நாங்கள் வெளிப்படுத்தவேண்டும். அதன்போது மேல் மாகாணச் சூழலை அறிந்து நிலைத்திருந்து போராடக்கூடிய தலைமைத்துவத்தையும் கட்சியையும் நாங்கள் தெரிவுசெய்ய வேண்டும். கடந்தகால வரலாற்றைப் பார்க்கின்றபோது அதற்கான தகைமை முழுமையாகக் காணப்படுவது ஜனநாயக மக்கள் முன்னணிக்கே என்பதை யாவரும் அறிவர். எனவே, தமிழர்கள் மேல் மாகாண சபைத் தேர்தலில் மனோ கணேசனையும் ஜனநாயக மக்கள் முன்னணியையும் முன்னிறுத்தி செயற்படவேண்டியது காலத்தின் தேவையாகும் என்றார்.

## ஹெரோயின் கடத்தி விற்ற முன்னாள் இராணுவ சிப்பாய்க்கு மரணதண்டனை

ஹெரோயின் கடத்திவந்து விற்றார் எனக் குற்றம் காணப்பட்ட முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மரண தண்டனை விதித்தது.

வெல்லம்பிட்டியை சேர்ந்த சந்தேக நபரான வெஹெல்ல சமிந்த குமார என்பவருக்கே மரணதண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

விற்பனை செய்வதற்காக 18.79 கிராம் ஹெரோயின் வைத்திருந்தமைக்காகவே மேல் நீதிமன்ற நீதிபதி பிரீதி பத்மன் சூரசேன, அவருக்கு மரணதண்டனை விதித்தார்.

இராணுவத்தை விட்டு விலகி ஓட்டோ சாரதியாகப் பணிபுரிந்த அதேசமயம் ஹெரோயின் விற்பனையிலும் ஈடுபட்டார் எனச் சந்தேகநபர் ஒப்புக் கொண்டார்.

## பொதுநலவாய மாநாடு நடைபெறும் வேளையில் இனவாதத்தைத் தூண்டுகின்றன எதிர்க்கட்சிகள்

### அமைச்சர் டலஸ் குற்றச்சாட்டு



பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடு இலங்கையில் நடைபெறும் சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் நாட்டுக்குள் இனவாதத்தை தூண்டுவதற்கு முயல்கின்றனர் என்று இளைஞர் விவகார மற்றும்திறன்விருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுநலவாய மாநாடு முதலாவதாகச் சிங்கப்பூரில் நடைபெற்றது. அதற்கு பின் ஆஸ்திரேலியா பர்த் நகரில் நடைபெற்றது. 1971 இலிருந்து 2011 வரையான காலப் பகுதியில் நடைபெற்ற அனைத்து பொதுநலவாய மாநாட்டிலும் எமது நாடு பங்குபற்றியது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான் பொதுநலவாய மாநாட்டை இலங்கைக்கு கொண்டு வந்தார்.

இந்நிலையில், இம் மாநாடு கொழும்பில் நடைபெறும் சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் நாட்டிற்குள் இனவாதத்தை தூண்டுவதற்கு முயல்கின்றனர். இதற்கு நாம் ஒருபோதும் அனுமதி கொடுக்கமாட்டோம். நாட்டையும் அதன் கௌரவத்தையும் பாதுகாப்பது அனைவரினதும் கடமையாகும் - என்றார்.

## ஆண் ஒருவரின் எலும்புக்கூடு மீட்பு

அநுராதபுரம் பொலிஸ் பிரிவில் தேவநம்பியதிஸ்ஸபுர கிராமத்திற்கு அருகில் உள்ள வனத்தில் இருந்து ஆண் ஒருவரின் எலும்புக்கூடு மீட்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றை அடுத்து இந்த எலும்புக்கூடு நேற்றுமுன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளது.

எலும்புக்கூடு இருந்த இடத்திற்குச் சென்ற அநுராதபுரம் நீதவான் மற்றும் சட்ட வைத்திய பரிசோதகர் ஆகியோர் முதல்கட்ட விசாரணைகளை மேற்கொண்டனர்.

பின் எலும்புக்கூடு அநுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இது குறித்து அநுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சீனப் பிரஜைகள் மூவருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

கொழும்பில் தானியங்கி பணப்பரிமாற்று இயந்திரம் ஒன்றிலிருந்து கடந்த வருடம் தகவல்களைக் கடைந்தெடுக்க முயன்ற சீனப் பிரஜைகள் மூவர் மீது சட்ட மாஅதிபர் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இந்த மூவரும் தானியங்கி பணப்பரிமாற்று இயந்திரத்தின் மேல் சில கருவிகளை வைப்பதைப் பாதுகாப்புக் கமராக்கள் காட்டியதாக வங்கியொன்றின்: உயரதிகாரி ஒருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து பொலிஸார் சீனப்பிரஜைகள் மூவரையும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்தனர். அத்துடன் இவர்களிடமிருந்து பல வெளிநாட்டு நாணயத்தாள்கள், சிறிய கமராக்கள் மற்றும் தரவு சேமிப்பு கருவிகள் என்பவற்றைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

## இரு பெண்களின் சடலங்கள் மீட்பு

வெவ்வேறு இடங்களில் இரு பெண்களின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி, வெவல்வத்தை, பம்பரலகந்த பகுதியிலுள்ள ஓடைக்கருகில் இருந்து நேற்றுப் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 12 ஆம் திகதிமுதல் காணமல்போயிருந்த பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

54 வயதான அவர் மன நலம் பாதிக்கப்பட்டிருந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரேத பரிசோதனைகளுக்காக சடலம் இரத்னபுரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அநுராதபுரம் பகுதியிலும் நேற்றுப் பெண் ஒருவரின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

தமக்குக் கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு அமைய குறித்த சடலத்தை மீட்டுள்ளோம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், குறித்த சடலம் அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

## முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பான முதலமைச்சரின் கருத்து செயல்பெற வேண்டும்

### வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் கோரிக்கை



முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தைத் தடுக்க முற்படுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வடக்கு முதல்வர் பின்நிற்கக் கூடாதென ஐ.ம.சு.மு.யின் வடமாகாண சபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு:-

மத்திய ஆட்சியிலிருந்து நீதி கிடைக்கவில்லை என்பது தான் தமிழ்ப் போராட்டத்தின் அடிப்படையாகும். அதே போன்று மாகாண ஆட்சியிலிருந்து நீதி கிடைக்க வில்லை என்று இன்னுமொரு சமூகம் விரக்தியின் விளிம்பிற்குத் தள்ளப்படுவதற்கான ஆரம்ப சூழ்நிலை கூட ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் இந்த மாகாண ஆட்சி எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டும்.

இம்மாகாண ஆட்சியின் கீழ் பல திணைக்களங்கள் இருக்கின்றன. அதன் நிர்வாகச் செயற்பாடுகள் எப்பொழுதும் பக்கச்சார்பற்றதாக இருப்பதை மாகாணசபை நிர்வாகம் உறுதிசெய்ய வேண்டும்.

அதேநேரம் வெளியேற்றப்பட்ட வடபுல முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக முதலமைச்சர் தனது கன்னியுரையில் குறிப்பிட்டு கூறியது எமக்கு ஆறுதல் அளிக் கின்றது. அதற்குச் செயலுருவம் கொடுக்கவேண்டும்.

வட புல முஸ்லிம்களின் [illegible] கப்படுகின்ற சவால்களுக்கு முகம் கொடுத் துக்கொண்டிருக்கின்றது. அவர்கள் வெளியேற்றப்பட்டபொழுது வேதனையைச் சுமந்துகொண்டு சென்றார்கள்.

மீள் குடியேறவரும் போதாவது நிம்மதிக் காற்றைச் சுவாசிப்போம் என்ற ஓர் ஆறுதலான மனோ நிலையில் அவர்கள் வரவேண்டும்

துரதிர்ஷ்டவசமாக இம்மண்ணில் அவர்களின் மீள்குடியேற்றத்துக்கு ஏற்படுத்தப்படுகின்ற தடைகள் அவர்களுக்கு வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சு[illegible]வதுபோல இருக்கின்றது.

இன்று மன்னார் மாவட்டத்தில் 60 கிராமங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேற்றத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டும், அவர்களுக்கான அடிப்படை வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை. அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்களது காலப்பகுதி முடிவடைந்துவிட்டது. எம்மால் எதுவும் செய்ய முடியாது என்று கையை விரிக்கின்றன.

எனவே, இது விடயத்தில் மாகாண நிர்வாகம் மத்திய அரசுடன் பேசவேண்டும் என்று வேண்டுகின்றோம். யாழ் மாவட்டத்தில் 5 ஆயிரம் முஸ்லிம் குடும்பங்கள் மீள் குடியேற்றப்படாமல் அவதிப்படுகின்றன - என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஊடகவியலாளரின் சுதந்திரம் இந்நாட்டில் பேணப்படும் வெட்கம் கெட்ட போக்கு...!

கிளிநொச்சி சென்று அங்குள்ள மக்களைச் சந்தித்து நேரடித் தகவல்களைத் திரட்டுவதற்காக, நேற்றுமுன்தினம் கொழும்பு கோட்டையிலிருந்து ரயிலில் சென்றுகொண்டிருந்த கெலும் மெக்ரே உட்பட்ட சனல் - 4 ஊடகவியலாளர்கள், அநுராதபுரத்தில் வைத்து ஆர்ப்பாட்டக்காரர்களால் தடுக்கப்பட்டு கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர் என்பதும் -

கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காணாமல் போனோர் தொடர்பிலான கவனவீர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்பதற்காக வடக்கிலிருந்து வந்த காணாமல் போனோரின் உறவுகள் மதவாச்சியிலும் அநுராதபுரத்திலும் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர் என்பதும் - நேற்றைய செய்திகள்.

அவை இரண்டுமே தமிழ் மக்கள், அவர்களின் பிரச்சினைகள் ஆகியவற்றுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டவை. இதன் மூலம் அரசு தனது எதேச்சாதிகாரப் போக்கையும் அடக்குமுறையையும் பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாடு இன்று ஆரம்பமாகவுள்ள வேளையில் மற்றொரு தடவை வெளிக்காட்டியிருக்கிறது.

"சனல் - 4 ஊடகவியலாளர் மெக்ரே இலங்கை வருவதற்கு அனுமதியளித்ததுக்கான பிரதான காரணம் ஊடக சுதந்திரம். சனல் - 4 ஊடகவியலாளர்களை இலங்கை வர அனுமதியளித்து, இலங்கையின் தற்போதைய நிலைமையை அவர்கள் நேரடியாகக் கண்டு, இலங்கையின் இறைமையைக் கருத்தில் கொண்டு அவர்கள் தங்களது மனச்சாட்சிக்கமைய நியாயத்தை நிலைநாட்டுவார்கள் என்ற நம்பிக்கையிலேயே அவர்களை இங்கு வர அனுமதித்தோம்" என்று பெருமையுடன் தெரிவித்திருந்தார் ஊடகத்துறை அமைச்சர். ஆனால் நடைபெற்றிருப்பதோ வேறு; நேர்மாறானது.

அநுராதபுரச் சம்பவத்தின் பின்னர் மெக்ரே கருத்து வெளியிடுகையில், பொதுநலவாயத்தின் விழுமியங்கள், ஜனநாயகம், பேச்சுச் சுதந்திரம், மனித உரிமைகள் ஆகியவற்றை இலங்கை பாதுகாக்கத் தவறிவிட்டதாகக் கடுமையாக விமர்சித்துள்ளார்.

லண்டனில் இருந்து கொழும்புக்கான தமது விமானப் பயண ஏற்பாடுகள் மிகவும் இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தன என்கிறார் மெக்ரே. அதேபோன்று கொழும்பு கோட்டையிலிருந்து கிளிநொச்சிக்கான அவர்களது ரயில் பயணமும் எவருக்கும் தெரிந்திருக்கவில்லை. கொழும்பு உயர் மட்டம் மூலம் தமது பயண ஏற்பாடுகள் திட்டமிட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கலாம் என அவர் நம்புகிறார், சந்தேகிக்கிறார். அது நியாயமானதே.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஒரு சிறிய குழுவினரே கலந்துகொண்டனர். ஆனால் நேற்றுமுன்தினம் அநுராதபுரம் ரயில் நிலையத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் அப்பகுதி மக்களும் பௌத்த குருமார்களுமாக ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

சனல் - 4 ஊடகவியலாளர்கள் ரயிலுக்குள்ளேயே இரண்டு மணித்தியாலங்கள் முடங்கி இருக்க நேர்ந்தது. ரயிலில் இருந்து பொலிஸ் பாதுகாப்புடன் இறக்கப்பட்டு வாகனத்தில் கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். இலங்கையில் நீங்கள் விரும்பிய எந்த இடத்துக்கும் செல்லலாம் என்று இதற்கு முதல் நாளான செவ்வாய்க்கிழமைதான் ஜனாதிபதி அவர்களிடம் நேரடியாகத் தெரிவித்திருந்தார்.

ஆனால் அடுத்தநாளே அவர்களது சுதந்திரம் பறிக்கப்பட்டு விட்டது. அரசின் கைக்கூலிகள் என்று நம்பப்படும் ஒரு குழுவினரின் நடவடிக்கையால் தடுக்கப்பட்டுள்ளது. பொலிஸார் நினைத்திருந்தால் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைத்திருக்கலாம். ரயிலைத் தொடர்ந்து செல்ல அனுமதித்திருக்கலாம். அவர்கள் எல்லோரதும் நோக்கம் சனல் - 4 ஊடகவியலாளர்கள் கிளிநொச்சிக்குச் செல்லக்கூடாது என்பது துல்லியமாகத் துலங்குகிறது.

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்வதற்கு எந்த ஒரு ஜனநாயக நாட்டிலும் உரிமை உண்டு. 2010 டிசெம்பரில் ஒக்ஸ்போர்ட் யூனியனில் உரையாற்ற லண்டன் சென்ற ஜனாதிபதி, ஆர்ப்பாட்டம் காரணமாக உரையாற்ற முடியாது போனது. அவரது உரை ஒருதலைப்பட்சமாக ஒக்ஸ்போர்ட் யூனியனால் ரத்துச் செய்யப்பட்டு ஜனாதிபதி திரும்பி வந்தார். இலங்கையின் எதிர்காலத் திட்டங்கள் குறித்துப் பேச லண்டனில் தாம் மற்றொரு சந்தர்ப்பத்தை எதிர்பார்ப்பதாக அப்போது ஜனாதிபதி மிகுந்த நம்பிக்கை தெரிவித்தார்.

ஒக்ஸ்போர்ட் யூனியன், சம்பவம் ஆர்ப்பாட்டக்காரர்களின் உணர்வுகளை மதித்து ஏற்பாட்டாளர்கள் மேற்கொண்ட முடிவுகள். ஆனால் அநுராதபுரச் சம்பவம்....?

மெக்ரே கூறியதுபோன்று பேச்சுச் சுதந்திரத்துக்கும், நடமாடும் சுதந்திரத்துக்கும், ஊடக சுதந்திரத்துக்கும் அது பெரும் அச்சுறுத்தலாகும். பொதுநலவாய அமைப்பின் விழுமியங்கள் ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தும் போது கொழும் பில் பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாடு ஆரம்பமாகவுள்ள வேளை ஊடகவியாளர்களின் உரிமைகள் மறுக்கப்படுவது, முக்கியமாக சனல் - 4 ஊடகவியலாளர்களின் ஊடகச் சுதந்திரம் ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் கட்டுப்படுத்தப்பட்டதை இலங்கை எந்த முகத்துடன் நியாயப்படுத்தப்போகிறது...?

# பொதுநலவாய மாநாடு ஒரு பார்வை......

இலங்கையின் தலைநகரான கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய உச்சி மாநாடானது போருக்குப் பின்னான அபிவிருத்திகளைக் காண்பிப்பதற்கான ஒரு வாய்ப்பாகும் என இலங்கை நம்புகிறது. ஆனால் இலங்கையில் நிலவும் மனித உரிமை மீறல் களைக் காரணங்காட்டி கனடா மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளின் தலைவர்களும் இலங்கையில் நடைபெறவுள்ள உச்சி மாநாட்டைப் புறக்கணிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் 53 நாடுகளின் பொருளாதார, சமூக மற்றும் இராஜதந்திர விவகாரங்களைக் கலந்தாலோசிப்பதற்கான ஓர் அரங்காகவே இந்த உச்சி மாநாடு அமைந்துள்ளது.

பல பத்தாண்டுகளாக நாட்டில் தலைவிரித்தாடிய பயங்கரவாதத்தால் சின்னாபின்னமாகியிருந்த இலங்கைத் தீவானது 2009இல் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் எவ்வாறான முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் எட்டியுள்ளது என்பதைக் கோடிட்டுக் காட்டுவதற்கான ஒரு வாய்ப்பாக இந்த மாநாட்டைப் பயன்படுத்தவுள்ளதாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

### தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கும் கனடா

போரின் போது இடம்பெற்ற மீறல்களைச் சுட்டிக்காட்டிய இந்திய அமைச்சர்கள், பிரதமர் மன்மோகன் சிங் இலங்கையில் நடைபெறும் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என அழுத்தம் கொடுத்துள்ளதன் பின்னணியிலேயே அவர் தனது பயணத்தைக் கைவிட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கைப் படைகளால் 40,000 பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்ட போதிலும் இது தொடர்பில் பொறுப்பளிப்பதற்கு இலங்கை அரசு மு வராததன் காரணமாக இங்கு நடை பெறும் உச்சி மாநாட்டைப் புறக்கணிக்கவுள்ளதாக ஏப்ரல் மாதத்தில் கனேடி யப் பிரதமர் கார்ப்பர் அறி வித்திருந்தார்.

இந்த உச்சி மாநாட்டில்தான் கலந்து கொள்ளப் போவதாகவும் ஆனால் இலங்கை ஜனாதிபதியிடம் இலங்கை மீதான குற்றச் சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர் பாக கேள்வி கேட்கவுள்ளதுடன், அனைத்துலக விசாரணைக்கு முகங்கொடுக்க வேண்டும்எனவும் அழுத்தங்கொடுக் கவுள்ளதாகவும் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமறூன் வாக்குறுதி அளித் துள்ளார்.

இலங்கையில் இடம் பெறும் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதென்பது இலங்கைக்குத் தான் ஆதரவு வழங்குவதாகக் கருதமுடியாது என நியூசிலாந்தின் தலைவர் ஜோன் கீ தெரிவித்துள்ளார்.

இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள மீறல்கள் தொடர்பாக உத்தியோகபூர்வமாக, மூன்று நாள்கள் நடைபெறவுள்ள பொதுநலவாய உச்சி மாநாட்டில் கலந்துரையாடப்படமாட்டாது எனக் கூறப்படுகிறது.

### ஒத்து ஊதும் பீரிஸும் பிரதமர் றொனி அபோற்றும்

ஒவ்வொரு நாடுகளும் இழைத்த மீறல்கள் தொடர்பாக ஆராய்ந்து தீர்வினைச் சொல்கின்ற அமைப்பாக பொதுநலவாயம் காணப்படவில்லை. எல்லா நாடுகளிலும் பிரச்சினைகள் உள்ளன. இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் அந்தந்த நாடுகளின் அரசுகளினால் சொந்த நாட்டு மக்களின் அவாக்களை முதன்மைப் படுத்தி தீர்த்து வைக்கப்பட வேண்டும் என இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இவரது கருத்தை ஆஸ்திரேலியப் பிரதமர் றொனி அபோற்றும் ஏற்றுக்கொண்டு கருத்து வெளியிட்டுள்ளார். மூத்த உறுப்புரிமையைக் கொண்ட ஆஸ்திரேலியர்களாகிய நாங்கள் நீண்டகாலமாக இயங்கி வரும் மிக முக்கியமான அமைப்புக்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த விரும்பவில்லை என ஆஸ்திரேலியப் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாயம் போன்ற அமைப்பின் நீடித்த தன்மையானது அதன் உறுப்பு நாடுகளில் வாழும் மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்க்கும் இதன் இயலுமையிலேயே தங்கியுள்ளது என் புதுடில்லியைத் தள மாகக் கொண்டியங்கும் மனித உரிமைகளுக்கான ஆசிய மையத்தின் இயக்குநர் சுகாஸ் சக்மா தெரிவித்துள்ளார்.

பொதுநலவாயமானது தான் தொடர்ந்தும் நிலைபெற்றிருப்பதற்குப் பிரிட்டிஸ் இராச்சியத்தை நம்பியிருக்க முடியாது. தனது உறுப்பு நாடுகளில் இடம் பெறும் மிக முக்கிய, கடுமையான பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதில் பொதுநலவாயமானது தயக்கம் காண்பிக்கக் கூடாது என சுகாஸ் சக்மா மேலும் குறிப்பிட்டுள்ளார்.




### இலங்கை மீதான விசாரணைகளை எதிர்க்கும் முத்த உறுப்பு நாடுகள்

62 ஆண்டுகளுக்கு முன்னர் முன்னாள் பிரிட்டிஷ் இராச்சியத்தின் மூலம் கட்டியெழுப்பப்பட்ட ஓர் அமைப்பே பொதுநலவாயமாகும். இது 2011இல் மேற்கொண்ட உச்சி மாநாட்டில் தனது முக்கிய விழுமியங்கள் உட்பட பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொண்டது.

ஆனால் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் கால மீறல்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படவேண் டும் என்பதை பொதுநலவாயத்தின் மூத்த உறுப்பு நாடுகள் சில எதிர்க் கின்றன. இலங்கை தொடர்பில் மேற் கொள்ளப்படும் விவாதங்கள் பொது நலவாயத்தின் நம்பகத்தன்மை, மதிப்பு போன்றவற்றைக் களங்கப்படுத்துவதாகவும், இதேபோன்ற அனுபவங்கள் சிலவற்றை பொதுநலவாயமானது கடந்த காலத்தில் சந்தித் துள்ளது என ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் நிறவெறி ஆட்சி நிலவிய காலம் தொடக்கம் சிம்பாவேயில் றொபேட் முகாபேயின் ஆட்சி வரை பல்வேறு உலக நாடுகளின் பிரச்சினைகளை பொதுநலவாய அமைப்புச் சந்தித்துள்ளது. இது தொடர்பில் இது நீண்ட கால வரலாற்றைக் கொண்டுள்ளது என சிட்னியிலுள்ள நியூசவுத் பல்கலைக் கழகத்தின் சமூக விஞ்ஞானம் மற்றும் அனைத்துலக கற்கைகளுக்கான விரிவுரையாளர் மார்க் றொல்ப் தெரிவித்துள்ளார்.

### மகாராணியார் பங்கு பெறாத முதல் மாநாடு

பிரிட்டன் இளவரசர் தனது தாயாருக்குப் பதிலாக பொதுநலவாயத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அதனை வினைத்திறனுடன் நிர்வகிப்பதை உறுதிப்படுத்துவதிலேயே பொதுநலவாயத்தின் அரச தலைவர்கள் ஒன்றுகூடும் உச்சி மாநாடு நிலைத்திருப்பது தங்கியுள்ளது என றோல்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் இடம்பெறும் உச்சி மாநாட்டுக்குத் தனது தாயாருக்குப் பதிலாக பிரிட்டன் இளவரசர் சாள்ஸ் தலைமை தாங்கவுள்ளார்.

பிரிட்டிஷ் மகாராணியார் 1981இல் முதன்முதலாக பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டுக்குத் தலைமை தாங்கத் தொடங்கியதிலிருந்து இன்று வரை இடம்பெற்ற உச்சி மாநாடுகளில் பங்கு பற்றாதது இதுவே முதன் முறையாகும்.

பொதுநலவாய அமைப்பை ஒற்றுமையுடன் வழிநடாத்திச் செல்கின்ற இராஜதந்திர ரீதியான ஆளுமையை மகாராணியார் கொண்டுள்ளார். இதேபோன்று இந்த அமைப்பின் நற்பெயருக்கு வலுச்சேர்க்கும் விதமாக இளவரசர் சாள்ஸ் தனது இராஜதந்திர நகர்வை முன்னெடுத்துச் செல்வதுடன், தனது ஆளுமையை நிலைநிறுத்திக் கொள்வதே இதனை நிலைத்திருக்கச் செய்வதற்கான மிகமுக்கிய ஒன்றாகக் காணப்படுகிறது என றொல்ப் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய நிலங்களுக்கு விடிவு பிறக்குமா?



துன்னாலைச் செல்வம்

முல்லைத்தீவு மக்கள் வியர்வை சிந்தி உழைத்து தமது வாழ்வை கட்டியெழுப்பக் கூடியவர்கள். எவருடைய தயவும் இன்றி தமது நம்பிக்கையான வாழ்வில் விவசாயத் தொழிலை பிரதானமாக மேற்கொண்டு வந்தவர்கள். அதன் மூலம் தமது வாழ்வில் ஒரு முன்னேற்றத்தைக் கண்டு பிறமாவட்டங்கள் வியக்கும் வண்ணம் வாழ்ந்தவர்கள். இன்று அந்த மக்கள் தமது வாழ்வைக் கட்டியெழுப்ப முடியாமல் தவிக்கின்றனர். இதற்கு இராணுவம் முதற்காரணமாக இருப்பதைக் கண்கூடாகக் காணலாம். அதாவது மக்களின் விவசாய நிலங்களில் இராணுவம் முகாம்களை அமைத்து அங்கு நிலை கொண்டுள்ளனர். இதனால் அந்தப் பிரதேச மக்கள் தமது விவசாயத் தொழிலை மேற்கொள்ள முடியாமல் முடங்கிப் போய் இருக்கின்றனர்.

### பண்ணைகள் இராணுவப் பிடியில்

பொது மக்களின் வளமான விவசாய நிலங்கள் மாத்திரமல்லாமல் வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சுக்கு உரித்தான பண்ணைகள் கூட இராணுவத்தினர் வசமே உள்ளன. வடக்கு மாகாணப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு இனிமேலும் தடையாக நிற்காமல் இந்த நிலங்களிலிருந்து படையினர் வெளியேற வேண்டும் என்று விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இரணைமடுவில் உள்ள எமது மாகாண அமைச்சுக்குச் சொந்தமான எட்டு ஏக்கர் பரப்பளவு கொண்ட சேவைக்கால பயிற்சி நிலையம், விதை உற்பத்திப் பண்ணை, தாய்த்தாவரப்பண்ணை, அலுவலகங்கள் என்று 400 ஏக்கர்களுக்கு அதிகமான பரப்பளவை இராணுவம் தன்வசப்படுத்தி வைத்திருக்கின்றது. இராணுவத்தினரை எமது வேளாண்மை நிலங்களிலிருந்து வெளியேற்றி வடக்கின் விவசாயப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய அரசு ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

### கரும்பு ஆலைக் காணியை இராணுவம் கையளிக்காது

இதற்கிடையில் கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் அமைந்துள்ள கரும்பு ஆலைக்குரிய காணியை எந்தக் காரணம் கொண்டும் விடுவிக்க முடியாது என்று கிளிநொச்சி அரச உயர் அதிகாரிகளுக்கு இராணுவத்தினை அறிவித்துள்ளனர். ஸ்கந்தபுரத்திலுள்ள கரும்புக் காணிக்குப் பதிலாக அக்கராயன் சமாதானபுரப் பகுதியில் உள்ள 50 ஏக்கர் காணியைப் பயன்படுத்துமாறு இராணுவத்தினர் அறிவித்துள்ளனர். 1965 ஆம் ஆண்டில் இருந்து ஸ்கந்தபுரத்தில் உள்ள 200 ஏக்கர் நிலப் பரப்பில் கரும்புச் செய்கை இடம் பெற்றுள்ளதுடன் கரும்பு ஆலையொன்றும் இயங்கி வந்தது. போர்க் காலத்தில் கரும்பு ஆலை செயலிழந்தது. போர் முடிவுற்று மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் கண்ணகைபுரம், ஸ்கந்தபுரம், அக்கராயன், ஆனைவிழுந்தான் குளம், வன்னேரிக்குளம் ஆகிய பகுதிகளில் 30 விவசாயிகள் வரை கீரும்புச் செய்கையில் ஈடுபட்டு வரும் நிலையில் ஸ்கந்தபுரத்தில் கரும்பு ஆலையொன்று இயங்க வேண்டிய தேவை உள்ளது. மூன்று மாதங்களுக்கு முன்பு ஸ்கந்தபுரத்துக்கு வருகை தந்த சீனித் தொழிற்துறை அமைச்சர் லக்ஸ்மன் செனவிரட்ன கரும்பு ஆலைக்குரிய காணியை இராணுவத்திடமிருந்து பெற்றுத் தருவதாக கூறியிருந்தார். ஆனால் அது இன்று வரை நடைபெறவில்லை. வட பகுதி மக்களின் பாரம்பரியத் தொழில் விவசாயம் ஆகும். இந்தத் தொழிலை மேற்கொண்டவர்கள் இன்று அந்தத்தொழிலை மேற்கொள்ள முடியாமல் தவிக்கின்றனர். இதனால் அந்த மக்கள் வாழ்வாதாரத்தில் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர். போரால் பாதிக்கப்பட்டு மீளக்குடியமர்ந்த மக்கள் தமது வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்வதற்கு உதவி செய்வார்களா? வடமாகாண சபை அமைந்து விட்டது. இனிமேல் எமது வாழ்வில் ஒளி வீசும் என்று நினைத்திருக்கும் மக்களின் எண்ணாங்களை வடமாகாணசபை பூர்த்தி செய்யுமா? அந்தப் பகுதி மக்களில் கூடுதலானவர்கள் விவசாயத் தொழிலையே நம்பி வாழ்ந்த வர்கள். எவர் கையிலும் தங்கி வாழாது தாம் உண்டு தம் உழைப்பு உண்டு என்று வாழ்ந்தவர்கள். ஆனால் இன்று அதற்கான வழியினை ஏற்படுத்திக் கொடுக்க எவராலுமே முடியாமல் இருக்கின்றது. அந்த மக்களின் முதல் பிரச்சினை தமது விவசாய நிலங்களை விட்டு இராணுவம் வெளியேற வேண்டும். அப்பொழுதுதான் தமது சொந்த நிலத்தில் விவசாயத்தை உரிமையோடு மேற்கொள்ள முடியும் என்று நம்புகிறார்கள். புலி வரும் பூனை வரும் என்று சொல்லி பாதுகாப்புக் காரணம் காட்டி இராணுவ முகாம்களை விவசாய நிலங்களில் இருந்து அகற்றாமல் இருந்தால் நாளை அந்த இடங்களில் விவசாயப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியாமல் போய்விடும் என்பதோடு அந்தப் பகுதி அபிவிருத்தி அடையாத ஒரு பிரதேசமாக காணப்படும் என்பது உண்மை. இந்த விடயம் சம்பந்தமாக இந்த மக்களைச் சந்தித்து பேசிய போது விவசாயத்தில் ஈடுபாடு உடையவர்களாகவும் விவசாயத் தொழில் சம்பந்தப்பட்ட அதிகாரியாகவும் தம்மை அடையாளப்படுத்துபவர்கள் பலர் வந்து எமது பிரதேசத்தை பார்த்துச் சென்றிருக்கிறார்கள். நாம் அவர்களுக்கு ஒன்றும் விடாமல் சொல்லி இருக்கிறோம். ஆனால் இராணுவத்தினர் எமது விவசாய நிலங்களை தம் வசப்படுத்தி வைத்திருக்கிறார்கள் என்று சொல்லும் போது மட்டும் மௌனமாக இருப்பார்கள். அதற்கான பதில் அவர்களிடத்தில் இருந்து வெளிவராததற்குக் காரணம் என்ன வென்று தான் தெரியாமல் இருக்கிறது. எமது விவசாய நிலத்தை விடுவிக்க மாட்டார்களா? விடுவிப்பார்களா? என்று கூடத் தெரியாமல் எமது எதிர்காலம் கேள்விக் குறியாக வுள்ளது.

### விவசாய நிலங்களை விடுவிக்க வேண்டும்

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் சம உரிமையுடன் வாழ வழியை ஏற்படுத்தி இருப்பதாக சொல்லும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எமது பிரச்சினையில் கண்டும் காணாமல் இருப்பதுதான் எமக்கு வேதனையைத் தருகிறது. நாட்டின் அரசு என்றால் அனைத்து மக்களையும் பாரபட்சம் இன்றிப் பார்க்க வேண்டும். அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண முன்வர வேண்டும். அப்பொழுதுதான் முழு மக்களுக்குமான அரசாக இருக்க முடியும். இல்லாது போயின் பிரிவினை என்ற வாதப் பிரதிவாதம் தொடர்ந்து கொண்டுதான் செல்லும்.

> பொது மக்களின் வளமான விவசாய நிலங்கள் மாத்திரமல்லாமல் வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சுக்கு உரித்தான பண்ணைகள் கூட இராணுவத்தினர் வசமே உள்ளன.

இராணுவத்தை வடக்கில் இருந்து எடுக்கமாட்டேன் என்று சொல்லும் ஜனாதிபதி இராணுவம் இருப்பது எமது விவசாய நிலத்தில் என்பதை கவனத்தில் எடுக்கிறார் இல்லை. மூன்று தசாப்த போரிற்கு முகம் கொடுத்த நாம் அந்த நாள்களில் கூட எமது வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கான காரியங்கள் பலவற்றை திறம்பட செய்திருக்கிறோம். அதில் விவசாயத் தொழிலின் வளர்ச்சி அதிகரித்துக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இன்று போர் முடிவடைந்து 4 ஆண்டுகள் கடந்த நிலையில் கூட மீளக்குடியமர்ந்த நாம் விவசாயத்தை மேற்கொள்ள முடியாமல் தவிக்கின்றோம். போர் இடம்பெற்ற காலப் பகுதியில் விவசாயத் தொழிலை மேற்கொண்ட அளவுக்கு ஆவது இன்று அந்தத் தொழிலை செய்ய முடியாமல் தவிக்கின்றோம். விவசாய நிலங்களை இராணுவம் விடுவிக்குமாயின் விவசாயத் தொழிலை நாம் மேற்கொண்டு எமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்த நம்பிக்கைக்கு இராணுவமே பொறுப்புக் கூற வேண்டும் என்று அந்த மக்கள் தெரிவித்தார்கள். அந்த விவசாய மக்களுக்கு அரசு உதவி செய்வதாயின் முதலில் அவர்களின் விவசாய நிலங்களை இராணுவத்தின் பிடியில் இருந்து விடுவித்து அவர்களின் கையில் கொடுக்க வேண்டும் இதனை அரசு செய்யுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தில் மாணவி காயம்

தென்மராட்சி, நவ.15

பாடசாலையிலிருந்து சென்ற 7 வயது மாணவியை வீதியில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் மாணவி காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த சாந்தன் பிரேமினி (வயது-7) என்னும் மாணவி காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டவராவார்.

இதேவேளை, விளையாட்டில் ஓடிய சிறுவன் வீதியோரக் கிணற்றில் வீழ்ந்தான்.

இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த ஜெகநாதன் கோபிராஜ் (வயது4) என்னும் சிறுவனே கிணற்றில் வீழ்ந்தவராவார்.

அவரைத் துரத்திச் சென்ற ஏனைய சிறுவர்கள் கூக்குரலிட்ட தால் அயலவர்கள் சிறுவனைக் காப்பாற்றி மருத்துவ மனையில் சேர்த்தனர். (வ-9)




கிளிநொச்சி மாவட்டப் பாதுகாப்புப் படைத் தலைமை அலுவலகத்தில் தீபாவளி தின விழா கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. மாவட்ட கட்டளைத் தளபதி உதயபெரேரா தலைமையில் ஒத்துழைப்பு மத்திய நிலையத்தில் நடைபெற்ற விழாவில் மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன், கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், வலயக் கல்விப் பணிப்பாளர் கே.முருகவேல் உட்பட மாவட்ட திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் மதகுருமார், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். கொழும்பு பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (வ-9)

# மன்னார் முசலி பிரஜைகள் குழுவின் செயற்பாடுகளை குழப்ப நடவடிக்கை

## அதன் அமைப்பாளர் ஊடகங்களுக்கு அறிக்கை

மன்னார், நவ.15

பிரஜைகள் குழுவின் செயற்பாடுகளைக் குழப்புவதற்கு புலனாய்வுத்துறையினர் நடவடிக்கை மேற்கொள்வதாக மன்னார் முசலிப் பிரதேச பிரஜைகள் குழுவின் அமைப்பாளர் எஸ். சுனேஸ் சோசை தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:-

முசலி பிரதேச பிரஜைகள் குழு 2010ஆம் ஆண்டு தொடக்கம் செயற்பட்டு வருகின்றது. தற்போது புலனாய்வுப்பிரிவினர் என்னிடமும், பிரஜைகள் குழு உறுப்பினர்களிடமும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். எமது பிரஜைகள் குழு மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்கின்றது.

கடந்த 5 ஆம் திகதி வெளிநாட்டு அதிகாரி ஒருவர் எமது பிரஜைகள் குழுவைச் சந்திப்பதற்காகவும் எமது செயற்பாடுகளை கேட்டறிவதற்காகவும் இங்கு வருகை தந்தார்.

அதன்போது இடம் பெற்ற கூட்டத்தில் பிரதேச சபைச் செயலாளர் மற்றும் கிராம மக்கள் 40 பேர் வரை கலந்து கொண்டனர்.

பிரதேச சபைச் செயலாளரிடம் மக்கள் சில வினாக்களை எழுப்பியதுடன் அவற்றுக்கான பதி லைக் கேட்டறிந்து தெளிவு பெற்றுக்கொண்டார்கள்.

ஆனால் புலனாய்வுதுறை அதிகாரிகள் மக்களின் வீடுகளுக்குச் சென்று கூட்டத்துக்குத் தலைமை தாங்கியவர் யார், கலந்து கொண்ட மக்கள்யார் என்பன போன்ற விடயங்கள் தொடர்பாக விசாரித்து அறிந்துள்ளார்கள்.

இந்தச் செயற்பாடு மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

முசலி பிரதேச பிரஜைகள் குழுக் கூட்டத்தில் இடம் பெறும் விடயங்கள் தொடர்பாகப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் எழுத்து மூலம் கேள்விகளைச் சமர்ப்பித்தால் எம்மால் உரிய தகவல்களை வழங்க முடியும்-என்று தெரிவித்தார். (க-எ-12)

## கரவெட்டியில் 'தேசத்தின் நிழல்' மர நடுகைத் திட்டம்

நெல்லியடி, நவ.15

கரவெட்டி பிரதேச செயலகத்தினால் 'தேசத்தின் நிழல்' தேசிய மர நடுகைத் திட்டம் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு கரவெட்டி மத்தியிலுள்ள கரவை தச்சன் தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக கரவெட்டிப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஒ-35)



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா



**மேடம்:** எடுத்த வேலைகளை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். அசதி, சோர்வு வந்து நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியை அனுசரித்துப் போங்கள்.



**இடபம்**: சோர்வு, அலைச்சல் நீங்கி ஆனந்தமாகக் காணப்படுவீர்கள். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். அரசியல்வாதிகளின் ஆதரவு கிட்டும். பயணங்களால் ஆதாயம் உண்டு.



**மிதுனம்**: நீண்ட நாள் எண்ணங்கள் பூர்த்தியாக முயற்சிப்பீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மன உளைச்சல் நீங்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.



**கடகம்** : மன உறுதியுடன் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் மகிழ்ச்சி யுண்டு. வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.



**சிங்கம்**: திடீர்திடீரென்று எதையோ இழந்ததைப்போல் இருப்பீர்கள். அநாவசியமாக யாருக்காகவும் எந்த உறுதிமொழியும் வழங்க வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாகப் பழகுங்கள்.



**கன்னி**: புதிய முயற்சிகள் வெற்றி தரும். முன்கோபம் விலகும். பிரியமானவர்களைச் சந்தித்து பொழுதைக் கழிப்பீர்கள். அலுவலகப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**நாளை**

ஐப்பசி-30 சனிக்கிழமை 16.11.2013
திதி: சதுர்த்தசி மு.இ.08.22 வரை
நட்சத்திரம்: அஷ்வினி மு.ப.11.24 வரை
சுபநேரம்: 03.07 - 04.37 வரை
இராகுகாலம்: 09.07 - 10.37 வரை



**துலாம்**: உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீகள்.



**விருச்சிகம்**: புதுப்பொலிவுடன் காணப்படுவீர்கள். முன்கோபம் விலகும். அரசுக் காரியங்களில் அனுகூலம் உண்டு. அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.



**தனுசு**: செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும்.



**மகரம்**: வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்கள் உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள்.



**கும்பம்**: தன்னம்பிக்கை துளிர்விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சியுண்டு. உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும்.



**மீனம்**: சிக்கலான, சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். சிலர் உங்களை குறை கூறினாலும் அதைப் பெரிதாக்க வேண்டாம். உத்தியோகத்தில் மறதியால் பிரச்சினைகள் வந்து நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | 4 | | | 1 | 9 | | |
| 9 | | | | 8 | | | 6 | 3 |
| 1 | | 6 | | | | 7 | | 2 |
| 6 | | 7 | | 4 | | | | |
| 4 | 3 | | 5 | | 2 | | 7 | 9 |
| | | | | 1 | | 6 | | 4 |
| 5 | | 9 | | | | 3 | | 7 |
| 8 | 1 | | | 3 | | | | 6 |
| | | 3 | 4 | | | 5 | | 1 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 8 | 5 | 1 | 4 | 3 | 6 | 7 |
| 4 | 7 | 5 | 6 | 8 | 3 | 9 | 2 | 1 |
| 6 | 1 | 3 | 9 | 7 | 2 | 8 | 4 | 5 |
| 9 | 2 | 6 | 7 | 5 | 8 | 4 | 1 | 3 |
| 3 | 5 | 1 | 4 | 6 | 9 | 7 | 8 | 2 |
| 8 | 4 | 7 | 2 | 3 | 1 | 5 | 9 | 6 |
| 7 | 8 | 2 | 3 | 9 | 6 | 1 | 5 | 4 |
| 1 | 3 | 4 | 8 | 2 | 5 | 6 | 7 | 9 |
| 5 | 6 | 9 | 1 | 4 | 7 | 2 | 3 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனம் நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.





ஸ்மார்ட் கைபேசிகளின் உதவியுடன் இயக்கக்கூடிய இந்தக் காரில் 2 பேர் பயணிக்கக்கூடியதாக இருப்பதுடன் இதன் சோதனை முயற்சி ஒன்று அமெரிக்காவில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

## கூகுளின் மற்றுமொரு புதிய முயற்சி

இணைய உலகைக் கலக்கிவரும் கூகுள் நிறுவனமானது இலத்திரனியல் துறையில் பல்வேறு சாதனைகளையும் படைத்து வருகிறது. இதன் ஓர் அங்கமாக தற்போது சாரதி அற்ற கார்களை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. ஸ்மார்ட் கைபேசிகளின் உதவியுடன் இயக்கக்கூடிய இந்தக் காரில் 2 பேர் பயணிக்கக்கூடியதாக இருப்பதுடன் இதன் சோதனை முயற்சி ஒன்று அமெரிக்காவில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.
இதேவேளை இக்காரானது 2015 ஆம் ஆண்டளவில் அறிமுகப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.



## 24 கரட் தங்கத்தில் அப்பிள் தயாரிப்புக்கள்

கைபேசி மற்றும் ரேப்லட் உற்பத்தியில் கொடிகட்டிப் பறக்கும் அப்பிள் நிறுவனம் மற்றுமொரு புது முயற்சியில் இறங்கியுள்ளது. அதாவது 7.9 அங்குல அளவுடைய Retina தொடுதிரையினைக் கொண்ட 24 கரட் தங்கத்தாலான iPad Mini மற்றும் iPad Air சாதனங்களை தயாரித்து அறிமுகப்படுத்தவுள்ளது.
இச்சாதனங்களின் விலையானது ஏறத்தாழ 1500 யூரோக்களாக காணப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செயற்கைக் குரல் வளை ஜப்பான் விஞ்ஞானிகள் உருவாக்கிச் சாதனை



மனிதன் கதைக்கும்போது குரல் வளையிலுள்ள குரல் நாண்கள் அதிர்வதன் மூலம் ஒலி பிறப்பிக்கப்படுவது யாவரும் அறிந்ததே. இந்த இயற்கையின் விந்தையை தற்போது செயற்கையாக நிகழ்த்திக் காட்டியுள்ளனர் ஜப்பான் விஞ்ஞானிகள்.
அதாவது மனிதனின் குரல் வளைக்கு ஒத்த செயற்கையான குரல்வளையை உருவாக்கியுள்ளனர்.
இதன்மூலம் குரல்வளையிலிருந்து எவ்வாறு ஒலி பிறப்பிக்கப்படுகின்றது என்பதை துல்லியமாக விவரிக்கக்கூடிய வாறு இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## குழந்தைகளுக்கான சம்சங் கலக்ஸி ரப் 3 அறிமுகம்

குழந்தைகள் பயன்படுத்தக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட ரேப்லட் ஒன்றை சம்சுங் நிறுவனம் அறிமுகப்படுத்தவுள்ளது.
எதிர்வரும் 10 ஆம் திகதி அமெரிக்காவிலும் தென் கொரியாவிலும் அறிமுகப்படுத்தப்படவுள்ள இந்த ரேப்லட்டை விரைவில் ஏனைய நாடுகளிலும் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
7 அங்குல தொடுதிரையைக் கொண்ட இந்த ரேப்லட் கூகுளின் அன்ரோயிட் - 4.1 ஜெலி பீன் இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண் டுள்ளது.
மேலும் 1.2GHz வேகத்தில் செயலாற்றும் Processor, 1GB RAM ஆகியவற்றையும் 8GB சேமிப்பு நினைவகத்தையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
இவற்றுடன் 3 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 1.3 மெகாபிக்சல்கள் உடைய துணையான கமரா போன்றனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.




## பேஸ்புக் லைக் வசதியில் மாற்றம்



தற்போது இணையத்தளங்கள் மற்றும் வியாபார நிறுவனங்கள் தம்மை பிர பலப்படுத்திக்கொள்வதற்காக பேஸ்புக் தளத்தினை பயன்படுத்தி வருகின்றமை மறுக்க முடியாத ஒன்றாகும்.
இதற்காக பேஸ்புக் ஆனது லைக் பேஜ் வசதியினை ஏற்படுத்தியுள்ளது.
இந்த வசதியில் இதுவரை காலமும் காணப்பட்ட கைவிரல் அடையாளம் தற்போது நீக்கப்பட்டுள்ளது.
நாள்தோறும் சுமார் 22 பில்லியனிற்கும் மேற்பட்டவர்கள் இந்த கைவிரல் அடையாளப் பொத்தானை கிளிக் செய்து வந்ததோடு, 7.5 மில்லியன் வரையான இணையத் தளங்களில் இவை இணைக்கப்பட்டிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## திடகாத்திரமாக வாழ உதவும் ஸ்மார்ட் வோச்

நாம் திடகாத்திரமாக வாழ்வதற்கு அன்றாடச் செயற்பாடுகளை சரியான ஒழுங்கு முறையில் பின்பற்றுவதுடன் உடற்பயிற்சிகளையும் சீரான முறையில் மேற்கொள்வது அவசியமாகும்.
தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக இதற்கு பல்வேறு உபகரணங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
அவற்றின் தொடர்ச்சியாக Body IQ எனும் ஸ்மார்ட் வோச் வடிவிலான மற்றுமொரு உபகரணம் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
இது அன்றாட நடவடிக்கைகளை கண்காணிப்பதோடு பிடித்தமான நடத்தல், ஓடுதல், நித்திரை செய்தல் போன்ற செயன்முறைகளை தொடுதிரையில் காட்டக்கூடியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரோல் நிகழ்வு நாளை

தென்மராட்சி, நவ.15

கைதடி நவீல்ட் பாடசாலை கரோல் நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## நூலகத்துக்கு ரி.வி அன்பளிப்பு

தென்மராட்சி, நவ.15

வரணி பொது நூலகத்துக்கு ரி.வி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. வரணியைச் சேர்ந்த சி.கணபதிப்பிள்ளை என்பவர் ரி.வியை செவ்வாய்க்கிழமை நூலகத்தில் நடைபெற்ற தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வில் வைத்து பிரதேச சபைத் தலைவரிடம் கையளித்தார். மாணவர்களுக்கு கற்றலுடன் கூடிய படக் காட்சிகள் காண்பிக்க ரி.வி பயன்படுத்தப்படும் என தலைவர் சி.துரைராசா தெரிவித்தார். இந்த நிகழ்வில் வரணிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் நூலக பயன்பாட்டுக்கு நூல்களை தலைவரிடம் அன்பளிப்பாக வழங்கினர். (வ-9)

## இறைவரித் திணைக்கள பிராந்திய அலுவலக பொன்விழா

யாழ்ப்பாணம், நவ. 15

உள்நாட்டு இறைவரித் திணைக்கள யாழ்.பிராந்திய அலுவலகத்தின் பொன்விழா நிறைவையொட்டிய பொன்விழா நிகழ்வுகள் எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 9 மணிக்கு நல்லூர் நடராஜா பரமேஸ்வரிமணிமண்டபத்தில் நடைபெறும் என்று பிராந்திய அலுவலக பிரதி ஆணையாளர் அறிவித்துள்ளார். (வ-9)

---

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **கந்தையா மகாலிங்கம்**

திதி: திரயோதசி 15.11.2013

பிறப்பு 14.02.1951 — இறப்பு 13.11.2008

மாண்டு பிரிந்து போனாலும்
மறக்கமாட்டோம் எம் அப்பனே!
ஆண்டுகள் ஐந்து ஆனாலும்
ஆறாது எம் கவலை
எம் கவலை சொல்லியழ
புவி தன்னில் யாருமில்லை

உங்கள் பிரிவில்....
மனைவி,
பிள்ளைகள், மருமகன்.

முனாமலை லேன்,
சுதுமலை மேற்கு,
மானிப்பாய்

(40118) (3.6.4)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 04.08.1931

மறைவு 16.10.2013

அமரர் **புவனேஸ்வரி காங்கேசன்**

*முப்பத்தொரு நாள்கள் ஆகிவிட்டன*
*ஆனால் எங்கள் ஆறாத்துயர் இன்றும் ஆறவில்லை*
*ஆண்டவன் திருவடியை அடைந்து*
*ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்*

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

T.ஞானேஸ்வரன்,
சகோதர, சகோதரிகள்.

(38652)(12.4.3)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலையில்
தற்போது கற்பித்துக்
கொண்டிருக்கும் ஆசிரியர்
திருமதி விமலேஸ்வரி
சிவநாதன் அவர்களின்
அன்புத் தந்தை

**முருகுப்பிள்ளை கார்த்திகேசு**

(கரம்பைக் குறிச்சி கிழக்கு,
வரணி) அவர்கள்
16.10.2013 அன்று
சிவபதமடைந்தார்.

இன்று (15.11.2013) வெள்ளிக்கிழமை
முப்பத்தோராம் நாளில் அன்னாரது ஆத்மா
சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

பாடசாலைச்சமூகம்
யா/குடமியன் அ.த.க. பாடசாலை
குடமியன், வரணி.

(29699)(3.6.4)

---

# நினைவு அஞ்சலி

சுமதி தெய்வேந்திரா (நோர்வே) — பேரம்பலம் பிரதீபன் (புதுமுறிப்பு)





தாயின் மடியில் 26.07.1967 — ஆண்டவன் அடியில் 01.01.2000

தாயின் மடியில் 13.03.1981 — ஆண்டவன் அடியில் 15.11.2000

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும்,
உருத்திரபுரம் புதுமுறிப்பை வசிப்பிடமாகவும் கொண்டவர்கள்
பாசமழை பொழிந்து நேசக்கரம் காட்டி
ஆசை வார்த்தை கூறி
எம்மை அரவணைக்க வந்த எம் குடும்பத்தின் குல விளக்குகளே!
14ஆம் ஆண்டும், 5ஆம் ஆண்டும்
முடிந்தே போனதையா!
ஆறுமா எம் துயரம்?
வாழும் வரை தீராது!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

உங்கள் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அண்ணா நந்தன் (அமெரிக்கா),
சுதாகரன் (கச்சேரி), வளர்மதி (ஆசிரியை)
அத்தான் தயாளன், அக்கா கோமதி,
மருமக்கள், பெறாமக்கள்.

பேரம்பலம்,
சுமதி அரைக்கும் ஆலை, புதுமுறிப்பு,
கிளிநொச்சி

(37548)(12.3)

---

ஓம் ஸ்ரீசாயி ராம்

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 17★08★1949 — உதிர்வு 15★11★2006

மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையைப்
பிறப்பிடமாகவும் கொழும்பு மட்டக்குளியை
வதிவிடமாகவும் கொண்ட

திருமதி
**நேசமலர் சின்னத்துரை**

திதி: பூர்வபட்சஏகாதசி

தடைக்கற்களைப் படிக்கற்களாக்கித் தரணியில்
தலை நிமிரவைத்த தங்க அம்மாவே!
புன்னகை பூக்கும் பூ மகளே கண்ணெனக் காத்த கண்மணியே
ஆண்டுகள் ஏழு ஆனாலும் உங்கள் அன்பு முகத்தை
மறக்க முடியவில்லையே!
அம்மா உங்கள் நினைவுகள் எம் மனதை விட்டு
என்றும் அகலாது நிறைந்து இருக்கும்

*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல*
*கரைப்பிரான் ஆதி விநாயகப் பெருமானையும்*
*ஸ்ரீ வீர மா பிடாரி அம்பாளையும் வேண்டுகின்றோம்.*

என்றும் உங்கள் நினைவுகளோடு
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

தகவல்: கணவர், பிள்ளைகள்.
021 221 3058

---

# ஒன்பதாவது ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 27.05.1933 — விண்ணில் 15.11.2004

அமரர்
**அந்தோனிப்பிள்ளை இராயப்பு**

*தீங்கு அனைத்திலிருந்தும் அவர் என்னை விடுவித்து*
*தம் விண்ணரசில் சேர்த்து எனக்கு மீட்பளிப்பார்*
*(2 திமொத்தேயு 4:18)*

குடும்பத்தின் தலைவனாய்
குவலயம் போற்ற வாழ்ந்த வழிகாட்டியே!
எம் உள்ளத்திலும் இல்லத்திலும்
நீங்காது இடம் பிடித்தவரே!
ஆலமர விழுதாய் எம்மையெல்லாம்
தாங்கிய நீங்கள் மண்ணில் விதையாகி
ஒன்பது ஆண்டுகளாகிவிட்டன.
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
நீங்காது தொடரும் உம் நினைவுகள்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (15.11.2013) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு மிருசுவில் யோசப் ஆச்சிரமத்திலும், யாழ்ப்பாணம் அருள் ஆச்சிரமத்திலும் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரது [illegible]
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

தவசிகுளம்,
மிருசுவில்.

(40105) (7.6.3)

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 45 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 27.03.1993

மறைவு 30.09.2013

திதி: ஏகாதசி

சிவத்திரு க.முருகன் ஆச்சாரி அவர்களினதும்
சிவத்திரு கா.மாரிமுத்து ஆச்சாரி அவர்களினதும்
பேர்த்தியுமான

திருமதி **கீர்த்தனா சதீஸ்குமார்**

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி A/L 2012)

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே நீ மறைந்து
நாற்பத்தைந்து நாள்கள் ஆனாலும் உன் நினைவு
நெஞ்சைவிட்டு மறையவில்லையே!!
மழலை மொழி பேசி அனைவரின் மனதிலும்
இடம் பிடித்தாயே!!
இன்று நீ எம்மை விட்டு எங்கு சென்று விட்டாய்?
நித்தம் உன் நினைவுடன் நாங்கள்

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு
நேரில் வந்து துயரில் பங்கெடுத்த
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்,
அயலவர்கள் மற்றும் வெளிநாட்டிலும்
உள்நாட்டிலும் இருந்து தொலைபேசி
மூலம் தொடர்பு கொண்டு அனுதாபம்
தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர்
அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் இரங்
கல் உரையை நிகழ்த்தியவர்களுக்கும்
எமது மனமார்ந்த நன்றியைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.527, நாவலர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணத்திலுள்ள சொர்ணாம்பிகை
மண்டபத்தில் (TCT) இன்று (15.11.2013)
வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில்
நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும்
மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.
இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

(40101)(2.3) — *கணவர்* சதீஸ்குமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ-து) கொடிகாமம்
## பணிநிலை வெற்றிடம்

எமது சங்கத்தின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள 3 பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

01. பதவி:- களஞ்சிய முகாமையாளர் 208/15 வெற்றிடம் 06 (ஆண்பாலார் மட்டும்)
சம்பள அளவுத்திட்டம்:- 9450- 75X10- 80X10- 11000 (66/2006இன் படி)

தகைமைகள்:-

அ) கூட்டுறவுப் பணியாளரின் 16ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 17 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தரம்)பத்திரம்/க.பொ.த(சாதாரண தரத்தில்) 2 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம்/தூய கணிதம், சிங்களம்/தமிழ் பாசை என்பவற்றினை உள்ளடக்கிய 06பாடங்களில் சித்தி சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

கணினி அறிவு முக்கியமானதாக கவனத்திற் கொள்ளப்படும்.

02. பதவி:- எழுதுனர் 302/15 வெற்றிடம் 03
சம்பள அளவுத்திட்டம்:- 9450- 75X10 -80X10- 11000 (66/2006இன் படி)

தகைமைகள்:-

அ) கூட்டுறவுப் பணியாளர் 16ஆவது சம்பளத்திட்டத்தில் (108/81 சுற்று நிருபத்திற்கமைய) எழுதுனர் பதவியில் இரண்டு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) க.பொ.த.(சாதாரண தரத்தில்) கணிதம்/வர்த்தக எண்கணிதம்/எண்கணிதம், சிங்களம்/தமிழ்ப் பாசை உட்பட 06 பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத முயற்சிகளில் சித்தியும், கூட்டுறவு சங்க எழுதுனர் பதவியொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

கணினி அறிவு முக்கியமானதாக கவனத்திற் கொள்ளப்படும்.

03. பதவி:- எரிபொருள் நிரப்புனர் 313/ 16 வெற்றிடம் 03 (ஆண்பாலார் மட்டும்)
சம்பள அளவுத்திட்டம்: 9200- 70X10- 75X10- 10650 (66/2006இன் படி)

தகைமைகள்:-

அ) கூட்டுறவுப் பணியாளர் 17ஆவது சம்பளத்திட்டத்தில் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) எட்டாம் வகுப்பு கல்வி தராதரப் பத்திரம்.

குறிப்பு:-

* விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதுக்கு மேற்பட்டவராகவும், 45 வயதுக்கு குறைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.
* சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது
* சங்கப் பணியாளர்களுக்கும் சங்க எல்லைக்குட்பட்டவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
* சங்கங்களில் கடமையாற்றுவோர் விண்ணப்பிப்பதாயின் தாங்கள் தொழில் செய்யும் சங்கத்தினூடாக தலைவரின் சிபார்சுடன் விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.
* விண்ணப்ப படிவங்களை சங்க அலுவலகத்தில் ரூபா 30/= செலுத்திப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
* தெரிவு செய்யப்படுமிடத்து சங்கத்தினால் கோரப்படும் ஆதனப்பிணை, ரொக்கப்பிணை என்பனவற்றை செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை :-

மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை சங்க தலைமைக் காரியாலயத்தில் பெற்றுப் பூரணப்படுத்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிக்கான விண்ணப்பப் பெயரினை குறிப்பிட்டு "பொதுமுகாமையாளர், தென்மராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை வீதி கொடிகாமம்". என்னும் முகவரிக்கு 29.11.2013ஆம் திகதிக்கு முன்பதாக கிடைக்க கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

15.11.2013 (சி/2785) (7.6.3) **பொதுமுகாமையாளர்**

## நகராட்சிமன்றம், சாவகச்சேரி
### கேள்வி அறிவித்தல்
### நகரமண்டப மிகுதி வேலை (கட்டம் 3)
ஒப்பந்த இல: NP/14/41(3) / 02/CF/16/2013

1. தவிசாளர், சாவகச்சேரி நகராட்சிமன்றம், சாவகச்சேரி நகராட்சி மன்றம் சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ் காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட கட்டட நிர்மாண வேலைகளுக்கு கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. கேள்வி கோர தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டடம் அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள், செயலாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி, Te.No 021 227 0041 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 27.11.2013ஆம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 9.00 மணி முதல் மாலை 14.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தவிசாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி எனும் இடத்திலிருந்து 15.11.2013ஆம் திகதியிலிருந்து 27.11.2013 வரை காலை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2,000/= செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
6. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி (Te.No. 021 227 0041) எனும் முகவரிக்கு 29.11.2013ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
7. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 77 (எழுபத்து ஏழு - 14.02.2014) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
8. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (Rs.Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (Rs.) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(3)/02/CF/ 16/2013 | நகரமண்டப மிகுதி வேலை (கட்டம் 3) | 6.025 | 45Days | C7 அல்லது அதற்கு மேல் | 60,250.00 | 17.03.2014 |

இ.தேவசகாயம்பிள்ளை,
தவிசாளர்,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.
14.11.2013

(சி/2787) (7.6.3)

## நீண்ட இடைவெளிக்குப் பின்

வாடிக்கையாளர்களுக்கு நற்செய்தி

## மன்னாரில் ஹொண்டா

**Stafford Motor Company இன்**

அங்கீகாரம் பெற்ற முகவர்களாக Honda மோட்டார் சைக்கிள்களையும்
அசல் உதிரிப்பாகங்களையும் விற்பனைக்கு பிந்திய சேவையினையும்
பல வருடங்களாக வவுனியா மண்ணில் வழங்கி
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பைப் பெற்ற



## N.S.Ratnam Bros.

இன்று (15.11.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு
மன்னார் மண்ணில் இல.11, வைத்தியசாலை வீதியில் புதிய Honda காட்சியறையை
கோலாகலமாகத் திறந்து வைப்பதில் பெருமையடைகின்றனர்.

Honda வாடிக்கையாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## N.S.Ratnam Bros.

இல.11, வைத்தியசாலை வீதி, மன்னார்.

தொடர்புகளுக்கு
077 672 2084



(40128)(2.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
30.12.1951



மறைவு
16.10.2013

## திருமதி தயாளபூபதி மகேந்திரராஜா

கடந்த 16.10.2013 புதன்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவியின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (15.11.2013) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

அத்துடன் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு நேரிலும், தொலைபேசியிலும் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

131/4, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
T.P : 021 222 0237

சிவகுரு.மகேந்திரராஜா
(கணவர்)

(40124) (7.3)

### இரத்த தான நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.15

பிகாஸ் கம்பஸ் இன் மாணவர்களும் யாழ். போதனா வைத்திய சாலையின் குருதி வங்கியும் இணைந்து நடத்தும் இரத்ததான முகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பிகாஸ் கம்பஸில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் 60 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இரத்த தானம் செய்யவுள்ளனர். இதில் இரத்ததானம் செய்ய விரும்பும் மக்களும் கலந்து கொள்ளலாம். இரத்ததானம் செய்வோருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

### பனம் பாத்தி போடுவதில் ஆர்வம்

சுழிபுரம், நவ.15

சுழிபுரம் பகுதியில் தற்போது பெய்த மழையைத்தொடர்ந்து பனம் பாத்தி போடுவதில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர். அதிக மழை பெய்ததைத் தொடர்ந்து ஆங்காங்கே பாத்திகள் போடப்பட்டு வருகின்றன. (ந-28)

### பரிசளிப்பு விழா

நீர்வேலி சி.சி.த.க.பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் இ.பசுபதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி, சிறப்பு விருந்தினராக கோப்பாய் வலய கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.சற்குணராசா ஆகியோர் கலந்துகொள்வர். (ந)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

மலர்வு
14-09-1955



உதிர்வு
16-10-2013

அமரர்
## அம்பலம் நவநீதராசா

திதி: துவாதசி (15.11.2013)

முப்பத்தோர் நாள்கள் முற்றுப்பெற்றன-எனினும்
முத்தான உம் நினைவுகள் முடிவுறாசரிதமாய்
நெஞ்சில் நின்று நீங்காது பதிந்து
நெருடவைக்கும் நெகிழ வைக்கும்
உங்கள் ஆத்மாசாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இன்றைய
ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(கிரியை நடைபெறும் இடம்-கந்தன் இல்லம்
தேவரையாளி, அல்வாய் மேற்கு)

நாவலடி, உடுப்பிட்டி
குடும்பத்தினர்.

# துயரம் நிறைந்த 10 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் வெலிச்சோர் மைக்கல்

(முன்னாள் உரிமையாளர் - மைக்கல் றேடியோ சேவிஸ்)

மண்ணில்: 23.02.1935 விண்ணில்:15.11.2003

760, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி.

(40125)(2.3)

# 19ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
27.11.1949

ஆண்டவன் அடியில்
17.11.1994



## அமரர் சிவகுரு நவரத்தினம்

(உரிமையாளர்: கனகா பத்திரிகை விற்பனையகம்)

திதி: திரயோதசி

ஆண்டுகள் பத்தொன்பது ஓடிவிட்டன
ஆனாலும் அழியவில்லை எம் மனத்துயரம்
அன்பையும் அரவணைப்பையும்
எம் மீது கொட்டி
எமக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்த
எமது அன்புத் தெய்வமே!
எம்மையெல்லாம் துன்பக் கடலிலே தவிக்கவிட்டு
நீங்கள் சென்றாலும் நாம் என்றென்றும்
உங்கள் நினைவுடனே வாழ்கின்றோம் அப்பா.

நி.மு:- 'கனக இல்லம்', கைதடி கிழக்கு, கைதடி.
த.மு:- இல.60, பலாலி வீதி, திருநெல்வேலி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்.

(40126)(2.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயப்பன் உற்சவப் பெருவிழா

கிளிநொச்சி, நவ.15

கிளிநொச்சி வட்டக்கச்சி சில்வா வீதி, அருள்மிகு சபரி ஐயப்பன் ஆலய உற்சவப் பெருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனை களுடன் ஆரம்பமாகும். முற்பகல் 10 மணிக்கு கன்னிமூலக் கணபதியின் முன்னிலையில் குருசாமியினால் ஐயப்பன் மாலை அணியும் நிகழ்வு நடைபெறும். தொடர்ந்து விசேட பூசையும் மகேஸ்வர பூசையும் இடம்பெறும். எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் அபிஷேக ஆராதனைகளுடன் பூசை தினமும் நடைபெறும். (ஒ)

## கணித பாடசெயலமர்வு

நெல்லியடி, நவ.15

வடமராட்சி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தரம் 9,10, 11 இற்கான கணித பாட விசேட செயற்றிட்டம் சம்பந்தமான விழிப் புணர்வுச் செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் அமைந்துள்ள கணித மூலவள நிலையத்தில் ஆரம்பமாக வுள்ளதாக கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-35)

## விநாடி விடை போட்டி இன்று

யாழ்ப்பாணம், நவ.15

சம்பத் வங்கியின் யாழ்.கிளை யாழ்.கல்வி வலயப் பாட சாலைகளுக்கு இடையே நடத்தும் விநாடிவிடைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கிறீன்கிறாஸ் ஹோட்டல் சங்கிலியன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சம்பத் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் பி.சங்கர், சிறப்பு விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் ஆகியோரும் கலந்து கொள்ள வுள்ளனர். (ஒ-23)

**காணி விற்பனைக்கு**

ஊரெழு கிழக்கு கலைவாணி முன்பள்ளி ஒழுங்கை யில் 7 பரப்பு 11 குழி காணி விற்பனைக்குண்டு.

தொ.பே: 077 729 3492 (29697) (7.6.3)

**விற்பனையாளர் தேவை**

எமது ஸ்தாபனத்திற்கு கொழும்பில் தங்கியி ருந்து வேலை செய்வதற்கு விற்பனையாளர் தேவை. தங்குமிட வசதியும் மூன்று நேர உணவும் வழங்கப்படும். ஆரம்ப வேதனம் ரூபா 10000/= விலிருந்து வழங்கப்படும். ஆண்கள் மட்டும். வயது 18 - 22 வரை.

தொ.பு: 11A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 3857 (40134) (7.6.3)

**காணி விற்பனைக்கு**

எழுதுமட்டுவாள் தெற்கில் 17½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொ.பே: 077 722 5027 (40129) (7.6.3)

**விற்பனைப் பிரதிநிதிகள் தேவை**

மாதாந்தம் ரூபா 25000/= தொடக்கம் ரூபா 30000/= வரை கமிஷனாகப் பெறலாம்.
உணவு, தங்குமிடம் இலவசம்.
**சுஜித் என்ரபிறைசஸ்**
டச்சு வீதி, சாவகச்சேரி.
(பழனி ஆண்டவர் ஆலய முன்பாக)
T.P : 021 227 0586 (சி/2786) (7.6.3)

NSB National Savings Bank

**மீட்கப்படாத அடகு நகைகளின் ஏலவிற்பனை**

தேசிய சேமிப்பு வங்கியின் பின்வரும் கிளை களில் 30.06.2012 வரையிலும் அடகு வைத்து குறிப் பிட்ட காலப்பகுதிக்குள் மீட்கப்படாத நகைகள் (23.11.2013) சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அந்தந்தக் கிளைகளில் நடைபெறும் ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

கிளை விபரம்:

01.யாழ்ப்பாணம்
02.ஊர்காவற்றுறை
03.நெல்லியடி

இந்த ஏலவிற்பனையை இரத்துச்செய்யும் அல்லது பிற்போடும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

பிராந்திய முகாமையாளர் (வடக்கு)
தேசிய சேமிப்பு வங்கி.
(40127) (7.6.3)

**விற்பனைக்கு**

பருத்தித்துறை பிரதான வீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் "ராஜா சுவைச்சோலை" என்னும் உணவகம் கடையில் இருக்கும் பொருள்களுடன் விற்பனைக்குண்டு.

தொ.பே: 077 360 8507 (சி/12289) (7.6.3)



சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் பழைய மாணவன் மருத் துவர் ச.அம்பிகைபாகன் பாடசாலை முகப்புப் பெயர் வளைவைத் தனது தந்தையாரின் நினைவாக அமைத்து வழங்கியுள்ளார். இந்தப் பெயர் வளைவு வியாழக் கிழமை திறந்து வைக்கப்பட்டது. (ந-9)

## தையல் பயிற்சி ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.15

யாழ்.கொக்குவில் வடகிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தையல் பயிற்சி ஆரம்ப நிகழ்வு சங்கத் தலைவர் திருமதி ரவிதாஸ் தலைமையில் இன்று மதியம் 12 மணியளவில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மாலினி பாஸ்கரனால் ஆரம்பித்து வைக்கப்படும். இந்த நிகழ்வில் திருமதி ராஜமனோகரி ஜெயகாந்தன் பயிற்சிகளை வழங்கவுள்ளார். (எ)

## உறவினர் தொடர்பு கொள்க

அச்சுவேலி, நவ. 15

அச்சுவேலி மேற்கு கிராம அலுவலர் பிரி வுக்குட்பட்ட தோப் பில் சிவில் பதிவு ஆவணங்கள் எது வும் இன்றி பொது இடத்தில் தங்கி வாழும் 80 வயது முதியவர் இளையதம்பி இராசையா வின் உறவினர்களை வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு சமூக சேவை அலுவலர் திருமதி முகுந்தன் விஜயகுமாரி அறிவித்துள்ளார்.

இவர் காங்கேசன் துறை தையிட்டிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த நிலையில் 1990 ஆம் ஆண்டில் இருந்து பிள்ளைகள் மற்றும் உரித்தானவர் களின் தொடர்பு இன்றி பொது இடங் களில் தங்கி வாழ்ந்து வருவதாகவும் தெரி விக்கப்படுகின்றது. (ந-11)

## திறப்புவிழா

சைவ வித்தியா விருத்திச் சங்க மண்டபத் திறப்பு விழா நாளை மறு தினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு சைவச் சிறுவர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் சோ. பத்ம நாதன் தலைமை யில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிர தம விருந்தினராக வடமாகாண சபைத் தவிசாளர் சீ.வி. கே.சிவஞானம், சிறப்பு விருந்தினராக நன்னடத்தை சிறு வர்பராமரிப்புசேவை கள் திணைக்கள ஆணையாளர்விஸ் வரூபன் ஆகியோர் கலந்துகொள்வர். (ந)

IELTS A1 B1 B2 KU Education

ஸ்போக்கன் இங்கிலிஸ் வகுப்புகள் Cell: 0777302882

Visit: http://...

K.U Education, No 75, Temple Road, Jaffna. IELTS Centre

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.15

இணுவில் அறிவாலயத்தில் உடல்பருமன், அதன் ஆபத்துத் தொடர்பான ஆரோக்கிய வாழ்வுக் கருத்தரங்கு நாளை சனிக் கிழமை நடைபெற வுள்ளது.

மாலை 3-4 மணி வரை வைத்திய பரி சோதனையும், வைத்திய ஆலோ சனையும் இடம் பெறும். மாலை 4-5.30 மணி வரை கருத்தரங்கு இடம்பெறும்.

அறிவாலயத் தலைவர் அ.குகதாசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பேராசிரியர் கே.தேவராஜா, முதுநிலைப் பேராசிரியர் ஜெபால், மருத்துவர் ஏ.ரகுபதி, உளவள ஆலோசகர் கா.வைத்தீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

* * *

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களின் ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கணித பாட கருத்தரங்கு நாளை சனிக் கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

டி.பி.எம்.எஸ் கணினிக் கல்வி நிறுவனத் தினரும் தென்மராட்சி கல்வி வலயத்தின ரும் இணைந்து நடத்தும் கணித பாட கருத் தரங்கில் மாணவர்களைக் கலந்து கொள் ளச் செய்யுமாறு பாடசாலைகளின் அதிபர் களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ந-9)

## கண்ணீர் அஞ்சலி



நடனத்துறை விரிவுரையாளர் **திருமதி ரஜிதா ராகவனின் கணவர் சிவகுமார் ராகவன் அவர்களின்** திடீர் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (40133) (2.6.3)

தலைவர், விரிவுரையாளர்கள், யாழ். பல்கலைக்கழக நடனத்துறை.

# மரண அறிவித்தல்

## சோமசுந்தரம் இராசையா



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு, அங்களப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் இராசையா (வட்டுக்கோட்டை சின் ராசா) 12.11.2013 செவ் வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான சோமசுந்தரம்-சின்னம்மா தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்ற நடராசா மற்றும் இரத் தினம் தம்பதிகளின் மரு மகனும் புஸ்பமணியின் (சாந்தா) அன்புக் கண வரும், சுதர்சன் (ராசன் -இத்தாலி), சுதர்சினி (சுதா-இத்தாலி), சுரேஷ்குமார் (சுரேஷ்-லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும், புஷ்பலீலாவதி, மகாலிங்கம், நாக ரத்தினம், சரஸ்வதி, பாலசிங்கம், நடராஜலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், புஸ்பநாதன், புஸ்பகாந்தராஜா, புஸ்பகுமாரி, ரவீந்திரன், சண்முகானந்தன், ஸ்ரீரஜனி, பாமினி ஆகியோரின் மைத்துனரும், சுவேதா, நிவேதன், தர்ஷிகா, தரண்ணிகா, தனுஷியன், அபிஷன், அபிராமி, நேகா ஆகியோரின் அன்புப்பேரனும், நகுலாதேவி, கௌரி, நடராசா, தயாநிதி, விஜியா காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் சிவகுமார் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2013) வெள்ளிக் கிழமை மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் கிழக்கு,
அங்களப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
(40130) (3.6.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



### சிவகுமார் இராகவன்

உன்னோடு பழகிய நினைவுகள்
எங்கள் நெஞ்சைவிட்டு
என்றும் நீங்காது நண்பனே!
உந்தன் ஆத்மா சாந்தியடைவதாக!

முனாய் நண்பர்கள்
தங்க. முகுந்தன், கா. பார்த்திபன், த. சுகந்தன், த.அகிலன்
S.P. அருளீசன், இ. கோகுலன், வி.கனகசபாபதி, கு. பிரணவன்

## கண்ணீர் அஞ்சலி



செல்வா குழுமத்தின் செல்வா என்ரப்பிறைஸ் நிறுவனத்தின் முகாமையாளர்

**திரு அழகரத்தினம் ஜெபதீபன்**

அவர்களின் தந்தையார்

### கந்தையா அழகரத்தினம்

அவர்களின் இழப்பினால் துயருற்று கலங்கி நிற்கும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கண்ணீர் அஞ்சலிகளையும் பகிர்ந்து கொள்கின்றோம்.

ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

செல்வா காட்வெயர்ஸ், செல்வா என்ரபிறைஸ்,
செல்வா மோட்டோர்ஸ், சாரா இன்டஸ்ரீஸ் பிறைவேற் லிமிட்டட்,
உரிமையாளரும், ஊழியரும்.

(40110)(8.14)

## மரண அறிவித்தல்

### கந்தையா அழகரத்தினம்



கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு கொக்கன் வளவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அழகரத்தினம் நேற்று (14.11.2 013) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- இராசம்மா தம்பதியரின் அருமை மகனும், சிவந்தமலரின் அன்புக் கணவரும், ஜெகதா (பிரான்ஸ்), சுஜாதா(சுதா, கனடா), அனுஷா, ஜெகதீபன் (முகாமையாளர், செல்வா எண்டபிரைசஸ்), ஜெயராஜ் (இராசன், பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும்,சுபாகரன் (சிவா-பிரான்ஸ்), பத்மவேல் (ராசன் கனடா), மதி ஜனன் (ஜெனா, நொதேண் பவர்), நிறோஜா (நிறோ) ஆகியோரின் பாசமான மாமனும், நிலக்ஷன், தனுஷன், சகானா, சஜின், ஜனன், சானுஜா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் சுதுமலை கிழக்கு அரசடி மானிப்பாயில் உள்ள அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுதுமலை கிழக்கு, அரசடி மானிப்பாய்.** (40065.14.17) **தகவல்: குடும்பத்தினர்.**

## குழந்தையின்மையா? ஆண்மைக்குறைவா? சொரியாசிஸ் நோயா? கவலை வேண்டாம் உயிரணுக்கள் உற்பத்தியின்மை/ குறைவு முழுமையாக குணமடைய உலகிலேயே No:1 வைத்தியம்





**குழந்தையின்மை:** குழந்தையின்மைக்கு ஆண், பெண் இருவரும் காரணமாகின்றார்கள். பெண்கள் 50 சதம் காரணம் என்றால் 40 சதம் ஆண்களே காரணமாகின்றார்கள். 10 சதம் இருவரும் குழந்தை வேண்டாம் என்று இருப்பது. இதில் கணவன்,மனைவி இருவரும் ஒரு நாளைக்கு பலமுறை முழுமையான தாம்பத்திய உறவில் ஈடுபட்டு வந்தாலும் ஆண்களிடமிருந்து வெளியாகும் விந்துவில் 60%க்கும் மேல் உயிரணுக்கள் இருந்தால் மட்டுமே ஒரு பெண்ணை கருத்தரிக்கச் செய்ய முடியும். ஆனால் 60%க்கும் குறைவாக இருந்தால் கருத்தரிக்கச் செய்ய முடியாது. இப்படிப்பட்ட ஆண்களுக்கு உயிரணுக்கள் உற்பத்தியின்மை/குறைவு போன்ற பிரச்சனைகளுக்கு 100 சதம் உத்தரவாதத்துடன் குணமடைய சிகிச்சையளிக்கப்படுகின்றது. இது போன்று பெண்களுக்கு ஏற்படும் கர்ப்பப்பை பிரச்சனை மாதப்பிரச்சனைகளிலிருந்தும் முழுமையாக குணமடைந்து குழந்தை பாக்கியம் பெறுவது உறுதி. பல நடிகைகள் எங்களிடம் சிகிச்சை பெற்று அழகான, இயற்கையான, கட்டுக்கோப்பான உடலமைப்பைப் பெற்றுள்ளனர். இந்த மருந்துகள் அனைத்தும் அரசு ஆய்வுகூடத்தில் பரிசோதனை செய்த பின்பே சிகிச்சைக்குத் தரப்படுகின்றது. எனவே 100 சதம் பக்கவிளைவுகள் கிடையாது. சிறப்புச் சிகிச்சைக்கு அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவர் Dr. G.ஜெகதீஸ்குமார் அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.

**செல்: 0091 9842457673**
**இலங்கைச் செல்: 0754154364**

### ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை

இராமபுரம், சென்னை-89, இந்தியா.
E-mail: sridevisiddha@gmail.com

## துயர் பகிர்கின்றோம்

### வேலுப்பிள்ளை மாரியம்மா



திருநெல்வேலி வேலுப்பிள்ளை அமிர்தலிங்கம் (சீட்டு பூராசா)
அவர்களின் அன்புத் தாயார்
வேலுப்பிள்ளை மாரியம்மா

அவர்கள் நேற்று (14.11.2013) வியாழக்கிழமை இறைபதம் அடைந்த செய்தியறிந்து துயரடைவதோடு அன்னாரின் பிரிவால் துயரடைந் துள்ள அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2013) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கலாசாலை வீதி, குடியேற்றத்திட்டம், 4ஆம் ஒழுங்கை திருநெல்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் என்ற தகவலையும் அறியத் தருகின்றோம்.

**077 8329276** (சி.12282.14.17) **நண்பர்கள்.**

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாதேவி (சின்னக்கா) திருஞானசம்பந்தர்



காளிகோயிலடி சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி (சின்னக்கா) திருஞானசம்பந்தர் நேற்று (14.11.2013) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திருஞானசம்பந்தரின் அன்பு மனைவியும், முகுந்தனின் அன்புத்தாயும், வாமதேவி, கிருஸ்ணமூர்த்தி, சரோஜினிதேவி, புவனேந்திரன், பத்மாவதி, தேவராஜா ஆகியோரின்அன்புச் சகோதரியும், ஜெசிந்தாவின் அன்பு மாமியும், சுவாஸ்திகா, சுஞ்சிகா ஆகியோ ரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2013) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுபூதவுடல்தகனக்கிரி யைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காளிகோயிலடி,**
**சங்கானை.**
**077 2766419,**
**0213001671**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
(அம்மான்) சங்கானை

(சி.12281.14.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிக்குகளின் அதிரடிப் பாய்ச்சலால் போர் மூண்டது சிறிகொத்தாவில்

## பொது பலசேனா ஐ.தே.க. அணிகள் மோதியதால் அல்லோலகல்லோலம்

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிக்கொத்தாவுக்குள் ஞானா சார தேரர் தலைமையிலான பொது பல சேனாவின் பிக்குகள் குழுவினர் நேற்று அதிரடியாக நுழைந்ததால் சிறிகொத்தா வளாகம் பெரும் அல்லோல கல்லோலமானது.

பொது பலசேனா பிக்குகள் குழுவுக்கும், ஐ.தே.கவின் ஐக்கிய பிக்குகள் முன்னணி மற்றும் ஐ.தே.க. ஆதரவாளர்களுக்கிடையே சுமார் ஒன்றரை மணித்தியாலமாக இடம்பெற்ற கடும் முறுகலால் சிறிக்கொத்தாவில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

சிறிகொத்தாவில் 'ஐக்கியத் திறகான சக்தி' அமைப்பு நடத்தும் மனித உரிமைக் கண்காட்சி மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே பொது பல சேனா நேற்று 10 மணியளவில் சிறிகொத்தாவுக்குள் நுழைந்தது.

இதன்போது சிறிகொத்தவின் முன்னால் சுமார் 50 இற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தபோதும், சிறிகொத்தா உள்ளே மேற்படி குழு மோதல் இடம்பெற்ற போது ஒரு சில பொலிஸார் மாத்திரமே உள்ளே வந்து மோதல் நிலையைக் கட்டுப்படுத்த முயற்சி செய்தனர்.

இரு குழுவினரும் சுமார் ஒரு மணிநேரமாக ஒருவரையொருவர் இழுத்துத் தள்ளி, முட்டி, மோதிக் கொண்டனர். சிறிகொத்தாவுக்குள் நுழைய ஞானாசார தேரர் தலைமையிலான பொது பல சேனா குழுவினர் தொடர்ந்தும் முயற்சித்தமையால் கோபமடைந்த ஐக்கிய பிக்குகள் முன்னணியின் பிக்குகளும், ஐ.தே.க. ஆதரவாளர்களும் அவர்களைசிறிகொத்தாவுக்குள் நுழைய இடமளிக்கவில்லை. இதனால் இரு தரப்பினருக்குமிடையிலான முறுகல் நிலை உக்கிரமடைந்தது. சிறிகொத்தாவுக்குள் செல்ல ஞானா சார தேரர் எவ்வளவோ முயற்சித்த போதும், அவரது முயற்சி பலனளிக்க வில்லை.

முறுகல் நிலை தீவிரமடைந்ததையடுத்து அங்கு வந்த ஐ.தே.க வின் தயாகமகே வாலும் நிலைமை யைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை.

இரு தரப்பினரும் ஒருவரையொருவர் தாக்கிக் கொள்ளுமளவுக்கு நிலைமை மோசமடைந்தது. பொது பல சேனாவுக்கு எதிராக ஐ.தே.க. ஆதரவாளர்களின் கடும் எதிர்ப்பு தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்ட மையால், பொது பலசேனாகுழுவினர்அப்படியே வெளியேற்றப்பப் பட்டனர்.

**ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல்**

பொது பல சேனாவுக்கும், ஐ.தே.க ஆதரவாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகலின்போது செய்தி சேகரிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த, அச்சு, இலத்திரனியல் ஊடகவியலாளர்க ளுக்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இடையூறு விளைவித்தனர்.

சிறிகொத்தா வளாகத்தில் ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்தால் அதற்குத் தாம் மன்னிப்புக் கோருகிறார் என்றும் அவர் தெரிவித்தார். (12)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஜனநாயகத்தின்

கல்விச் செயற்பாடுகளை நிறுத்தி வைப்பதற்கு தாம் ஆதரவு தெரிவிக்கவில்லை எனவும் கூறியுள்ளது.

இது தொடர்பில் சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொதுநலவாய மாநாட்டு காலப்பகுதியில் ஒருவார காலத்துக்கு அனைத்துப் பல்கலைக்கழகங்களும் மூடப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக யாழ். பல்கலைக்கழகத்தைத் தொடர்ந்து மூடி வைத்துள்ளனர். இதனைச் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

பொதுநலவாய மாநாடு நடந்தாலும் இங்குள்ள பிரச்சினைகளை வெளிக் கொண்டு வர வேண்டிய தேவை உள்ளது. தமிழர்களின் உணர்வுகளை அடக்குவதற்கே பல்கலைக் கழகம் மூடப்பட்டுள்ளது. ஜனநாயகத்தின் குரலை அடக்கும் செயலே இது. மக்களின் பிரச்சினைகளை வெளிக் கொண்டு வர வேண்டிய தேவை உண்டு.

பல்கலைக்கழகத்தை எந்த விதமான காரணங்களும் இன்றி மூடி வைத்திருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் எதிர்வரும் 18 ஆம் திகதி தொடக்கம் பல்கலைக் கழகத்தை ஆரம்பிக்குமாறும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது அதனை நாம் வரவேற்கின்றோம் என்றுள்ளது. (த-4)

### கமரூனிடம்

டன் பிரதமர் கமரூன் கூறியிருந்தார். இந்த நிலையிலேயே ஜனாதிபதி மஹிந்த நேற்று இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

எந்தவொரு வன்முறை இடம்பெற்றாலும் நாங்கள் உடனடியாகவே யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கின்றோம். நாங்கள் திறந்த மனதுடன் இருக்கின்றோம். நாங்கள் எதையும் மறைக்கவில்லை.

பிரிட்டன் பிரதமரை இலங்கை வருமாறு ஏற்கனவே அழைத்திருந்தேன். அவர்கள் சொல்வதைக் கேட்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். அதே போன்று நாங்கள் சொல்வதையும் அவர்கள் கேட்க வேண்டும். உண்மையில் இலங்கையில் என்ன நடக்கின்றது என்பதை அவர்கள் நேரடியாக வந்து பார்க்க வேண்டும்.

கடந்த 30 வருடங்களாக மக்கள் கொல்லப்பட்டார்கள். மனித உரிமை மீறல்கள் அதிகளவில் நடந்தன. ஆனால் 2009 ஆம் ஆண்டுடன் அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது - என்றார். (த-5)

### மக்ரேக்கு

வாகனச் சாரதியொருவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

வடக்குக்கு வர முற்பட்ட கெலும் மக்ரேவுக்கு எதிராக அனுராதபுரத்தில் ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்தப்பட்டது. இதனையடுத்து பிரத்தியேக வாகனமொன்றில் மக்ரே கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்.

அந்த வாகனத்துக்கான கட்டணத்தைச் செலுத்தவில்லை என்று கொம்பனித் தெரு பொலிஸ் நிலையத்தில் மக்ரேக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸாரே இந்த வாகனத்தை ஒழுங்கு செய்திருந்ததாகவும், இதனால் பொலிஸாரிடம் பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் மக்ரே தெரிவித்தார் என முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

### பிரிட்டன்

தெரிவித் ததாவது:-

இலங்கை ஜனாதிபதி இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டும் என்பதற்காகப் பொதுநலவாய மாநாட்டுக்குப் பிரிட்டன் பிரதமர் கமரூன் அழைக்கப்படவில்லை. பிரிட்டனில் வாழும் தமிழ்ச் சமூகத்தினரின் வாக்குகளைப் பெறுவதற்காகவேவிடுதலைப் புலிகளுடன் நடந்த போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் பற்றிய கேள்விகளை எழுப்புகின்றார் கமரூன்.

பாதுகாப்பு

கெலும் மக்ரே இலங்கை வரும்போது எதிர்ப்புகள் வரும் என்பதை எதிர்பார்த்தேன். அனுராதபுரத்தில் ஆர்ப்பாட்டக் காரர்கள் இடைமறித்துப் போராட்டம் செய்யும் போது கெலும் மக்ரேவைக் கொழும்புக்குத் திருப்பி அழைப்பது தான் பாதுகாப்பு.

**அமைதிக்கு பாதிப்பு**

காணாமற்போனவர்களின் உறவுகள், நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் கொழும்புக்கு வந்தால் அமைதிக்கு பங்கம் ஏற்படும். அதனாலேயே அவர்கள் திருப்பியனுப்பப்பட்டனர் - என்றார். (த-5)

### பொதுநலவாயப்

அதிபருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன் பின்னர் உடுவில் மகளிர் கல்லூரிக்கு அவர்கள் சென்றனர். தொடர்ந்து வலி. வடக்கில் அமைக்கப்பட்டுள்ள வீட்டுத்திட் டங்களை இந்தக் குழுவினர் பார்வையிடுவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. இருந்தும் இறுதி நேரத்தில் குறித்த திட்டத்தை இடைநிறுத்திய இலங்கை அதிகாரிகள், அவர்களை திரும்பவும் கொழும்புக்கு அழைத்துச் சென்றனர்.

இதேவேளை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் முன்பாக வலி. வடக்கு மக்கள் தமது வாழ்வுரிமையை வலியுறுத்தி போராட்டம்நடத்திவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5-21)

### வலி.வடக்கு

வலியுறுத்தி தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் போராட்டத்தில் பங்கு பற்றுவதற்காக மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள பிரதேசங்களிலிருந்து பஸ்களிலேயே மாவிட்டபுரம் வருகின்றனர்.

இவ்வாறு மக்களை ஏற்றிக் கொண்டு புறப்பட்ட பஸ்ஸை நோக்கி ஆணிகள் பொருத்திய கட்டையினால் எறிந்து அதன் ரயர்களை சேதப்படுத்தும் நாசகார வேலையில் இனந்தெரியாதோர் ஈடுபட்டனர்.

இதேபோன்று போராட்டம் முடிந்து சென்று கொண்டிருந்த பஸ் ரயர் மீதும் இவ்வாறானதொரு தாக்குதல் நடத்தப்பட்டது. அத்துடன் குறித்த பஸ்களின் உரிமையாளர்களின் வீடுகளுக்கு சென்ற இனந்தெரியாத தாக்குதலாளிகள் பஸ்களின் கண்ணாடிகளை அடித்து நொருக்கியுள்ளனர்.

அத்துடன் இன்று போரட்டத்துக்கு யாரையும் ஏற்றி இறக்கும் பணியில் தனியார் பஸ்கள் ஈடுபடக் கூடாதென்றும் புல்னாய் வாளர்கள் எச்சரித்துள்ளனர். (த-5-86)

### சொந்த வாழ்வில்

பாலசிங்கம் அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

23 வருடங்களாக சொந்த மண்ணிலிருந்து இடம்பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வருகின்றோம். எங்கள் நிலங்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் அபகரிக்கப்பட்டுள்ளன.

அபிவிருத்தியை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் அபிவிருத்தி என்ற பெயரில் எங்கள் நிலங்கள் இராணுவத் தேவைக்காகவே கையகப்படுத்தப்பட்டுள்ளன. அதனையே எதிர்க்கிறோம்.

போர் நடைபெற்ற காலத்தில் எங்கள் நிலங்களுக்கு செல்ல விடுமாறு உங்களை நாம் கேட்கவில்லை. போர் முடிந்து விட்டது. பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டது என்று தெரிவிக்கின்றீர்கள் அப்படியானால் எங்கள் நிலங்களை யாருக்காகப் பிடித்து வைத்திருக்கின்றீர்கள்.

இலங்கை அரசு உண்மையிலேயே நல்லிணக்கத்தை விரும்புகின்ற அரசாக இருந்தால், எங்களை சொந்த இடங்களில் குடியமர்த்த வேண்டும். எங்களுக்கு எங்களின் வளம் கொழிக்கின்ற நிலமும் கடலும் தான் வேண்டும்.

இதை நாம் முழுதாகப் பெற்றுக் கொள்ளும் வரை எங்கள் போராட்டத்தை நிறுத்தப் போவதில்லை - என்றார்.

**சம்பந்தன் பங்கேற்பு**

இன்றைய இறுதி நாள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்கவுள்ளனர் தலைவர் இரா. சம்பந்தனும் இதில் பங்கெடுக்கவுள்ளார்.

**மீனவர் சங்கங்கள் ஆதரவு**

வடமராட்சி மீனவர் சங்கங்கள், வலி வடக்கு மக்களின் இன்றைய போராட்டத்துக்கு முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளன. (த-5-86)

### சர்வதேசத்

சிங்கை நேற்றுச் சந்தித்துப் பேசினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

இந்தச் சந்திப்புக் குறித்து சம்பந்தன் தெரிவிக்கையில்,

இலங்கையின் தற்போதைய நிலைமை, வடக்கிலுள்ள சூழ்நிலைகள், வலி.வடக்கு, சம்பூர் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் மிக முக்கியமாகக் கலந்துரையாடியதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தச் சந்திப்பு பயனுள்ள வகையில் அமைந்ததாகவும், தமது கவலைக்குரிய விடயங்கள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலை வர்கள் தெரிவித்ததாகவும் வெளிவிவகார செயலர் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக்கையும், இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவினர் நேற்றுச் சந்தித்தனர்.

இதன்போது, இலங்கையின் அனைத்துச் சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு, மனித உரிமைகள் உள்ளிட்ட விடயங்களில் பிரிட்டன் கவனம் செலுத்தும் நீடித்த சமாதானத்தை எட்டுவதற்கு பிரிட்டன் ஆதரவை வழங்கும்.

சுமத்தப்படும் போர்க் குற்றங்கள் குறித்து இலங்கை அரசு வெளிப்படையான, சுதந்திரமான விசாரணைகளை நடத்த வேண்டும்.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகளை மேம்படுத்தவும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கான அரசியல் தீர்வை எட்டவும் - அரசும் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒன்றாக இணைந்து பணியாற்ற வேண்டும் என்று பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் கேட்டுக் கொண்டார். (த-5)

### இன்று

விமானம் மூலம் பலாலியைப் பிற்பகல் 2 மணியளவில் வந்தடைவார். அவருடன் பிரிட்டன் ஊடகவியலாளர்கள் 30 பேர் வரை வருகை தருகின்றனர்.

பலாலியிருந்து விசேட உலங்கு வானூர்தி மூலம் புறப்பட்டு யாழ். துரையப்பா விளையாட்டரங்கை பிற்பகல் 3 மணிக்கு வந்தடையும் கமரூன், உடனடியாக யாழ். பொது நூலகத்துக்குச் சென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், வடக்கு மாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோருடன் கலந்துரையாடவுள்ளார்.

இதன் பின்னர் வலி. வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையத்துக்கும் அவர் பயணம் மேற்கொள்வார். (த-5)

### மன்மோகன்

னார்.

இதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த அவர்,

கொழும்பில் நடைபெறும் மாநாட்டில் கலந்துகொள்வதன் மூலம் இலங்கையில் நடைபெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் சமாதான நடவடிக்கைகள் குறித்துக் கருத்துத் தெரிவிக்க முடியும். இதன் மூலம் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்க வாய்ப்பு உள்ளது என்று கூறினார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றிக்ஸ் மாணவன் சாதனை



யாழ்ப்பாணம், நவ .15
இந்தியாவில் நடைபெற்ற தெற்காசிய கனிஸ்ட மெய்வன்மைப் போட்டியில் ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் டபிள்யூ.சி.எல். லிவிங்ரன் 61.76 மீற்றர் தூரத்தை எறிந்து வெள்ளிப்பதக்கத்தினைப் பெற் றுள்ளார்.

தெற்காசிய கனிஸ்ட மெய்வன்மைப் போட்டியில் பதக்கம் பெற்ற முதலாவது தமிழர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-23)

## யாழ்ப்பாணக் கல்லூரியின் உதைபந்தாட்டம் இன்று

யாழ்ப்பாணம், நவ .15
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆறாவது வருடமாக நடத்தும் ஐந்து பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி பிக்னல் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

மேற்படி போட்டி யாழ். மாவட்டத்தை சேர்ந்த 10 பாடசாலை அணிகள் பங்கு பற்றவுள்ளன. (23)

# போட்டித் திகதி மாற்றம்



யாழ்ப்பாணம், நவ .15
இலங்கைப் பாடசாலை உதைபந்தாட்டச் சம்மேளனம் 13 வயதுப் பிரிவு அணிகளுக்காக 16 ஆம் 17 ஆம் திகதிகளில் நடத்த இருந்த உதைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் வாரத்தில் இடம்பெறவுள்ளது என இணைப்பாளர் பேட்டி பணிஸ்ரர் அறிவித்துள்ளார். (த-23)

# இறுதியாட்டத்துக்கு தெரிவான அணிகள்

யாழ்ப்பாணம், நவ .15
வடமாகாண அமைச்சுக்களுக்கிடையிலான 2013 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டம், ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகளின் இறுதியாட்டத்துக்கு தெரிவான அணிகளின் விவரம்;

ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்துக்கு கல்வி அமைச்சு அணி, உள்ளூராட்சி அணி ஆகியன தகுதி பெற்றுள்ளன.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்துக்கு பிரதம செயலாளர் அணி, உள்கட்டுமான அணி என்பன தகுதி பெற்றுள்ளது. (த-23)

# வடமராட்சி வலயத்தின் 'வர்ண இரவு' விழா இன்று

யாழ்ப்பாணம், நவ.15
வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் நடத்தும் வர்ண இரவு விழா இன்று வெள்ளிக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய கலையரங்கில் வடமராட்சி கல்வி வலயக் கல்விப் பணிப் பாளர் சி.நந்தகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் தேசியமட்டம், வலய மட்டம், விளையாட்டுப் போட்டிகளில் சிறந்த அடைவு மட்டங்களைப் பெற்ற வீர, வீராங்கனைகள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனும், கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-23)

# யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனம் தேசிய ரீதியில் இரண்டாம் இடம்

யாழ்ப்பாணம், நவ.15
இலங்கை தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் (SLIATE) முதலாவது தேசிய விளையாட்டுப் போட்டிகள் கடந்த 7 ஆம், 8 ஆம் திகதிகளில் தெஹிவளை உயர் தொழில்நுட்ப நிறுவன விளையாட்டு மைதானத்திலும் தெஹிவளை ஜயசிங்க விளையாட்டு மைதானத்திலும் இடம்பெற்றிருந்தன.

இந்தப் போட்டியில் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் மாணவர்கள் மூன்று தங்கப் பதக்கங்கள், ஒரு வெள்ளிப் பதக்கம், நான்கு வெண்கலப் பதக்கங்களை வென்று அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தினைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

"-"

**யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் மாணவர்கள் மூன்று தங்கப் பதக்கங்கள், ஒரு வெள்ளிப் பதக்கம், நான்கு வெண்கலப் பதக்கங்களை வென்று**

இந்தப் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வானது எதிர்வரும் 19 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் பழைய மாணவர் சங்கத்தால் நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த)

# யாழ்ப்பாணச் சமரில் மோதவுள்ள அணிகள்



யாழ்ப்பாணம், நவ .15
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்ப்பாணச் சமர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நாளை சனிக்கிழமை ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்.

பி.ப. 3.45 மணி
நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மானிப்பாய் றெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.45 மணி
இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

(த-23)

# மேரிஸ், பாடும்மீன் அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம், நவ .15
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்ப்பாணச் சமர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று வியாழக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி, குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி ஆகியவை வெற்றி பெற்றுள்ளன. முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மானிப்பாய் றெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது. இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# நாளை வீதி ஓட்டப் போட்டிகள் கைதடி விக்னேஸ்வராவில்



யாழ்ப்பாணம், நவ .15
கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் வைர விழாவை முன்னிட்டு அங்கு கல்வி பயிலும் மாணவர்களுக்கான வீதி ஓட்டப் போட்டிகள் ஆண்கள், பெண்கள் எனத் தனித்தனிப் பிரிவாக நாளை சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு பாடசாலை முன்றலில் நடைபெறவுள்ளதாக அதிபர் சி.சிவானந்தன் அறிவித்துள்ளார்.

இதேவேளை மாண வரல்லாத ஏனையோ ருக்கான போட்டிகளும் இதேநேரத்தில் நடைபெற இருப்பதனால் இந்தப் போட்டிகளில் பங்கு கொள்ள விரும்பு கின்றவர்கள் குறிப்பிட்ட நேரத்துக்கு சமூகமளித்து போட்டிகளில் பங்கு கொள் ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-288)

# கபடிப் பயிற்சி முகாம்





யாழ்ப்பாணம், நவ .15
வவுனியா பாடசாலை மாணவர்களுக்கான கபடிப் பயிற்சி முகாம் கடந்த வாரம் வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்றது.

இந்தப் பயிற்சி முகா மில் வவுனியா மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி லலித் ஜெய சேகர மடு கந்தை மகா வித்தியாலய உடற்கல்வி ஆசிரியர் வசந்தகுமார், வவுனியா கபடி பயிற்றுனர் குண சேகர இணைப்பாளர் கீதா அஞ்சனி ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினர். (த-23)

# எவ். ஏ. கிண்ணத்துக்கான ஆட்டம் நாளை மறுதினம்

யாழ்ப்பாணம், நவ .15
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் எவ். ஏ. கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை புத்தளம் சாஹிரா கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணியின் விவரம்;



திருகோணமலை பற்றிமா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தளம் திறிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

(த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சினுக்கு கோவில்



**இதற்காக 6000 சதுரஅடி நிலத்தில் 2 ஆண்டுகளில் இந்த கோயிலைக் கட்டி முடித்து விட்டேன்.
கிரிக்கெட் மட்டை மற்றும் பந்துடன் கோபுரத்தின் உச்சி அமைக்கப்பட்டுள்ளது.**

கிரிக்கெட்டின் சகாப்தம் சச்சின் டெண்டுல்கருக்கு பீகாரில் போஜ்புரி நடிகரும், பாடகருமான மனோஜ் திவாரி கோவில் ஒன்றை கட்டியுள்ளார்.

பீகாரின் கைமூர் மாவட்டத்தில் உள்ள அட்டரவாலியா கிராமத்தில் சச்சினுக்கு அவர் கோவில் கட்டியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், 2011 உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெற்ற போது நம் நாட்டுக்கு இந்தப் பெருமையைப் பெற்று தந்த கிரிக்கெட் வீரர்களுக்கு ஒரு கோயிலை கட்ட வேண்டும் என்று தீர்மானித்தேன். இதற்காக 6000 சதுரஅடி நிலத்தில் 2 ஆண்டுகளில் இந்த கோயிலைக் கட்டி முடித்து விட்டேன். கிரிக்கெட் மட்டை மற்றும் பந்துடன் கோபுரத்தின் உச்சி அமைக்கப்பட்டுள்ளது. உள்ளே கையில் கிரிக்கெட் மட்டையுடன் சச்சின், டோனி மற்றும் யுவராஜ் சிங் ஆகியோரின் முழு உயர பளிங்குச் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஜனவரி மாதம் இந்த கோயிலை திறக்க திட்டமிட்டுள்ளேன் என்று தெரிவித்துள்ளார். (த)

# அணித்தெரிவில் தவறு



இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் 2ஆவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இலங்கை அணியின் அணித்தெரிவில் தவறு காணப்பட்டதை இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இரண்டாவது போட்டி அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற போது இலங்கை அணி இறுதி நேரத்தில் வெற்றிபெற்றிருந்தது. இறுதி பந்துப் பரிமாற்றத்தில் 20 ஓட்டங்கள் தேவைப் பட, அந்த ஓவரை வீசிய ரங்கன ஹேரத்தின் பந்துவீச்சில் அந்த ஓட்டங்கள் பெறப்பட்டிருந்தன.

அந்தப் போட்டி மழையால் பாதிக்கப்பட்டு 23 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட போட்டியாக மாற்றப்பட்டு இடம்பெற்றிருந்தது.

அந்தப் போட்டி மழையால் பாதிக்கப்படும் என்பதைக் கருத்திற் கொண்டு அணித் தெரிவு இடம்பெற்றிருக்க வில்லை எனக் குறிப்பிட்ட அஞ்சலோ மத்தியூஸ், அதன் காரணமாகவே இரண்டு சுழற்பந்து வீச்சாளர்களை அப்போட்டியில் களமிறக்கியிருந்ததாகக் குறிப்பிட்டார். இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடும் போது நியூசிலாந்தின் சுழற்பந்து வீச்சாளர்கள் சிறந்த சுழற்சியைப் பெற்றுக் கொண்டதாகக் குறிப்பிட்ட அஞ்சலோ மத்தியூஸ், இது அந்த ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்கு உதவக்கூடிய ஆடுகளம் என்பதைக் காட்டுவதாகக் குறிப்பிட்டார்.

அம்பாந்தோட்டையில் அந்தப் போட்டிக்கு முன்னதாக சில நாள்கள் மழை பெய்து கொண்டிருந்த போதிலும், போட்டி நாளன்று என்ற நடக்கும் என்பதைத் தங்களால் ஊகிக்க முடிந்திருக்கவில்லை எனக் குறிப்பிட்ட மத்தியூஸ், அதன் காரணமாக 3 வேகப்பந்து வீச்சாளர்களுடனும், 2 சுழற்பந்து வீச்சாளர்களுடனும் களமிறங்க முடிவு செய்ததாகக் குறிப்பிட்டார். (த)

# விளையாட்டில் ஏமாற்றுவதை குற்றமாக்குங்கள்

விளையாட்டில் ஏமாற்றுவதை குற்றவியல் குற்றமாக்க வேண்டும் என இந்திய அணியின் முன்னாள் தலைவர் ராகுல் ட்ராவிட் தெரிவித்துள்ளார். சிறை தொடர்பான பயம் குற்றங்களைக் குறைக்க உதவும் என அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இந்தியாவில் இடம்பெற்ற இந்திய மத்திய அரசின் புலனாய்வுப் பிரிவின் கலந்துரையாடலொன்றில் கலந்து கொண்டே ராகுல் ட்ராவிட் இவ்வாறு தெரிவித்தார்.

தடை செய்யப்பட்ட ஊக்க மருந்துப் பாவனை, வேண்டுமென்றே முழுமையான திறமையை வெளிப்படுத்தாது இருந்தல், சூதாட்டத் தொழிற்துறையுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தல், வயது தொடர்பான மோசடிகள் ஆகிய 4 வகையான மோசடிகள் குறித்துக் கவனஞ் செலுத்தப்பட வேண்டுமென ராகுல் ட்ராவிட் குறிப்பிட்டார்.

விளையாட்டில் இடம்பெறும் குற்றங்கள் குற்றவியல் குற்றங்களாகக் கருதப்படுவதற்கேற்றவாறு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமெனத் தெரிவித்த ராகுல் ட்ராவிட், இவ்வாறான குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு சிறைத் தண்டனை கிடைப்பது, அவர்களுக்கான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதும் உறுதிப்படுத்தப்படவேண்டுமெனக் குறிப்பிட்டார்.

நவீன கால விளையாட்டுக்கள் மாற்றங்களுக்குரிய பகுதியில் இருப்பதாகக் குறிப்பிட்ட ராகுல் ட்ராவிட், மக்களின் நன்மதிப்பை இந்த விளை யாட்டுக்கள் இழப்பதற்கான ஆபத்தை விளையாட்டுக்கள் எதிர்கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார். தற்போதைய நிலையில் வீரர்கள் விளையாட்டு சம்பந்தமான குற்றத்தில் ஈடுபடும் போது அவர்கள் விளையாட்டிலிருந்து தடை செய்யப்படுவது போதிய விளைவுகளை ஏற்படுத்தியிருக்க்வில்லை எனக் குறிப்பிட்ட ராகுல் ட்ராவிட், சிறைத் தண்டனை அதில் மாற்றங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டார். (த)



# இங்கிலாந்தை அச்சுறுத்துவார் மிற்சல் ஜோன்சன்



ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் மிற்சல் ஜோன்சன் எதிரணி வீரர்களான இங்கிலாந்து வீரர்களை அச்சுறுத்துவார் என எதிர்பார்ப்பதாக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் ஷேன் வோர்ன் தெரிவித்துள் ளார்.

ஆஸ்திரேலிய, இங்கிலாந்து அணிகளுக் கிடையிலான ஆஷஷ் தொடரின் முதலாவது போட்டி நவம்பர் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், முதலாவது போட்டிக்கான 12 பேர் கொண்ட குழாமை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள குழாமில் மிற்சல் ஜோன்சன், ஜோர்ஜ் பெய்லி ஆகியோர் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள ஷேன் வோர்ன், மிற்சல் ஜோன்சன் மிகச்சிறப்பான நிலையில் காணப்படுவதாகவும், அவரது தெரிவு சரியானது எனவும் குறிப்பிட்டுள்ளார். இதற்கு முன்னர் 51 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி 205 இலக்குகளைக் கைப்பற்றியுள்ள மிற்சல் ஜோன்சன், இங்கிலாந்தின் ஆதரவாளர்களின் அழுத்தங்களால் ஆஷஷ் போட்டிகளில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்துவதில்லை என்பதோடு, இம்முறை அந்த அழுத்தத்தை எவ்வாறு எதிர்கொள்வார் என்ற எதிர்பார்ப்புக் காணப்படுகிறது. அதிகமான வேகத்துடன் பந்துவீசி அணியில் தனக்கான வாய்ப்பை மிற்சல் ஜோன்சன் ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்ட ஷேன் வோர்ன், இந்த ஆஷஷ் தொடரில் இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர்களை மிற்சல் ஜோன்சன் அச்சுறுத்துவார் என எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

மிற்சல் ஜோன்சன் தற்போது சற்று முதிர்ச்சியடைந்துள்ளதாகக் குறிப்பிட்ட ஷேன் வோண், அணியில் தனது பங்கு என்ன என்பதையும், தனது உடல் தொடர்பாக அவருக்கு போதிய விளக்கம் காணப்படுவதாகவும், எங்கே பந்து வீச வேண்டும் என்பது தொடர்பாக மிற்சல் ஜோன்சனுக்கு விளக்கம் காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா நிதான ஆட்டம்



வரலாற்று முக்கியத்துவமிக்க இந்திய, மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் இந்திய அணி நிதானமாக துடுப்பெடுத்தாடி வருகின்றது

முதல் நாள் ஆட்ட நேர முடிவின் போது தமது முதல் இனிங்ஸ்'க்காக இந்திய அணி 34 பந்து பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 157 ஓட்டங்களை பெற்றுள்ளது. முன்னதாக நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய அணி இந்தியதீவுகள் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 182 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

மேற்கிந்திய அணி சார்பாக டெரன்பவல் 48 ஓட்டங்களையும் ,பிராவோ ,சந்தர்போல் முறையே 29,25 ஓட்டங்களையும் பெற்றனர்.பந்து வீச்சில் ஒஜா 5 இலக்குகளையும்,அஸ்வின் 3இலக்குகளையும் சமி, குமார் ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.இதனை அடுத்து தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 2 இலக்குகளை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்று துடுப்பெடுத்தாடி வருகின்றது. இதனால் 25 ஓட்டங்களால் இந்திய அணி பின்னிற்கிறது.இந்திய அணி சார்பாக முரளி விஜய் 43 ஓட்டங்களுடனும் சகிர் தவான் 33 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேறினர். இந்திய அணி சார்பில் சாதனை மன்னன் சச்சின் 38 ஓட்டங்களுடனும் புஜாரா 34 ஓட்டங்களுடனும் ஆடுகளத்தில் உள்ளனர்.நாளை போட்டியின் 2ம் நாளாகும்.

இதேவேளை இந்த போட்டியில் சச்சின் 153 ஓட்டங்களை பெறுவாரானால் டெஸ்ட் கிரிக்கட் வரலாற்றில் 16000 ஓட்டங்களை பெற்ற பெருமையோடும் தனது சொந்த மைதானத்தில் 1000 ஓட்டங்களை பெற்ற பெருமையோடும் விடைபெறும் வாய்ப்பை பெற்று கொள்வார் என்பது குறிப்பிடத்தக்கது. (400)

# பாகிஸ்தானை தோற்கடித்தது தென்னாபிரிக்கா

ஐக்கிய அரபு இராச்சியத்துக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட 20/20 சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி இலகுவான வெற்றியைப் பெற்றுள்ளது.

டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 98 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

ஆரம்பத்திலிருந்தே இலக்குகளை இழந்த அவ்வணி, 3 இலக்குகளை இழந்து 4 ஓட்டங்களுடனும், 5 இலக்குகளை இழந்து 41 ஓட்டங்களுடனும் தடுமாற்றத்தை வெளிப்படுத்தியிருந்தது. உமர் அக்மல் மாத்திரம் சிறப்பாக ஆடியிருந்தார்.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக உமர் அக்மல் 41 பந்துகளில் 49 ஓட்டங்களைப் பெற்றார். ஷகிட் அப்ரிடி, சொய்ப் மலிக், அப்துல் ரஸாக் மூவரும் முறையே 10, 12, 10 ஓட்டங்களைப் பெற்றதோடு, வேறு எந்த வீரரும் இரட்டைப்பு ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை.

> பாகிஸ்தான் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 98 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக டேல் ஸ்ரெய்ன் 15 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், லொன்வபோ சொற்சொபி 9 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், இம்ரான் தாஹிர் 17 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், றயன் மக்லரன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

99 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப் பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 14.3 பந்துப் பரிமாற்றங்களில் ஒரு இலக்கை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

முதலாவது இலக்கை 16 ஓட்டங்களுக்கே அவ்வணி இழந்த போதிலும், இரண்டாவது இலக்குக்காக பிரிக்கப்படாத 83 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்தன.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக குயின்டன் டீ கொக் 38 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களையும், பப்டு பிளெஸிஸ் 40 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

பாகிஸ்தான் அணி சார்பாக வீழ்த்தப்பட்ட இலக்கை சொஹைல் தன்வீர் வீழ்த்தினார்.

இப்போட்டியின் நாயகனாக தென்னாபிரிக்க அணியின் டேல் ஸ்ரெய்ன் தெரிவானார். (த)

டுபாய் நாட்டில் அதி உயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு

Restaurant, Super market, Hospital போன்றவற்றில் Cleaning ஆக பணிபுரிய அரியதோர் சந்தர்ப்பம். அதிஉயர் சம்பளம், உணவு, தங்குமிடம், மருத்துவம் இலவசம், ஒப்பந்த காலம் 2 வருடம், வயது எல்லை 20-35 வரை. ஆண்/பெண் வீசா கைவசம் உள்ளதால் மூன்று வாரத்துக்குள் பயணமாகலாம். Passport சகிதம் விரையுங்கள்

✱டுபாய் நாட்டில் செல்வந்த வீடுகளில் வீட்டுப் பணிப்பெண்களாகப் பணிபுரிய உடன் தொடர்பு கொள்ளவும்.

எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9 மணி முதல் உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். யாழ்ப்பாணம் Hospital வீதி, ஆசிர்வாதம் ஒழுங்கையில் அமைந்துள்ள Green grass Hotel இல்

(C/7505) (3,6,3) தொடர்பு: LANKA VOICE 077 792 9475

Online Shopping

Shopping இன் புதிய வடிவம்

www. tharsfashion.com

கார்த்திகை 2013 வெற்றியாளர் :

திருமதி நிகிலா சுதர்சன், கந்தரோடை, சுன்னாகம்.

தொடர்புகளுக்கு : ப. தயாபரன் 077 1516013

Special OFFER for 2 Days

15,16 ம் திகதிகளில்

➤ HP LAPTOPS

➤ HP BRANDED PC

➤ HP PRINTERS

hp பிரதிநிதிகள் Nalin காட்சியறைக்கு வருகை தருகின்றனர் அவர்களை சந்தித்து HP தொடர்பான புதிய தொழில் நுட்பங்களையும் மேலதிக தகவல்களையும் பெற்றுக் கொள்ளலாம்

Authorized Business Partner

NALIN

Information Technologies (Pvt)Ltd

தொடர்புகளுக்கு:

195/4 Parameswara junction Palaly road,Jaffna.

0212221121, 0777667975 Facebook/nalin.it

COLLEGE OF IELTS

IELTS

ஆரம்பம் - 16.11.2013

* INDIVIDUAL TRAINING
* UNIQUE TECHNIQUES AND BEST TIPS SPECIALLY IN READING
* WE ARE "IELTS REGISTRATION CENTER FOR BRITISH COUNCIL"
* MORE THAN 10 YEARS EXPERIENCE
* VOCABULARY and GRAMMAR
* EXTENDED SPEAKING PRACTICE

THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5

BRITISH COLLEGE OF ENGLISH

No. 192, Navalar Road, jaffna

(பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக)

Tel 0755435089 0778803887

கணனி, ஆங்கில கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

நடைமுறை வாழ்விற்கு அவசியமான ஆங்கில பேச்சுப் பயிற்சிகள் இலகுவான முறையில் கற்பிக்கப்படும்

குறுகிய காலத்தில் மிகக்குறைந்த கட்டணத்துடன் உங்கள் ஆங்கில பேச்சுத்திறனை வளர்த்துக் கொள்வதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

16.11.2013
18.11.2013 } காலை 10.00 மணி

மேலதிக விபரங்களுக்கு :-021 4 922 741

IIS INSTITUTE OF INFORMATICS STUDIES

இல 100, மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்

தொ.பே. 021 222 2831

MBA

ALDERSGATE COLLEGE

MASTER OF BUSINESS ADMINISTRATION

General / Marketing / Finance / HR / IT

Accredited and UGC approved




Duration : 1 year

Admission Requirements

• A Bachelor Degree - must be from a recognized University or College.
• An Accepted Professional Qualification
• Professional Experience - minimum of 3 years of full time Professional work experience.

IIS CITY CAMPUS

200,Sivan Pannai Road,Jaffna.

Tel: 021 222 8060

Web: www.iis.edu.lk

மேலதிக விபரங்களுக்கு :

021 4 900 900

077 999 2484

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# எங்களின் சொந்த நிலத்தில் படைகள்....



படையினருக்கான திரையரங்கு, விடுதி என்பவற்றை உள்ளடக்கிய ஆடம்பர கட்டடத் தொகுதியை திறந்து வைக்கிறார் பாதுகாப்பு அமைச்சின் செயலர்....



இராணுவத்தின் யோக்கற் தொழிற்சாலை



பலாலியில் உல்லாச விடுதி.....



மக்களின் காணிகளையும் வீடுகளையும் இடித்துத் தள்ளும் இராணுவ கனரக வாகனம்



பொதுமக்களின் ஏக்கர் கணக்கான காணிகளில் இராணுவத்தின் விவசாய நடவடிக்கை...



மக்களின் ஜனநாயகப் போராட்டத்தை குழப்ப முயன்று பொலிஸிடம் ஒப்படைக்கப்பட்டவர்





படைகள் பார்த்து மகிழ நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய விலாசமான திரையரங்கு..

## வலி.வடக்கு: புகைப்பட பதிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# எங்கள் நிலத்தை எங்களிடம் தாருங்கள்

வலி.வடக்கு மக்களின் நிலம் வேண்டி உணவு தவிர்ப்புப் போராட்டம்










Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## போதை செய்த 'சேர்க்கஸ்'

குடிபோதையில் திருடுவதற்கு ஒன்றி மில்லாது சேர்க்கஸ் ஒட்டகத்தை திருடி சென்ற இளைஞர்களைப் பிரான்ஸ் நாட்டு பொலிஸார் கைது செய்துள்ளனர்.
பிரான்ஸின் போர்டியாக்ஸ் நகரத்தில் சுற்றுப் பயணம் செய்த இளைஞர்கள் ஐந்து பேர், அங்குள்ள விடுதி ஒன்றில் மது அருந்திவிட்டு அருகில் உள்ள சேர்க்கஸுக்குச் சென்றுள்ளனர்.
அங்கு ஒட்டக வகையை சேர்ந்த அடர்ந்த ரோமங்களுடன் கூடிய இலாமா என்ற மிருகத்தை கடத்திச் சென்று, டிராம் வாகனத்தில் ஏற்றி தங்களது ஊருக்கும் கொண்டு சென்றுள்ளனர்.
இதனையடுத்து டிராம் வாகனத்தில் பயணித்தவர்கள், இதுகுறித்து முறைப் பாடு தெரிவித்தனர்.
பயணிகள் மட்டுமே பயணிக்க கூடிய இந்த வாகனத்தில் மிருகங்களை ஏற்ற அனுமதியில்லை என அவர் கூறிய தால், இந்த இளைஞர்கள் அந்த இலா மாவை இறக்கி விட்ட னர்.
இதற்கிடையே சேர்க்கஸ் நிர்வாகத்துக்கு மிருகம் காணாமல் போனது தெரியவந்தது. அதன்பேரில் குறித்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். மிருகத்தின் மீது கொண்ட பாசத்தாலும், போதையாலும் தெரியாமல் செய்து விட்டதாக இளை ஞர்கள் தெரிவித்துள்ளனர்.



## கயிற்றில் நடந்து நயாகராவை கடந்த மனிதர்



ப்ரோன்ஸுவ பொலொடன். பெரி தும் பரிச்சயமில்லாத இவர்தான் முதன்முதலில் கயிறு மூலம் நயாகரா நீர் வீழ்ச்சியைக் கடந்து சாதனை புரிந்தவர்.
அவர் இந்தச் சாதனையை 1859 ஆம் ஆண்டு ஜுன் மாதம் நிகழ்த் தினார். நீண்ட காலமாக நயா கராவை கடப்ப தற்கான முயற்சிகளை மேற் கொண்ட அவர், 1859 ஆம் ஆண்டு அதனைக் கடக்கும் போது பல அரிய செயல் களை செய்துகாட்டினார். அதா வது அவர் கடக்கும் போது தனது முகாமையாளரை முது கில் சுமந்தவாறு கடந்தது மட்டுமல்லாது, சிறிது நேரம் கண்களை மூடியும், ஒற்றைக் காலில் பயணித்தும் தனது அதீத திறமைகளை வெளிக்காட்

## தம்பதிகளை கவரும் 'பபிள் ரூம்'





இன்றைய காலகட்டத்தைப் பொறுத்த வரையில் மக்கள் நாளுக்கு நாள் புதுமையான ஒன்றையே எதிர்பார்க் கின்ற னர். அந்த வகையில் பிரான்ஸில் மக்களிடையே வேகமாக பிரபலம டைந்து வருகிறது Bubble Rooms விடுதி.
தென்கிழக்கு பிரான்ஸின் கடற்கரையில் இருந்து 10 மைல் தொலைவில் ஒரு விடுதி உள்ளது.
அதன் சிறப்பம்சம் என்னவென்றால், இங்கு உள்ள அறைகள் எல்லாமே பிளாஸ்ரிக்கால் ஆனவை, அவை பார்ப்பதற்கு குமிழிகள் போன்றே உள் ளன. ஒவ்வொரு அறைக்கும் டெலெஸ் கோப் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இரவு நேரங்களில் நட்சத் திரங்களின் அழகை கண்டு ரசிக்கலாம். தம்பதிகள் மத்தியில் பிரபலமடைந் துள்ளது இந்த விடுதி. குறிப்பாக தங்கள் காதலை வெளிப் படுத்த சிறந்த இடமாக திகழ்வ தாகத் தெரிவிக்கின்றனர்.



Triumph
THE MAKER OF LINGERIE SINCE 1886

நவம்பர் 15 நவம்பர் 16 நவம்பர் 17 தினங்கள்

அனைத்து Triumph
கொள்வனவுகளுக்கும்
20%
சேமிப்பை
அனுபவியுங்கள்*

*நிபந்தனைகளுக்கு உட்படும்

பின்வரும் முன்னணி நவநாகரீக ஆடை விற்பனையகங்களில்
Sothy Tex - Jaffna | Vani Tex - Jaffna | Linganathan Tex - Jaffna | Sallamuthus Tex - Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளை இல்லாமல் பூமிக்கு வந்த புதிய மனிதன் ரெக்ஸ்'



மருத்துவ உலகின் புரட்சியாக மனித உடலில் பாதிக்கப்பட்ட பாகங்கள் பலவற்றிற்கு செயற்கையான முறையில் கருவிகள் வைத்து இயக்கப்படுகின்றன. அத்தகைய செயற்கை உடற் கருவிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து ஓர் உருவம் தந்தால் எப்படி இருக்கும் என்ற விஞ்ஞானிகளின் கற்பனைக்கு கிடைத்த வடிவம்தான் 'ரெக்ஸ்'.

எந்திரன் படத்தில் 'சிட்டி'யை அறிமுகப்படுத்தி விஞ்ஞானி ரஜினி வசீகரன் பேசும் போது இப்படியெல்லாம் நடப்பது சாத்தியமா என்ற ஆச்சரியம் தோன்றியிருக்கும். ஆனால், தற்போது அதனை மெய்யாக்கி இருக்கி றார்கள் விஞ்ஞானிகள்.

மருத்துவ உலகின் புரட்சியாக மனித உடலில் பாதிக்கப்பட்ட பாகங்கள் பலவற்றிற்கு செயற்கையான முறையில் கருவிகள் வைத்து இயக்கப்படுகின்றன. அத்தகைய செயற்கை உடற்கருவிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து ஓர் உருவம் தந்தால் எப்படி இருக்கும் என்ற விஞ்ஞானிகளின் கற்பனைக்கு கிடைத்த வடிவம்தான் 'ரெக்ஸ்'.

அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் உள்ள தேசிய அருங்காட்சிய கத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள, செயற்கை உடல் உறுப்புகளாலான மனிதனுக்கு விஞ்ஞானிகள் வைத்த பெயர் தான் 'ரெக்ஸ்'. மூன்று மாத கால அவகாசத்தில் 17 நிறுவனங்கள் வழங்கிய உடல் உறுப்புகளைப் பொருத்தி உருவாக்கப் பட்ட ரெக்ஸ் ஆறடி உயரம்.

எந்திரனில் சிட்டியின் முக அமைப்பு விஞ்ஞானி வசீகரனை ஒத்திருப்பது போல, ரெக்ஸின் முக அமைப்பு சூரிச் பல்கலைக் கழக உளவியலாளர் பெர்டாய்ட் மியேரை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. இது பாதிக்கப்பட்ட நோயாளிக்கு பொருத்தப் படும்





உடல் பாக அமைப்பைப் போன்றே நுரையீரல், சிறுநீரகம், மண்ணீரல், கணையம் போன்றவை செயற்கையாக ரோபோடிக் இயந்திர முறையில் ரெக்ஸுக்கு பொருத்தப் பட்டுள்ளது.

செயற்கை இதயம் மூலம் செயற்கை ரத்தம் உடல் முழுவதும் எல்லா பாகங்களுக்கும் சென்று வருவதற்கு வசதியாக 'பம்பிங்' செய்யப்படுவது இதன் சிறப்பம்சம். செயற்கைக் கண் கள் செயற்பட விழித்திரையில் மைக் ரோசிப்புடன் இணைந்த கமரா, அணிந் திருக்கும் கண்ணாடி வழியே காட்சி களைப் படம் பிடித்து அனுப்புகிறது.

சிறுநீரகம் இயக்குவதற்காக 'டயாலிசிஸ்' சுத்திகரிப்புச் சாதனம் பொருத் தப்பட்டுள்ளது. இது மற்ற உறுப்புக ளைக் காட்டிலும் சிறப்பாகச் செயற் படுகிறது என்பது தான் முக்கிய விடயம். கைகளின் இயக்கம் கிட்டத் தட்ட சராசரி மனிதனின் அசை வைப் போலவே இருக்கிறது எனச் சொல்லி வியக்கிறார்கள் ரெக்ஸைப் பார்த்து செல்லும் பொதுமக்கள்.

அதேபோல் ரெக்ஸின் உடல் இயக்க செயற்பாடுகளும் ஏறக்குறைய 60 தொடக்கம் 70 சதவீதம் மனித னைப் போலவே அமைந்துள்ள தாம். ஆயினும் சரிமான அமைப்பு, கல்லீரல், தோல் போன்ற பாகங்கள் இல்லை. அதேபோல், மிக முக்கியமாக உணர்வு களைத் தூண்டி செயற்பட வைக்கும் மூளையும் இல்லாதது தான் சராசரி மனிதர்களிலிருந்து ரெக்ஸை வித் தியாசப்படுத்துகிறது.

# வறுமையில் வாடும் இளவரசி



மியன்மாரை ஆட்சி செய்து வந்த இளவரசி தற்போது வறுமையில் வாடிக் கொண்டிருக்கிறார்.

மியன்மாரில் மன்னர் ஆட்சி இருந்த காலகட்டத்தில், திபா என்பவர் கடைசி மன்னராக இருந்தார். ஆங்கிலேயர்களின் ஆட்சியின் போது கடந்த 1885 ஆம் ஆண்டு இவரது அதிகாரம் பறிக்கப்பட்டது. அதன்பின்னர் நாடு சுதந்திரம் அடைந்தபின்னர் மியன்மாரில் இராணுவ ஆட்சி ஏற்பட்டது. அத்துடன் மன்னர் பரம்பரை ஒழிக்கப்பட்டு அவர்களது குடும்பத்தினர் சாதாரண குடி மகன்களாக்கப்பட்டனர்.

அந்த வழியில் வந்த கடைசி இளவரசியாக ஹிடெக் சு பாயா ஜி என்பவர் இன்னும் உயிர் வாழ்கி றார், அவருக்கு 90 வயது ஆகிறது. தற்போது யங்கூன் நகரில் ஒரு குடிசை வீட்டில் வறுமையில் வாழ் கிறார். 60 ஆண்டுகளுக்கு முன்பு இளவரசியாக வலம் வந்த அவரைத் தற்போது அயல் வீட்டாருக்குக் கூட யார் என்று தெரிய வில்லை.

ஓரளவு வசதியாக வாழ்ந்த தான் குடும்பச் சண்டை காரணமாக பரம் பரை வீட்டை இழந்து தற்போது குடிசையில் வாழ்வதாகவும், இள வரசியாக வசதியுடன் வாழ்ந்ததை நினைத்து பொழுதை கழிக்கின்றேன் என்றும் கூறு கின்றார் சு பாயா ஜி.



# 'அருவா மீசை' போட்டி!



மீசை என்றால் நம்மில் பலருக்கு உடனடியாக ஞாபகம் வருவது வீரப்ப னும், விருமாண்டியும் தான். ஆனால் அதையும் தாண்டி சிலர், கற்பனை செய்து கூட பார்க்க முடியாத அளவிற்கு வித்தியாச மாக மீசை வைத்திருக்கிறார்கள். அப்படிப் பட்டவர் களுக்காக நடத்தப் பட்டதுதான் இந்த வித்தியாசமான மீசைப் போட்டி....

ஜேர்மன் நாட்டில் ஸ்டட்கார்ட் அருகே உள்ள லென்ஃபெல்டன் நகரில் அழகிய மீசை வைத்திருப்பவர்களை தேர்வு செய்யும் சர்வதேச போட்டி நடைபெற்றது.

1990ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட இந்தப் போட்டியில், இந்த வருடம் சுமார் 20 நாடுக ளில் இருந்து 300 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். போட்டியாளர்கள் சிறிதும், பெரிதுமாக மிரட்டல் மீசைகளுடனும் பல்வேறு அலங்காரங்களுடனான மீசையுடனும் கலந்து கொண்டனர். உடல் திறனை வெளிப்படுத்தும் போட்டி, உடல் அழகை வெளிப்படுத்தும் போட்டி என மற்றைய போட்டிகளில் இருந்து இப்போட்டி வேறுபட்டது. வித்தியாசமாக அழகிய மீசை வைத் திருப் பவர்களை தேர்வு செய்வதற்காக நடத்தப்பட்ட இந்த போட்டி, பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது.

# வித்தியாசமான 100ஆவது பிறந்தநாள்



ஒவ்வொருவரும் தமது பிறந்தநாளை வித்தியாசமாகக் கொண்டாட வேண்டும் என விரும்புவார்கள்தான். அந்த வகையில் அமெரிக்க தாத்தா ஒருவர் தனது 100 ஆவது பிறந்த நாளை எப்படிக் கொண்டாடியுள்ளார் எனப் பாருங்கள். அவர் தனது 100ஆவது பிறந்தநாளை 13 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து பரசூட்டில் குதித்து கொண்டாடியுள்ளார்.

அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியாவைச் சேர்ந்த வெர்னான் மேனார்டு என்ற முதியவர் கார் விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறார்.

பரசூட் வீரரான வெர்னான் அண்மையில் தனது 100ஆவது பிறந்த நாளைக் கொண்டாட [illegible] வெர்னானின் 100ஆவது பிறந்தநாளை வித்தியாசமாகக் கொண்டாட விரும்பினார் கள் அவரது நண்பர்கள். அதையடுத்து பிறந்த தினத்தன்று கலிபோர்னியாவில் உள்ள பெர்ரிஸ் நகரில் விண்ணில் பறந்த விமானத்தில் 13 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து பரசூட் மூலம் தரையில் குதித்து சாதனை படைத்தார் வெர்னான். வெர்னானுடன் பயிற்சியாளரும் உடன் குதித்து உதவி புரிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org